# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

52



கலை இலக்கிய மாத சஞ்சிகை

தை- 2013

80/=



# நதியினுள்ளே...

## கவிதைகள்

- பா.இரகுவரன்
- கேவல் நப்லி
- சபா.ஜெயராசா
- மூதூர் மொகமட் ராபி
- அ.பௌநந்தி

## கட்டுரைகள்

- சி. ஜெய்சங்கர்
- கி.நடராஜா
- ஆபூர்வன்
- அந்தனிஜீவா
- முருகபூபதி
- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்




பேசும் இதயங்கள்

கலை இலக்கிய நிகழ்வுகள்

அட்டைப்படம் - நன்றி இணையம்

## சிறுகதைகள்

- முருகேசு ரவீந்திரன்
- சிலாபம் திண்ணனூரான்
- டென்மார்க் ஜீவகுமாரன்
- தெணியான்



## நேர்காணல்

இ.சு.முரளிதரன்

## குறுநாவல்

ஆனந்தி

# ஜீவநதி

**2013 தை இதழ் - 52**

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- ஆசிரியர்


# ஜீவநதி

(கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன்-

## ஜீவநதி வாசகர்கள் அனைவருக்கும் ஜீவநதியின் புத்தாண்டு, தைப்பொங்கல் வாழ்த்துகள்

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

- திருக்குறள்

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.


- திருக்குறள்

காணாதான் காட்டுவான் தான் காணான் காணாதான்
கண்டானாம் தான் கண்ட வாறு.

- திருக்குறள்

சி.ஜெய்சங்கர்

# தமிழகக் கூத்து மரபுகளில் மதுரை வீரன்



தமிழகக் கூத்துக்களில் மிகப்பெரும்பாலும் பாரத மற்றும் இராமாயணக் கூத்துக்களே கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆய்வுகளிற்கும் உட்படுத்தப் பட்டிருக்கின்றன. இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டார் ஆய்வுகளுக்கும் பொருந்தும்.

தேசிய அடையாளத்துடன் கூடிய நாடக அரங்க உருவாக்கம் "வேர்களுக்குத் திரும்புதல்" என்னும் சுலோகங்களை முன்வைத்து தேசியளவில் முன்னெடுக்கப்பட்ட நவீன நாடக முயற்சிகளிலும் பாரத, இராமாயணக் கூத்துக்களே மிகப்பெரும்பாலும் உரையாடலுக்கும், நவீன நாடக உருவாக்கங்களிற்கும் உரிய வளங்களாகவும், விடயங்களாகவும் எடுத்தாளப் பட்டு இருக்கின்றன. எடுத்தாளப்பட்டும் வருகின்றன.

கிராமத் தெய்வங்களாகவும் நாயகிகளாகவும் அத்தெய்வச் சடங்குகளில் ஆடப்படும் கூத்துக்களின் நாயகர்களாகவும் உள்ள ஆளுமைகளின் கதைகளிலான கூத்துக்கள் மிகப் பெரும்பாலும் நாடக அரங்கு மற்றும் புலமைத்துவ உரையாடல்களுக்குள்ளும், செயற்பாடு களுக்குள்ளும் கொண்டுவரப்படவில்லை என்பதும் கவனத்திற்குரியதாகிறது. இது ஏன் என்பதும் உரையாடலுக்குரியது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மக்கள் இயக்கங்களை அணிதிரட்டுவதிலும் வளர்த்தெடுப் பதிலும் கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து பயன்படுத்திய திராவிட இயக்கங்களும், இன்றளவும் பயன்படுத்தி வருகின்ற இடதுசாரி இயக்கங்களும் முறையே பகுத்தறிவுச் சிந்தனையையும் அறிவொளி இயக்கத்தின் சாராம்சமான விஞ்ஞான முறைமையை யும் கொள்கைகளாக வரித்துக் கொண்டிருந்ததன் காரணமாக நம்பிக்கை சார்ந்த சடங்குகளுடன் தொடர்புடைய கூத்துக்கள் பிற்போக்கானவையாக, காலத்திற்கு ஒவ்வாதவையாக கைவிட்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆயினும் இடதுசாரி இயக்கங்கள் கூத்துக்களின் அரங்கக் கூறுகளை உள்வாங்கி நவீன அரங்கங்களின்வழி மக்களியக்க கலைச் செயற்பாடு களை முன்னெடுத்து வருகின்றமை கண்கூடு பகுத்தறிவு வாதிகளான திராவிட இயக்கத்தினர் சினிமா, நாடகம் போன்ற நவீன வெகுசன ஊடகங் களின் வன்மையில் மிகப்பெரும் அக்கறையினை வெளிப்படுத்தினர்.

ஆனால் கிறிஸ்த்தவத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்ட மக்களை தொடர்ந்தும் புதிய மதத்தில் தக்கவைத்திருக்க திருச்சபையினர் கூத்தைப் பயன்படுத்தியிருந்தனர். மக்களை ஒன்றிணைக்கும் சமுதாய அரங்குகளாக இவை திகழ்ந்து வருவதை வெளிப்படையாகவே காண முடியும். அச்சு ஊடகங் களின் பெருக்கமின்மை, சினிமாவின் அறிமுகமின்மை காரணமாக சமூக மட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கூத்து தெரிவுக்குள்ளாகி இருக்கிறது என்பதை வாதத் திற்கு எடுத்துக் கொண்டாலும் அது சமூகமயப்பட்டு பண்பாட்டுள் வேர்விட்டு நிலைத்திருப்பதன் காரணம் அது நம்பிக்கை சார்ந்த விழாவுடனும் நம்பிக்கை சார்ந்த விடயங்களுடனும் தொடர்புபட்டிருப்பதாகும்.

ஆயினும் கத்தோலிக்கக் கூத்துக்களில் இருந்து கோமாளிப் பாத்திர நீக்கம் அல்லது அது நீர்த்துப் போகச் செய்யப்பட்டமை என்பது அதிகாரத் திற்கு எதிரான சமூக எதிர்ப்புணர்வு மௌனமாக்கப் படுவதுடன் தொடர்புபடுவதாகவே அவதானிக்கப் படுகிறது. இது "நவீனப்படுத்தல்", "செம்மைப்படுத்தல்" எனப்பட்ட மேடைக்குரிய வகையில் பாரம்பரியக் கூத்துக்களினை "நாகரிகப்படுத்தலில்" நீக்கப்பட்ட வற்றுள் அடங்குவதாக இருப்பதும்; கிராமங்களில் நடைபெறும் கூத்துக்களில் கோமாளி நாகரிகமற்ற வகையில் ஆபாசமாகப் பேசுபவனாக இருக்கிறான் என்ற பெயரில் தணிக்கைக்குள்ளானவனாக, தடை செய்யப்பட்டவனாக இருப்பதும் இதுவரையில் ஆராய்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களாகவே

இருப்பதும் கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டியது.

மேலும் வழிபாட்டுத் தெய்வக் கதைகளைக் கொண்ட கூத்துக்கள் அவற்றின் வாய்மொழிக் கதைகளில் இருந்தும் மாறுபட்டதாக இருப்பதையும் அவதானிக்க முடியும். இக்கதைகள் மிகப்பெரும்பாலும் சாதி மாறிக் காதலித்ததால், திருமணம் செய்து கொண்டதால் படுகொலை செய்யப்பட்டவர்களின் கதை களாகவே இருக்கின்றன. ஆனால் ஆடப்பட்டு வருகின்ற கூத்துக்களில் பிறப்பால் உயர்ந்த சாதிக்குரியவர் களாகவும், வளர்ப்பாலேயே தாழ்ந்த சாதிக்குரியவர் களாகவும் இருந்ததாகவும் சிக்கல் தீர்க்கப்படும் கொங்குப் பகுதியில் ஆடப்பட்டு வருகின்ற "மதுரை வீரன் கூத்து" இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

அடையாள அரசியல் உரையாடலுக்குரிய தாகவும், அரசியல் செயற்பாட்டுக்குரியதாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இன்றைய காலகட்டத்தில் நாட்டார் வழிபாட்டுத் தெய்வ சடங்குகளுடனும் (உதாரணம் மதுரை வீரன்) தொடர்புடைய கூத்துக் களையும் அடையாள அரசியலை மக்கள் மயப் படுத்தவும், செயற்பாடாக முன்னெடுக்கவும் வலுவான தொரு பண்பாட்டு அரசியல் நடவடிக்கையாக மக்கள் பங்கெடுக்கும் வருடாந்த விழாக்களை அமைத்துக் கொள்வது பொருத்தமானதாக இருக்கும் இந்த வகையில் வன்னிய புராணத்தை வன்னியர் கூத்தாக ஆடும் மரபு உதாரணமாக காணப்படுகின்றது. இந்நிலையில் சடங்குகளுடனும்; சடங்குசார் ஆற்றுகை களுடனும் கூடிய நம்பிக்கை என்பது மயக்கந்தரும் ஒன்றாக அறிவுப்பூர்வமற்றதாக அல்லது அறிவார்ந்த நிலைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறதா? அல்லது அதற்கு சமூக அரசியற் பரிமாணம் இருக்கிறதா என்பது உரையாடப்பட வேண்டியதாகும். ஏனெனில் உள்ளூர், அறிவுத் திறனுக்கும் நம்பிக்கைக்கும் உள்ள தொடர்பு தவிர்க்கப்படக்கூடியதா என்பதும் கேள்விக்குரியதாகும்.

வாய்மொழி வழக்காறுகளை சமூகப் பண் பாட்டு அரசியல் வரலாறுகளாக எடுத்துக் கொள்ளும் அடையாள அரசியல் இயக்கங்கள் மக்களை அரசியல் மயப்படுத்துவதற்கான ஊடகமாக, கூத்துக்களை பயன் படுத்துவதற்கான முன்னுதாரணமாக, கத்தோலிக்க கூத்து மரபின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் அதன் இயக்கத்தையும் எதிர்கொண்ட சவால்கள், நீக்கங்கள், தடைகள் என்பவற்றையும் விமரிசன நோக்குடன் கவனத்திற்கும், கற்றலுக்கும் உட்படுத்துவதும் பயனுடையதாக இருக்கும். மைய அதிகாரம் நீங்கிய சமூகப் பண்பாட்டை உருவாக்குவதில், மக்கள் திரளின் கலையான கூத்தினை மீளுருவாக்கம் செய்து பயன் படுத்துவது அர்த்தமுடையதாக இருக்கும். ஏனெனில் கூத்து என்பது நவீன கலைகளைப் போல தனித்த கலைஞர்களதும் படைப்பாளர்களதும் படைப்பாக்கக் கலையல்ல. அது மக்கள் பங்குபற்றலுடன் கூட்டுரு வாக்கம் பெறும் தொடர் கலைச் செயற்பாடாகும்.

மக்களுக்கான கலைவழித் தொடர்பாடலை சிறப்புத் தகுதிகள் வாய்ந்த தனியாளான கலைஞர்கள் மூலம் நிகழ்த்தும் நவீன கலை தொடர்பாடலுக்கு மாற்றாக மக்கள் மூலம் மக்களுக்கு நிகழ்த்தப்படும் கலைத் தொடர்பாடலாக அமைத்துக் கொள்வது மக்கள்மயப்படுத்துவதை ஏதுவாக்கும். இத்தகைய கலைச் செயற்பாடுகள் தவிர்க்கப்படுகின்றன என்றால் அது மக்கள் பங்கு பற்றலைத் தவிர்க்க விரும்பும் அதிகார மையத்தின் விருப்பின்பாற்பட்டதாகவே இருக்கும் என்பதும் மறுக்க முடியாததாகும்.

இன்று வரை நிலவிவரும் பாரத விழாக் களும், அதிலாடப்படும் பாரதக் கூத்துக்களும் அவை எந்த நோக்கத்திற்காக தோற்றுவிக்கப்பட்டனவோ அதன் கூறுகளை இன்றும் நிறைவேற்றி வருகின்றன வென்றால் அவை மக்கள்மயப்பட்டிருப்பதும், வருடாந்த விழாக்களுடன் தொடர்புபட்டிருப்பதும் காரணமாக இருப்பதை அவதானிக்க முடியும்.

எனவே உள்ளூர் வழக்காறுகளை, நவீன சமூக அரசியல் பண்பாட்டை கட்டியெழுப்புவதற்கான மூலங்களாகச் செயற்பாடுகளினை முன்னெடுப்பதை வரலாறுகளாகவும், ஆய்வுகளாகவும் எழுத்துக் களிலும், அச்சிலும் மாத்திரம் எல்லைப்படுத்திக் கொள்வது பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இதிகாச பண்பாட்டு` விழுமியங்களை கேள்விக்குட்படுத்தி தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் மாற்றுச் சமூகப் பண்பாட்டுப் பார்வையை உருவாக்கிய திராவிட இயக்கச் செயற்பாடுகளின் செல்வாக்கு வலுவிழந்து போனதற்கு காரணம் அவை வருடாந்த மக்கள் விழாக்களுடன் இணைப்புப் பெற்றிருக்காமை என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் மக்கள் சடங்குகளுடன் விழாக் களுடன் தொடர்புடைய மதுரை வீரன் போன்ற கூத்துக்கள் அதன் மேல்நிலையாக்கக் கூறுகள் போன்றவை மக்கள் பங்கு பற்றலுடனான செயல்மைய உரையாடல்கள் மூலமாக மீளுருவாக்கம் செய்யப் படுவது, அடையா அரசியல் இயக்கங்கள் தமக்கான பண்பாட்டு அரசியலை மக்கள் மயப்படுத்துவதற்கான வலுவான முறைமையாகக் கொள்ளத்தக்கது.

ஏனெனில் குடிமக்கள் ஊடகவியல் (CITIZEN'S JOURNALISM) குடிமக்கள் சினிமா (CITIZEN FILM) என்பவை பிரபல்யமடைந்தும் அதுகண்டு ஆச்சரியமடைந்தும் இருக்கின்ற 21 ஆம் நூற்றாண்டில் மக்கள் கலை என்பதும் பண்பாட்டுப் பாரம்பரியமாக இருக்கின்ற தமிழர் மரபுகளில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மீது கொண்டுள்ள அதீத கவனமும்; இன்னமும் மதுரை வீரன் கூத்து, மதுரை வீரன் நாடகம், மதுரை வீரன் சடங்கு விழா என மக்கள்மயப்பட்ட பண்பாட்டு நிகழ்வுகள் மீதான கவனிப்பின்மை என்பதும் புலப்படுத்தும் அரசியல் எதுவாகத்தான் இருக்க முடியும்.



# துளிர்ப்பின் வாட்டம்

முருகேசு ரவீந்திரன்

யாழ் நகர வீதிகளூடாக அந்த றோசா மினிபஸ் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. ஓட்டுமடம் சந்தியை தாண்டும்வரை இப்படி ஊர்ந்து போகும் என்பது அவனுக்குத் தெரியும். அறிவு இந்த வழியால் அடிக்கடி பஸ்ஸில் பயணிக் கிறான். ஓட்டுமடம் சந்தியை அடைவ தற்குள் எவ்வளவு பேரை ஏற்றமுடியுமோ அவ்வளவுக்கு ஆட்களை ஏற்றி விடுவார்கள். மினிபஸ் ஒரு பக்கம் பிதுங்கி வழிந்தவாறுதான் செல்லும். இந்த விடயத்தில் சாரதியும் நடத்துனரும் மனிதாபிமானம் பார்ப்பதில்லை. அவர் களுக்கும் பணம் வேண்டும். பணம் அவர்களுக்கு மட்டுமா தேவைப்படுகிறது. அது எல்லோருக்கும் தேவையானது. அதற்காக இப்படியா நடப்பது என இவன் எண்ணுவதுண்டு.

அறிவுக்கு சத்திரசிகிச்சை செய்த இடத்தில் வலித்தது. அவன் இருக்கையின் பின்பக்கம் தலையணையை வைத்து அதன் மீது சாய்ந்திருந்தான். மூலவியாதிக்கான சத்திரசிகிச்சை சிறியதாக இருந்தாலும் வேதனை அதிகமாக இருந்தது.

மூல வியாதி பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறான். மூலக்கொதியர்கள் பற்றியும் அறிந்திருக்கிறான். அறிவுக்கு அந்த வியாதி வந்த போது தான் மூலக் கொதியை உணர்வுபூர்வமாக அறிய முடிந்தது. தலையிடியும் காய்ச்சலும் வந்தால் தானே தெரிகிறது.

மரணம் எப்படியிருக்கும் என எவராலும் சொல்ல இயலாது. அதை அநுபவித்தால் தான் அது பற்றித் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அந்த அநுப வத்தைப் பெற்றவர்கள் எவராலும் அது பற்றி எழுத முடியாது. மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள இயலாது. அதனால்தான் சாவின் அனுபவம் எனச் செத்துப் பிழைத்தவர்களின் அநுபவத் தொகுப்பாக சில நூல்கள் வெளியாகியுள்ளன. அதில் எந்தளவுக்கு உண்மை இருக்கும் என யாருக்கும் தெரியாது. சிலவேளை இறப்புக் குறித்த அனுபவம் வேறுவிதமாகவும் இருக்கலாம் என அறிவு நினைத்தான்.

மினிபஸ் ஓட்டுமடம் சந்தியைத் தாண்டியபோது "கோம்பயன் மணல்" சுடலை தெரிந்தது. சுடலையில் நின்ற மரங்களிலே ஆடு, மாடுகளின் நஞ்சுக் கொடிகள் அடங்கிய பைகள் கட்டப்பட்டிருந்தன. யாழ் நகரில் வாழ்ந்தோரில் பலர் கடைசியாக இங்கே தான் வந்திருக் கிறார்கள். கொம்பயன் மணல் சுடலையில் தான் அவர்கள் ஒரு பிடி சாம்பலாகியிருக்கிறார்கள். இந்த இடத்தைத் தாண்டி வீதியில் பயணிக்கும் பேதெல்லாம் அறிவு வாழ்வின் நிலையாமை பற்றி யோசித்திருக்கிறான். ஆனால் அதன் பின்பு அதுபற்றி சிந்திப்ப தில்லை. இதைத்தான் எம்மவர்கள் சுடலை ஞானம் என்கிறார்கள்.

பஸ்ஸிலே சனநெருக்கமாக இருந்தது. அருகில் நின்றவளின் இடுப்புப்பகுதி அறிவின் இடப்பக்கத் தோளை நெருக்கியது. அந்த நெருக்கத்தை அவன் இரசித்தான். அவன் அந்த நெருக்கத்துக்குரியவளின் முகத்தைப் பார்த்தபோது

"சொறி" எனச் சொன்னாள்.

"பரவாயில்லை" என்றவன் அப்படிச் சொல்லியது தவறோ என எண்ணினான். அவளின் நெருக்கம் அவனுக்கு இன்பம் தந்தது. சத்திரசிகிச்சையின் வேதனை அவளின் நெருக்கத்தில் சற்றுக் குறைந்திருந்தது. உண்மையில் அந்த நெருக்கத்திற்குரியவளுக்கு நன்றி சொல்ல விரும்பினான். பெண்ணை தாயாக, சகோதரியாக, நண்பியாக நோக்காத உடல் இச்சைக்குரியவளாக நோக்கியது அறிவுக்கு வெட்கத்தைத் தந்தது. சனநெருக்கத்தில் அவள் நிற்க முடியாது அவதிப்பட்டு அவனை நெருக்கியிருக்கிறாள். அவளின் துன்பம் அறிவுக்கு இன்பத்தைத் தந்திருக்கிறது. மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காண்பது எவ்வளவு கேவலமானது. தனக்கும் மிருகங்களிற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியுமென எண்ணினான். மிருகங்கள் இனப்பெருக்க காலத்தில் மட்டுமே இணை சேருகின்றன. ஆனால் மனிதர்களுக்கு எல்லா நாட்களுமே

இணை சேரக்கூடிய நாட்களாகவே உள்ளன. இந்த இயற்கை நியதியை எப்படி மீற முடியும் மனிதர்களை விலங்குகளில் இருந்து வேறுபடுத்துகின்றோம். ஆறறிவு படைத்தவர்கள் எனப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் உடல் இச்சையை கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறோம்.

உடலிச்சையை ஏன் கேவலமானதாகக் கருத வேண்டும். இயல்பானதொன்றாக ஏன் நோக்கக் கூடாது உடல் இச்சை இன்றிய வாழ்க்கை வரண்ட பாலை நிலம் போன்று இருக்காதா? வாழ வேண்டுமென்ற உந்துதலே அதனால்தானே ஏற்படுகின்றது. இதனை இல்லையென்று யாரும் கூறி விட முடியுமா என அறிவு நினைத்தான்.

அவன் இப்போது அவளை இயல்பாகப் பார்த்தான். அவள் இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அறிவும் பதிலுக்கு புன்னகைத்தான்.

"கையில வைச்சிருக்க கஷ்டமாய் இருக்கும் தாங்கோ நான் வைச்சிருக்கிறன்."

அவள் தந்த பையை வாங்கி மடியில் வைத்துக்கொண்டபோது திருப்தியாக இருந்தது.

கறுப்பு "ஸ்கேட்"டும் இளஞ்சிவப்பு "பிளவுசும்" அவளுக்கு அழகு சேர்த்தன. எண்ணெய்க்கறுப்பு என்பார்களே அது அவளுக்குத்தான் பொருந்தும். முகத்திலே பருக்கள் வந்து மாறியதன் தழும்புகள். அந்தக்குறையை ஈடுசெய்வது போன்று அழகிய வளைந்த புருவங்கள். அவளின் கூந்தல் கருநாகம் போன்று நீண்டு இருக்காது, கீரைப்பிடி போன்று இருந்தது.

நிலவு என்றால் குறைகள் இருக்கத்தானே செய்யும். அந்தக் குறைகள் இருப்பதே அதற்கு அழகூட்டுவதற்குத்தானே. அப்படித்தான் அவள் முகத்தில் காணப்பட்ட வடுக்களும் அந்த முகத்திற்கு மேலும் அழகு சேர்ப்பதாக நினைத்தான். அவளிடம் வசீகரம் இருப்பதாக உணர்ந்தான்.

மினிபஸ் ஆறுகால் மடத்தடியில் நின்றபோது சிலர் இறங்கப் பலர் ஏறிக் கொண்டனர்.

அறிவுக்கு ஆரம்பத்தில் மலங்கழிக்கும் போது மலவாசல் வலித்தது. இன்னும் சில நாட்களில் வலி அதிகரித்தது. மலத்துடன் இரத்தம் வெளியேறிய போது பயப்பிட்டான்.

காரை நகரில் பிரபலமாக அப்போதிக்கரியான யோகநாதனிடம் காட்டினான். அவரது மருத்துவ நிலையம் சயம்பு வீதியில் இருந்தது. தனது வீட்டின் முன்புற அறையை சிகிச்சை நிலையமாக பயன் படுத்தினார். ஊரில் உள்ள பலரும் அவரிடம் சிகிச்சை பெற வருவார்கள். அவர்களிடம் யோகநாதன் அதிக பணம் அறவிடுவதில்லை. வறியவர்கள் என்றால் யோக நாதன் பணம் வாங்காமலேயே மருந்து கொடுத்து விடுவார்.

அவன் வசித்த பண்டித்தாழ்வுக்கு கிட்டவாகத் தான் அப்போதிக்கரி யோகநாதனின் மருத்துவ நிலையம் இருந்தது. அறிவிடம் நோய் பற்றிக் கேட்டவர், தனது சிகிச்சை அறையில் இருந்த கட்டிலில் குப்புறப்படுக்கச் சொன்னார். அவன் கட்டிலில் ஏறிப் படுத்தான்.

"உப்பிடிப்படுத்தால் நான் எப்படிச் சோதிக்கிறது."

அறிவுக்கு அவர் கூறியது விளங்காம லில்லை. அந்த அறையில் அப்போதிக்கரி யோகநாதன் மட்டும் இருந்திருந்தால் அப்படிப் படுத்திருக்க மாட்டான். அவருக்கு உதவியாக நிற்கும் அந்தப் பெண்ணைப் பாாத்த பொது சங்கடமாக இருந்தது.

அறிவு வேலைக்குப்போகும் போது அவளைப் பார்த்திருக்கின்றான். சயம்பு வீதியால் நடந்து போகும்போது உபதபால் நிலையத்துக்கு அருகிலோ சயம்பு சிலைக்கு பக்கத்திலோ அவளைச் சந்திப்பதுண்டு. அப்படிச் சந்திக்கும்போதெல்லாம் அவன் அவளைப் பார்க்காமல் சென்றதில்லை. அறிவு பார்க்கும் போது அவளும் பார்த்திருக்கிறாள். அவை வெறும் பார்வைகளாகவே அமைந்தன. அதற்கப் பாலான புன்னகையோ நெருக்கமோ அவர்களிடம் இருந்ததில்லை. அறிவு அவளைப் பார்த்து புன்னகைக்க விரும்பியிருக்கிறான் அப்படி விரும்பிய போதெல்லாம் இனம் புரியாத பயம் அவனைப் பற்றிக் கொண்டு விடும். இதனால் அவன் எண்ணம் நிறைவேறாமலேயே போனது. தான் புன்னகைக்க அவள் பதிலுக்கு முறைத்தால் என்ன செய்வது என எண்ணிப் பயந்தான். அதற்காகவே அவள் முகத்தைப் பார்ப்பதை தவிர்த்து கால்களைப் பார்த்திருக்கிறான்.

ஸ்கேட்டுக்கு கீழே அவளது கால்கள் எடுப்பாகவும் அழகாகவும் தெரிந்தன. அறிவுக்கு அவள் வசீகரமானவளாகத் தோன்றினாள்.

அறிவு அவள் வரும் நேரமாகப் பார்த்தே வேலைக்கு வெளிக்கிடுவான். அதனால் அவளைச் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் அவளை நேராகப் பார்க்கும் துணிவு அவனிடம் இருக்கவில்லை. இப்படித்தான் அன்று அவள் அவனைக் கடந்து சென்ற போது அறிவு அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அவள் ஏதோ உள்ளுணர்வுக்கு உட்பட்ட வளாக திரும்பியபோது தன்னைப் பார்ப்பதை கண்டாள். அறிவு தன்பார்வை இயல்பானது என வெளிப்படுத்த புன்னகைத்தான். அவள் பதிலுக்கு சிரிக்கா விட்டாலும் முறைக்காமல் சென்றது நிம்மதியை தந்தது.

அப்போதிக்கரி யோகநாதனிடம் காட்டப் போய் இக்கட்டில் மாட்டிக் கொண்டோமே என எண்ணினான்.

"டவுசரை கீழே இறக்கிப் போட்டுக்

குப்புறப்படும்."

அறிவு வேறுவழியின்றி அவர் சொன்னவாறு செய்தான்.

"சுவேதா அந்த லைற்றை எடுத்துத் தாரும்"

அவளது பெயர் சுவேதா என்பது அவனுக்கு அப்போதுதான் தெரிந்தது. அது அவளுக்கு பொருத்த மாக இருப்பதாக எண்ணினான். அப்போதிக்கரி யோக நாதன் மலவாசலில் கையை வைத்து அழுத்தியபோது அவனுக்கு அழுகை வந்து விட்டது. வலிபொறுக்க முடியாதநிலையில் கத்த முற்பட்டவன் சுவேதா அங்கே நிற்பதைக் கண்டு வாயை மூடிக் கொண்டான். ஆனால் அந்த அதீத வேதனை கண்களின் வழியே கண்ணீராக வெளிப்பட்டது. குப்புறப் படுத்திருந்ததால் அவனுக்கு சுவேதாவின் கால்களை பார்க்க முடிந்தது. நகங்களுக்கு அடிக்கப்பட்டிருந்த சாயத்தால் அந்தப் பாதங்களின் அழகு இன்னும் அதிக மாகி இருப்பதாக நினைத்தான். அந்த நினைவு அவனை வேதனையிலிருந்து விடுவிப்பதாக உணர்ந்தான்.

மினிபஸ் சங்கானையில் நின்றபோது பலர் இறங்கினர். அறிவிடமிருந்து பையை வாங்கியவள் அவனுக்கருகில் வெறுமையாகியிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

இப்போது சங்கானையில் வங்கிகளும் கடைகளும் அதிகமாகக் காணப்பட்டன. அங்கு எஞ்சியிருந்த பழைய கட்டிடங்கள் அந்த நகரின் தொன்மையை பிரதிபலித்தன.

அறிவு சங்கானைச் சந்தையில் மரக்கறி வாங்கியிருக்கிறான். வெள்ளரிப்பழக்காலத்தில் அந்தப் பழங்களை மாட்டு வண்டில்களில் சந்தைக்குக் கொண்டு வருவார்கள். இந்த வெள்ளரிப்பழ வண்டில் களைச் சுற்றி சனக்கூட்டம் காணப்படும். வெள்ளரிப்பழங்களை பனை யோலைகளால் சுற்றிக் கட்டிக் கொண்டு வருவார்கள். வெடித்த வெள்ளரிப்பழங்களில் இருந்து வரும் வாசனை வாயில் நீர் ஊற வைப்பதாக இருக்கும். மூல வருத்தத்துக்கு வெள்ளரிப்பழம் நல்லதென அம்மா சொல்லக் கேட்டிருக்கிறான்.



மினிபஸ்ஸிலே அறிவுக்கு விருப்பமான பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. "மருதாணி நான் வந்து பூசட்டுமா மகாராணி பாதத்திலே" என ஜேசுதாசின் குரல் மனதை வருடியது. அவன் அருகிலிருந்தவளைப் பார்த்தான். அவளும் பார்த்தாள். அறிவு புன்னகைத்தான். அவளும் பதிலுக்கு புன்னகைத்தாள். அவன் அவளது கால்களைப் பார்த்தான். அவை சுவேதாவின் கால்களைப் போல அழகாக இருந்தன.

அவள் இறங்கும் இடம் அவனுக்குத் தெரியாது. அடுத்து வரும் பஸ்தரிப்பு நிலையத்தில் கூட இறங்கலாம். ஆனால் அதற்கு முன் அவளோடு கதைக்க வேண்டும். என்ன கதைப்பது. எப்படித் தொடங்குவது. கதைப்பதற்கு ஆயிரம் விடயங்களுள்ளன. அவளுக்கு எதுபிடிக்கும். எது பற்றிக்கதைத்தால் பிடிக்காது. எதுவும் அவனுக்குத் தெரியாது.

சுவேதாவுக்கு எது பிடிக்குமோ அது அவளுக்கும் பிடிக்கலாம். பெண்கள் எல்லோருக்கும் ஒரே விடயத்தில் ஆர்வம் இருக்கும் என எப்படிச் சொல்ல முடியும். சுவேதாவைப் பற்றி அவனுக்கு அதிகம் தெரியாது. அப்படி இருக்க இவளைப் பற்றி அறிந்து கொள்வது மட்டும் இலகுவானதாக இருக்குமா? அவள் மனம் எண்ணங்களில் அலைக்கழிந்தது.

அப்போதிக்கரி யோகநாதனிடம் சிகிச்சை பெற்றதற்கும் பின்பு வேலைக்குப் போகும் நாளில் சுவேதாவை வழியில் சந்தித்தான். தியாகராசா மத்திய மகாவித்தியாலத்துக்கருகில் அவள் வந்தபோது அந்த சந்திப்பு இடம்பெற்றது. அவளது முகத்தைப் பார்க்க முன்பை விடவும் அதிகம் வெட்கப்பட்டான்.

"வேலைக்குப் போறியள் போல"

"ஓம்" என ஒற்றையாக பதிலளித்தவன், இது வெல்லாம் ஒரு கேள்வியா என்ற நோக்கில் அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான். இதற்கு முன்னரும் வேலைக்குப் போகும் போது அவளைப் பல தடவைகள் பார்த்திருக்கிறான். அப்போதெல்லாம் அவன் பார்த் தாலும் பார்க்காதது போல் போகும் இவள் இன்று ஏன் கதைக்கிறாள். மருத்துவமனைக் கட்டிலில் குப்புறப் படுத்ததை கேலி செய்யப் போகிறாளோ? அவள் இப்படி எல்லாம் எண்ணக் கூடியவளாக தெரியவில்லை.

"வருத்தம் இப்ப சுகமே"

"பரவாயில்லை"

"மருந்தெல்லாம் ஒழுங்கா குடிக்கிறனியளே"

"குடிக்கிறன்"

"உங்களைப் பார்த்தால் ஆரும் மூல வருத்தக்காரன் என்று சொல்ல மாட்டினம்"

"ஏன் அப்படிச் சொல்லுறியள்"

"மூலவருத்தக்காரர் கோபப்படுவினம் எனச் சொல்லு வினம். ஆனால் நீங்கள் அமைதியானவராக

இருக்கிறியள்"

சுவேதா இப்படிச் சொன்னது அவனுக்கு மகிழ்ச்சி தந்தது. அறிவு பாடசாலையின் நடராசா மண்டபத்தைப் பார்த்தான். நீதிபதியாக இருந்த நடராசா தான் வழங்கிய தண்டனையால் ஒருவன் தூக்கில் தொங்கப் போகிறானே என எண்ணிக் கவலைப்பட்டார். அந்தக் கவலையே நீதிபதி நடராசாவின் இறப்புக்கு காரணமாகியது. அவரை நினைவுபடுத்தும் வகையில் அந்த மண்டபம் கட்டப்பட்டது.

ஆரம்பத்தில் சுயம்பு பள்ளிகூடம் என்றும் பின்னர் காரைநகர் இந்துக்கல்லூரி எனவும் அழைக்கப்பட்ட பாடசாலை இன்று தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கி வருகிறது.

அறிவு அந்தப் பாடசாலையில்த்தான் படித்தான். நடராசா போன்ற கனவான்கள் பிறந்த மண்ணில் தான் பிறந்ததை எண்ணி அவன் பெருமைப்பட்டிருக்கிறான்.

அவன் சுவேதாவின் வார்த்தைகளால் ஈர்க்கப்பட்டான்.

அறிவுக்கு மூலவருத்தம் அதிகரித்தது. மருந்து மாத்திரைகள் பயனற்றுப் போயின. யாழ்.பெரியாஸ் பத்திரியில் காட்டியபோது சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்றார்கள்.

நேற்று முன்தினம் அவனுக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இன்று பிற்பகல் அவன் வீடு போகலாம் என வைத்தியர் கூறினார். மத்தியானம் அவனைப் பார்க்க வந்த அம்மா தான் துண்டுவெட்டி கூட்டிக் கொண்டு வாறா. தனக்கொரு திருமணம் நடந்திருந்தால் இப்படி நாற்பதை தாண்டிய பின்பும் அம்மாவுக்கு பாரமாக இருக்க வேண்டி வந்திருக்காது என நினைத்தான். திருமணம் என்பது பெண்களுக்கு மட்டு மல்ல ஆண்களுக்கும் நிறைவேறாமல் போவதுண்டு.

அறிவு இருந்த இருக்கைக்கு முன்னால் அம்மா இருந்தா.

"தம்பி நோகுதே"

"இல்லையம்மா"

"தலையணையை முதுகுக்கு சாய்வாய் வைச்சுக்கொண்டிரு"

அம்மாவின் வார்த்தைகளால் அருகி லிருந்தவள் சற்று விலகியிருந்தாள். அறிவுக்கு அம்மாவின் மீது கோபம் வந்தது.

அவள் இறங்குவதற்கு முன் ஏதாவது கதைக்க வேண்டும். ஆனால் அம்மா முன்னால் இருப்பது இடைஞ்சலாக இருந்தது. அறிவு அவளின் முகத்தை கூர்ந்து நோக்கினான். அவளுக்கும் தன்னையொத்த வயதிருக்கும் என நினைத்தான். கீரைப்பிடி போல காணப்பட்ட அவளது கூந்தலை கிட்டத்தில் பார்த்தபோது வெள்ளிக் கம்பிகளாக அரும்பிய மயிர்கள் அவனுக்கு ஆர்வத்தை தூண்டின. நெற்றியில் அவள் வைத்திருந்த கறுத்தப்பொட்டு நம்பிக்கையை வலுப்படுத்தியது.

ஆண்களைப்போன்று பெண்கள் உளறுவ தில்லை. அவர்களைப் பற்றி அறிவது கடினம். அறிவு பல பெண்களோடு உரையாடியிருக்கிறான். ஒன்றாக வேலை செய்து இருக்கிறான். ஆனால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

சுவேதா காதலித்தே கலியாணம் முடித்தாள். அவள் காதலித்த விடயம் அப்போதிக்கரி யோக நாதனுக்கு கூடத்தெரியாதாம். இதை அவரே தன் நண்பர் ஒருவரிடம் கூறியதாக அறிந்தான்.

அறிவு தனக்கருகில் இருப்பவளை ஆசை யோடு பார்த்தான். அவனுக்கு அவளைப் பிடித்திருந்தது. இவளோடு எப்படியாவது கதைக்க வேண்டும் என விரும்பினான். அம்மா அடிக்கொருதரம் திரும்பிப் பார்த்து இருக்கையில் சாய்ந்திருக்குமாறு கூறியது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

அம்மா அவனோடு உரையாடிய பின் அருகில் இருந்தவளின் நடத்தையில் மாற்றம் தெரிந்தது. அவள் முன்பை விட இன்னும் விலத்தி இருந்தாள். முகத்திலே புன்னகை இல்லை. அருவருப்போடு அவள் தன்னைப் பார்ப்பதாக நினைத்தான்.

மினிபஸ் மூளாய் வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள தரிப்பிடத்தில் நின்றபோது பயணி களோடு ஒருத்தியாக அவளும் பஸ்ஸை விட்டு இறங்கி னாள். இறங்கும்போது அவள் தன்னைப் பார்த்து புன்னகைப்பாள் என எண்ணினான். ஆனால் அவள் அவனைத்திரும்பிப் பார்க்காமலேயே போனாள். அறிவு அவள் போவதையே பார்த்துக் கொண்டி ருந்தான். தனது இதயம் அவள் கேட்காமலேயே கழன்று அவளின் காலடியில் விழுந்து விட்டது போல் உணர்ந்தான். அதனை அவள் தன் அழகிய கால்களால் தட்டிவிட்டுச் செல்வது போல் இருந்தது. ஏன் அவள் அப்படி நடந்து கொண்டாள். அந்த அழகிய கால்களால் என் இதயத்தை மிதித்திருக்கலாம். மூச்சுக் காற்றை நிறுத்தியிருக்கலாம் என அவன் நினைத்தான்.

அறிவுக்கு இப்போது உடலும் வலித்தது. மூலம் முன்பைவிட வேதனை தருவதாக உணர்ந்தான்.

"என்ன தம்பி நோகுதே".

அவனுக்கு அருகில் வெறுமையாக இருந்த இருக்கையில் வந்தமர்ந்த அம்மா அறிவின் தலையை ஆதரவாக தடவி விட்டா. அவனுக்கு அம்மா மீது இப்போது எரிச்சல் வரவில்லை. இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கமாக வியாபித்திருக்கும் பெண்மையின் உன்னதத்தை அவனால் இப்போது உணரமுடிந்தது.

# கூடங்களம் அணு ஆலை தவிர்

(i)

அணுக்கரு சக்தியால்
அண்டங் கலங்கும்
அளவிலாப் பெரும் சக்தி
ஆக்கும் வழி அறிந்து கொண்டோம்
அணுசக்தி வெப்பமும், ஒளியுமாய்
இரு பெரும் சக்திகளாய் வெளியேறும்

நினைவிருக்கிறதா?
ஜப்பானில் அமெரிக்கன் எறிந்த
இரண்டு அணுக்குண்டுகள்
ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள்
ஒரு பிடி சாம்பலாகிய வரலாறு

அணுக்குண்டு வெடிப்பு
குடைக் காளானாய் எழும் புகை
பெரு வெப்பம் பீறிட்டுப் பாய்ந்து பரவும்
அத்தனையும் கருகும் மண் கூட உருகும்

அணுசக்தி கதிர் வீச்சு அசையாமல் பல காலம்
அவ்விடத்தில் நின்று உயிர்களை, பரம்பரைகளை
தின்று தொலைக்கும்.

(ii)

இராட்சத முட்டைபோல்
அணு அலைகள் உருவாகி
ஆக்க சக்திக்கென
அளப்பரிய மின்சக்திதனை
ஆக்கும் வழியும் அறிந்து கொண்டோம்.

அணு ஆலைகளால்
வளர்ந்த நாடுகள்
வளம் பெற்றது உண்மை தான்

அணு ஆலை வெடிப்புகள் அடிக்கடி ஏற்பட்டு
மாண்டு போகும் மனிசர், உயிரிகள், உடைமைகள்
எத்தனை எத்தனையோ?
மறப்பதேனோ அரசுகளே?

ரஷ்யாவில் ஷெக்கோபில்
அணு ஆலை விபத்து(1986) மட்டுமா?
எத்தனை நாடுகளில் இவை நிகழ்ந்தன.
எத்தனை விபரங்கள் மறைக்கபட்டன.
இடுகாட்டில் குடியிருந்து
இழவுகளைத் துணைக் கெடுத்தோம்
படுபாவ உலகில் பிறப்பெடுத்து
கெடுதிகளை உள் மூச்செடுத்தோம்...

(iii)

2011
ஜப்பானில் நிலநடுக்கம் ஆழிப்பேரலை...
வெடித்தன அணு ஆலைகள்
டாய்ச்சி, பியூகுஷிமா நகரங்கள்
பேரழிவு கண்டன.
அழிவுகளின் அளவுகளோ
தணிக்கை கொண்டன.
முடிவில்...
ஜப்பானின் அணுஉலைகள்
அத்தனையும் 2030ம் ஆண்டுக்குள்
மூடிவிட வேண்டும்.
இது ஜப்பானின் அமைச்சரவைத் தீர்மானம்.

ஜேர்மனியோ
ஜப்பானின் அணுஉலை வெடிப்பு 2011
அழிவுகளின் பின்பு ஆக்கியது அரும்பெரும்
சூரிய சக்தித்திட்டம் வெற்றியும் கண்டு
உலகிற்கு வழிகாட்டி நின்றது.

(iv)

இந்தியாவே அகிம்சை செயல் அர்த்தம்
கொடுத்த திருநாடே...?
மனித உயிர்களை இன்று மறந்ததேனோ?
மதம் பிடித்து வல்லாதிக்க வெறியில்
தென்னாசியாவிலே பெரும்
அணு உலைத் திட்டத்தை
தமிழ்நாட்டின் கூடங்குளத்தில் நாட்டினாய்

கூடங்குளம்
அடுத்தவீட்டுச் சமாரம் என்று சொல்லி
நாம் அருந்துயில் கொள்ள முடியுமா?
அனர்த்தங்கள் மலிந்து போன பூமி இது.
கூடங்குளம் வெடித்தால்
இலங்கையிலும் கும்மியடிதான்
குறிப்பாக
வடபகுதித் தமிழருக்கு...
அழிந்தது போதாதென்று...

வருடம் முழுவதும்
தங்கச் சூரியன் தகிக்கும் இந்தியாவே
ஜேர்மெனியைப் பார்
சூரிய சக்தித் திட்டம் உன்
கூரிய மூளைக்குள் ஏறலையோ?
செலவேதும் இல்லா
சூரியசக்தி எனும் இயற்கைவளம்
செலவழிந்து போகுதிங்கே வீணாய்
கூர்மதியீர் குந்தியிருந்தது போதும்
கூடி எழுக.
அது சரி...
அப்துல்கலாம் என்னவாம்...?

– பா.இரகுவரன்

கி.நடராசா

# கவிதை ரசனையில் தோன்றிய புதுமொழிகள்

கவிதையைப் படித்து அனுபவித்த கவிமணி,

"பாவின் நயமெல்லாம் – யானும்
பகர வல்லேனோ?"

என்று கூறுவதிலிருந்து கவிதையை அனுபவித்தல் ஒரு சிலராலேயே முடியும். கம்பன் காவியத்தை அனுபவித்த ஒருவர்,

"கம்ப நாடன் கவிதையிற் போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே"

என்கிறார். கவிதையை படித்து அனுபவித்த மக்கள் நாவிலும் சில பழமொழிகளோ புதுமொழிகளோ தோன்றலாயின.

கவிதைக்கு இலக்கணம் காணத் துணிவதை விட ஒரு நல்ல கவிதையை எடுத்தக்காட்டி, "இது போலிருப்பது தான் கவிதை என்று கூறுவது எளிது. ஒரு நல்ல கவிதை அது. முகர்ந்து கொண்ட பொருளிலேதான் தங்கியுள்ளது. மூவேந்தர் காலத்தின் பின் களப்பிரர் தமிழகத்தை ஆட்சி செய்யும் போது தமிழ் சமுதாயம் சீர்கேடு அமைந்ததை கருத்திற் கொண்ட பல அற நூல்கள் தோன்றின. இவற்றுள் திருக்குறளும் நாலடியாரும் முக்கியமானவை. அவை கூறும் பொருளின் பின்னணியில்,

**"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"**

என்ற பழமொழி உருவாயிற்று வாழ்க்கையில் விரக்தி அடைந்த ஒருவனுக்கு நாலடியார் நல்வழி காட்டும் ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை திருக்குறள் போதிக்கும். பாடும்பொருள் சமகால வாழ்க்கையுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். பிரித்தானிய சாம்ராச்சியத்தில் இருந்து இந்திய நாடு விடுதலை பெறவேண்டும், விடுதலை உணர்வை ஊட்ட வேண்டும் என்ற வகையில் பாரதி பாடினார். அதனால் அவர் பாடல்களின் முக்கியத்துவத்தை விளக்க,

**"பாலும் சோறும் வீட்டுக்குறுதி
பாரதி பாடல் நாட்டுக்குறுதி"**

என்ற புதுமொழி தோன்றிற்று.

செய்யுளில் பாடும் பொருளின் முதன்மையை விளக்க, **"பொருள் இல்லாப்பாடல்கள் அருள் இல்லா வாழ்வு"** என்ற புதுவாசகங்கள் தோன்றியிருப்பதும் மனம் கொளத்தக்கது.

ஒரு நல்ல கவிதைக்கு அழகு செய்வன அதில் அமைந்துள்ள அணிகளாகும். இதனை முதன்மைப் படுத்தும் வகையில், **"அணியில்லாப் பாடல் நகையில்லாத மங்கை"** என்றும், **"கோயிலுக்கு மணிகள் செய்யுளுக்கு அணிகள்"** என்றும் புதுமொழிகள் பல தோன்றலாயின. அணிகள் கவிஞனது உணர்ச்சி அனுபவத்தை வெளிப்படுத்தும். உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், வேற்றுமை, வேற்றுப்பொருள் வைப்பு, சொற் பின்வருநிலை, பொருட்பின்வருநிலை முதலான அணிகளுள் ஒன்றும் பலவும் அமைந்து பாடற்கு அழகு ஊட்டுவனவாய்த் திகழும்.

உவமையின் சிறப்பு கவிதைக்கு எவ்வாறு அழகு செய்கின்றன என்பதை,

**"கண்ணிற்கு மை செய்யுளுக்கு உவமை"**

**"உவமையில்லையேல் உவகை இல்லை"**

போன்ற புதுமொழிகள் விளக்கின. இதுபோல உருவகத்தின் சிறப்பை,

**"உருவகம் இல்லையேல் உயரகம் இல்லை"**

**"உருவகம் இல்லாப்பாடல் தார் இல்லா சாலை"**

போன்ற புதுமொழிகள் விளக்கின.

ஒரு நல்ல பாட்டில் பலவகையிலான தொடை நயங்கள் காணப்படும். தொடை வகை என்பது எழுத்துச் சொற் பொருள்களை எதிரெதிர் நிறுத்தி தொகுக்கப்படு வனவாகிய தொடை விகற்பமாகும். அவை பூத்தொடை போலச் செய்யுளுக்குப் பொலிவு செய்வனவாதலின் தொடை எனப்பட்டது. மோனை, எதுகை, முரண், இயைபு என்பன தொடை நயங்களுக்குள் அடங்கும். **"தொடையற்ற பாடல் நடையற்றுப் போகும்"** என்பது புதுமொழி.

மோனை என்பது அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது அடிமோனை என்றும் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவருவது சீர்மோனை என்றும் குறிப்பிடப்படும். மோனையை முதன்மைப் படுத்தும் வகையில்,

**"குயவனின் கைவண்ணம் பானையிலே
புலவனின் கைவண்ணம் மோனையிலே"**

என்றும்,

**"மோனையில்லாப்பாடல் மோட்சம் பெறா முனிவன்"** என்றும் வழங்கலாயிற்று.

எதுகை என்பது ஒவ்வோர் அடியிலும் முதல் சீரின் முதலெழுத்து அளவு ஒத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதாகும்.

**"எது கை கொடுக்காவிடினும்**

**எதுகையாவது கை கொடுக்கும்"** என்பர்.

முரண் என்பது மாறுபட்ட ஒன்றுக்கொன்று எதிரெதிரான சொற்களால் அமைவது. இதன் சிறப்பை விளக்க, **"முரண் செய்யுளுக்கு அரண்"** என்ற புதுமொழி உருவாயிற்று.

இயைபு என்பது செய்யுளின் அடி தோறும் இறுதி எழுத்தோ சீரோ ஒன்றிவரத் தொடுப்பதாகும். பாடலின் உணர்வு நிலையை புலப்படுத்துவதில் இதற்கும் ஒரு சக்தி உள்ளது. இதனால் தான். **பாடலின் இயைபு படிப்போருக்கு வியப்பு** என்ற புதுமொழி தோன்றியது.

செய்யுளைக் கனிவித்து படிப்போருக்கு ஏற்படும் உணர்ச்சியால் உள்ளம் பூரிக்கும் பொழுது ஏற்படுவதே மெய்பாடு என்பர். வடமொழியார் இதனை ரஸம் என்று வழங்குவார். தமிழில் இவற்றை சுவையென்பர். நகை, அழுகை, இழிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன எண் வகை சுவைகளாகும் சுவை வெளிப்பாடு கவிதையில் பெறும் இடத்தினை

**"நாவுக்கு அறுசுவை செய்யுளுக்கு எண் சுவை"**

என்றும்,

**"சுவையில்லாப்பாட்டு இனிப்பில்லாப் பண்டம்"**

என்றும் புதுமொழிகள் தோன்றலாயின.

குறிக்கப்பட்ட ஒரு சுவையை அல்லது மெய் பாட்டை ஒரு பாட்டில் புலவன் அமைக்கும் பொழுது அதனைப் புலப்படுத்தற்கேற்ற ஓர் சந்த முறையை அமைத்துக் கொள்கிறான். அளவு ஒத்த சீர்கள் திரும்பத்திரும்ப வந்து பாடலைக் கேட்போரின் செவிக்கு இன்பம் பயப்பதே சந்தம் என்பர்.

**"சந்தம் பாட்டிற்கு சொந்தம்"**

**"யானைக்கு சொந்தம் தந்தம்"**

**"கவிதைக்கு சொந்தம் சந்தம்"**

**"சந்தமில்லாப் பாட்டு சத்தமில்லா வேட்டு"**

**"சந்தமில்லாப் பாட்டு சொந்தமில்லா வீடு"**

**"சந்தமில்லாப் பாட்டு சாவியில்லாப்பூட்டு"**

போன்ற பல புதுமொழிகள் கவிதையில் சந்தம் பெறும் முதன்மையை விளக்கின.

ஒரு நல்ல பாட்டு அதில் கையாளப்பட்ட சொற்களில் தங்கியுள்ளது. கவிதையில் சொற்கள் அமையும்போது இடத்திற்கேற்றவாறும், சந்தர்ப்பதற்கு ஏற்றவாறும், உணர்ச்சிக் கேற்றவாறும், அமைந்து கவிதையை பொலிவுடைய தாக்குகின்றது. சொற்கள் தமக்கென்றமைந்த ஒலித்தன்மையும், வல்லின மெல்லின எழுத்துக்களுக்கேற்ப உணர்ச்சியுடன் சேர்ந்து ஒலிக்கும் தன்மையும் பெற்றுள்ளன. இதனால்,

**"பல் நயத்துள்ளும் பாவிற்கு நன்னம்**

**சேர்ப்பது சொல்"**

என்ற புதுமொழி உருவாயிற்று.

இறுதியாக கம்பனையும் பாரதியையும் உணராதவர்கள் இவ்வுலகில் இல்லை எனலாம். அவர்களது கவித்துவம் எத்தன்மையானது என்பதை,


**"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்;**

**பாரதி வீட்டு பானை சட்டியும் பண்ணிசைக்கும்"**

என்ற புதுமொழி உருவாயிற்று. கவிதையை இரசனை உண்வோடு படிப்போர் இப்புதுமொழிகளை அறிந்திருக்க வேண்டியது மிக அவசியம்.


# அடையாளம்

நான் இல்லாதவொரு
நாழிகையில்
நீ வந்துபோயிருக்கலாம் என்பதை
உன் வாசனை சொல்கிறது.
உனக்கு மட்டுமே உரித்தான
அந்த அபூர்வ வாசனை
என் சுவாசப்பைக்குள்தான்
பத்திரமாய்ப்
பாதுகாக்கப்படுகிறது என்னும்
அந்தரங்கத்தை அடிக்கடி
மறந்து தொலைக்கிறது
மனது.
உன்னைத் தொடுகையில்
எனக்குள் பரவும்
இனம்புரியாத ஸ்பரிசத்தை
ஏனோ என்னால்



இப்போதும் உணரமுடிகிறது.
உன் கூந்தல் நீவி
நெற்றிப்பரப்பில்
இதழ்பதிக்கையில்
உன்னிடம் விரவிக்கிடக்கும்
ஒற்றை மௌனத்தை
நீயில்லாத இந்தக்கணத்திலும்
என்னால்
இனங்காணமுடிகிறது.
இந்த உணர்வுகள்
பிரம்மையா உண்மையா
என்கின்ற
ஆராய்ச்சிகள் எதிலும்
இறங்க மறுக்கிறது
என்
பயந்தாங்கொள்ளி மனது.

மன்னூரான் ஷிஹார்






# நகரும் படிமங்களில் நாகேஷ்

அபூர்வன்

2013ம் வருடம் நடிகர் நாகேஷின் அமுதவிழா ஆண்டாக மலர்கிறது. ஜனவரி - 31 -2013 அன்று நான்காவது வருட நினைவு நாளாகும். இவற்றினை ஒட்டியே இக்கட்டுரை பிரசுரமாகிறது.

பன்முக ஆளுமையின் வீரியத்தோடு மன்மத அம்சங்களின்றி ஒற்றை நாடி தேகத்தின் அங்கத ஆற்றுகையூடாகப் பார்வையாளரை வசீகரித்து ஏகோபித்த ஆதரவைப் பெற்ற நடிகனாக நாகேஷ் அமைந்திருந்தார். விஸ்வரூபங் கொண்ட நடிகர் விம்ப அடையாளக் கட்டமைப்பைப் புறந்தள்ளி, இயக்குனர் விம்ப அடையாளத்தை நிறுவும் பிரயத்தனம் மிக்க காலகட்டமொன்றில் கனவுத் தொழிற்சாலைக்குள் நுழைந்தார். சமூக நாடகத் தன்மைமிக பிரதிகளை வடித்த இயக்குனர் கே.பாலச்சந்தரின் நம்பிக்கைக்குரிய நட்சத்திரப் பிரதிமையானரார். அன்றாட வார்த்தைகளுக்குள் முடங்கிக் கிடந்த அற்புதமான அங்கதங்களைச் சாதுரியமாக வெளிக்கொணர்ந்து மீ விளைவைத் தோற்றுவித்தார். மகிழ்நிலைக்காலத்தில் நாகேஷின் வேகமான நடிப்பானது Hollywood நடிகர் Jerry Lewis இன் அளிக்கை நகலெடுப்பாக அமைந்திருந்தது. "நாகேஷின் நகைச்சுவை நடிப்பில் ஆரம்பத்தில் அமெரிக்க நகைச்சுவை நடிகர் ஜெர்லி லிவிஸ் சாடை வெகுவாக வீசியதெனினும், காலம் செல்லச் செல்ல ஆழமான முதிர்ச்சியுள்ள நகைச்சுவை சார்ந்த குணச் சித்திர நடிகரானார்" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

1933 செப்ரெம்பர் 27ஆம் திகதி கிருஷ்ண ராவ் – ருக்மணி அம்மாள் தம்பதிகளின் மகனாகப் பிறந்த நாகேஸ்வரன் "மாத்வர்" எனப்படும் கர்நாடகப் பிராமணப் பிரிவைச் சேர்ந்திருந்தாலும், சமூக மதிப்பீடுகளைப் புறந்தள்ளி ரெஜினா என்ற கிறிஸ்தவப் பெண்ணைக் காதலித்து மணம் செய்தார். "குண்டுராவ்" என நண்பர்களால் அழைக்கப்பட்ட நாகேஷ், மேடை நாடகம் ஒன்றில் "தை தண்டபாணி" கதாபாத்திரத்தில் நடித்ததால் "தை நாகேஷ்" என அனைவராலும் சுட்டப்பட்டார். ("தாய் நாகேஷ்" எனப் பிற்காலத்தில் மருவியது) கோவை "பிஎஸ்ஜி" கலைக்கல்லூரியில் பயின்றபோது அம்மைநோய் ஏற்பட முகத்தில் தழும்புகள் நிரந்தரமாகின. மின் சாதனங்கள் விற்கும் கடை, ஊறுகாய் நிறுவனம், உலோகத்தொழிற்சாலை போன்றவற்றிலே ஊழியம் புரிந்து இறுதியிலே தென்னக ரயில்வே அலுவலகத்தில் பணியினைத்தேடிக் கொண்டார். மேடை நாடகங்களின் நீட்சியான



திரைத்துறையில் கால்பதித்தார். ஆனந்த பாபு, ரமேஸ்பாபு, ராஜேஸ்பாபு என்னும் மூன்று ஆண் மக்களின் தந்தையான நாகேஷ் அந்தாதிப்பாணியான புகைப்பழக்கமும், தீவிர குடிப்பழக்கமும் உடையவர். 1974 இல் கலைமாமணி விருது பெற்றார். "நம்மவர்" திரைப்படத்திற்காக துணைநடிகருக்கான தேசிய விருதினை அடைந்தார். சினிமா ராஜபாட்டையில் நடைபயின்ற எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, கருணாநிதி, என்போரின் ஆட்சியே தமிழ்நாட்டில் மீட்டெடுப்புச் செய்யப்பட்டநிலையிலும், விருதுகளின் பின்புலத்தில்

அப்பட்டமான அரசியல் விதந்துரைப்பு நிகழ்ந்த சூழலிலும் நாகேஷிற்கு "பத்மஸ்ரீ" விருது வழங்கப் படவேயில்லை! (பத்மஸ்ரீ மனோரமா, பத்மஸ்ரீ விவேக் போன்றவர்களோடு ஒப்பிடுகையில்(?) எள்ளளவும் ஆளுமைக் குறைவற்றவர். தனக்கு "பத்மஸ்ரீ" வழங்க வில்லை என்பதை கவலை தோய்ந்த ஆதங்கத்தோடு தெரிவித்ததை தொலைக்காட்சியில் பார்த்தேன். அதனால் தான் விருதுக்கும் படைப்புக்கு மான பேரிடை வெளியை புரிந்தபின்னும் விருது பற்றிக் குறிப்பிட்டேன்.)

1958 இல் "மணமுள்ள மறுதாரம்" திரைப்படத்தினூடாக அறிமுகமானார். நீர்க்குமிழி, எதிர் நீச்சல், சர்வர் சுந்தரம், மேஜர் சந்திரகாந், யாருக்காக அழுதான், நெஞ்சில் ஓர் ஆலயம், காதலிக்க நேர மில்லை, தில்லானா மோகனாம்பாள், திரு விளையாடல், மோட்டார் சுந்தரம்பிள்ளை, அன்பே வா. நம்மவர், மகளிர் மட்டும், மைக்கேல் மதன காமராஜன் என்ற வாறாக ஏறத்தாழ ஆயிரம் படங்களில் நடித்துள்ளார்.

நாயகன், எதிர்மறைநாயகன், அங்கதச் சித்திரிப்பு, குணச்சித்திர வார்ப்பு என்னும் நால்வகைப் பரிமாணங்களில் நாகேஷின் அளிக்கையினைப் பதிவு செய்தல் பொருத்தமாக அமையும்.

**அ) நாயகன்**

கால்கோள் நிலைக்காலத்தில் நாகேஷின் பாத்திர வகிபாகம் கதாநாயகனாகவே காணப்பட்டது.



எனினும் அமரக் கதாநாயக அந்தஸ்தை அவரால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. எம்.ஜி.ஆர், சிவாஜி, கமலஹாசன், ரஜனிகாந்த் போன்று பிரார்த்தனைக் குரிய பிரதிமையாக மாற்றம் பெறவில்லை. எதிர் நீச்சல், நீர்க்குமிழி, சர்வர் சுந்தரம், மேஜர் சந்திரகாந், யாருக்காக அழுதான், அனுபவிராஜா அனுபவி,



கைநிறையக்காசு, சோப்பு சீப்புக் கண்ணாடி முதலிய பல படங்களில் நாயகனாகத் தோன்றியுள்ளார். எள்ளல் உட்சரடாக இழையோட பல்வேறு பாவங் களையும் சித்திரிக்கும் மாறுபட்ட நாயகனாக பார்வை யாளரை வசீகரித்தார். எனினும் பல படங்களில் பாலச்சந்தரின் ஜாடிக்கேற்ற மூடியாகத் தன்னை மாற்றியதால் நடிப்பாற்றலின் எல்லை மட்டுப்படுத்தப் பட்டிருந்தது.

நீர்க்குமிழி திரைப்படத்தில் "சேது" என்ற புற்று நோயாளிப் பாத்திரத்தின் அபார நடிப்பாற்றலால் அப்பாத்திரத்தின் அவலத்தினை சுவைஞனிடம் தொற்ற வைத்த பாங்கு வெகுவாகப் பாராட்டத்தக்கது. "சிகரெட்" மிதிக்கும் போதான நடன அசைவு காலங் கடந்தும் ஞாபக இடுக்கில் மின்னும் ஆற்றல் மிக்கது. ஜெயகாந்தனின் "யாருக்காக அழுதான்" படத்தில் யோசப் கதா பாத்திரத்திற்கு உயிரூட்டி நடித்த விதம் உடையாத நினைவுக்குமிழியாய் சீரஞ்சீவித்து வத்தோடு என்றொன்றும் நின்று நிலைக்கும்.

"கைநிறையக்காசு" திரைப்படத்தில் (முற்பாதியில்) வறுமையின் கோரப்பிடியில் சிக்கி கையாலாகாத்தனத்தோடு வாழும் "ராமு" கதா பாத்திரத்தின் வெளிப்போடு அலாதியானது! (பிற்பகுதி யில் இரட்டைக் கதாபாத்திர மோதுகைச் சித்திரிப்பில் தடம் மாறி விடுகிறது) "சோப்பு சீப்பு கண்ணாடி" படத்தில் நாயகனாக பாத்திரமேற்றாலும் எள்ளலின் அழகே ஏற்றம் பெறுகிறது. உருவெளி யோடு உரையாடும் நாயகிக்கு தன்னிச்சையாக விடைபகரும் வனப்பும், பூட்டப்பட்ட வீட்டுக்குள் மாட்டிக் கொண்ட போதான தனிநடிப்பும் உன்னதமானவை.

"மேஜர் சந்திரகாந்" படத்திலும் மாறுபட்ட பாத்திர வெளிப்பாட்டினை அவதானிக்கலாம். தங்கையான விமலாவின் (ஜெயலலிதா) நடனம் குறித்த ஒவ்வாமையில் அரங்கைவிட்டு அகலும் தருணத்தில் நுணுக்கமான பாவத்தினை

வெளிப்படுத்துகிறார். விமலாவின் மரணத்தின்போது அண்மைக்காட்சியில் நேர்த்தியான நெகிழும் முகபாவங்களைக் காட்டுகிறார். படத்தின் பிற்பாதியில் இறுக்கமான முகத்தோடு கண்களின் வழியே சோகத்தினை உந்தித்தள்ளும் "மோகன்" பாத்திரம் அழுத்தமான வெளிப்பாடாகும். இறுதிக்காட்சியில் அநாயாசமாகப் படுத்திருக்கும் மோகனின் உடல்மொழி வெகு இயல்பானது.

மிகைப்படுத்தப்பட்ட தொல்லைகளின் குவியலில் ஒட்டுக் குடித்தனங்களிடையே ஒதுங்கி வாழும் "மாது" கதாபாத்திரத்தை "எதிர்நீச்சல்" திரைப்படத்தில் தரிசிக்கலாம். இயல்பை மீறிய கதாபாத்திர வெளிப்பாடுகள் துருத்திக் கொண்டிருக்கும் படத்தில் நாகேஷின் நடிப்பானது ஓரளவேனும் உயிர்ப்பைத் தக்கவைக்கும் முனைப்போடு அமைந்துள்ளது. நாகேஷின் பன்முக பரிமாணங்களை இனங்காட்டியதாக "சர்வர் சுந்தரம்" திரைப்படம் அமைந்துள்ளது. முகபாவமும் கரங்களின் நுண்ணசைவும், வாத்து நடையும், இடுப்பின் மேற்பகுதியை பின்னோக்கி நகர்த்தும் உடல்மொழி எள்ளலும் குரலினைத்



தேவைக்கேற்ப ஏற்றி இறக்கும் (Modulation) பண்பும் இத்திரைப்படத்தில் அபரிமிதமாகவே வெளிப்பட்டுள்ளது.

**ஆ) எதிர்மறைநாயகன்**

தமிழ் சினிமாவின் சூத்திரப்பாங்கான எதிர்மறை நாயகனாக மிளிராது மாறுபட்ட சித்திரிப்பினை வெளிப்படுத்தியவர்களில் நாகேஸின் பங்களிப்பும் சிலாகித்துச் சொல்லப்படவேண்டிய தொன்றாகும். தில்லானா மோகனாம்பாள், அபூர்வ சகோதரர்கள், மௌனம் சம்மதம், மைக்கேல் மதனகாமராஜன், சேரன் பாண்டியன், இந்திரன் சந்திரன் போன்ற படங்களில் "வில்லனாக" வெளிப்பட்டார்.

"தில்லான மோகனாம்பாள்" படத்தில் கூழைக் கும்பிடுவோடு, எலும்மிச்சம் பழம் கொடுத்து அறிமுகமாகி சவடால் தன்மைமிகு பேச்சால் காரியம் சாதிக்கும் "வைத்தி" கதாபாத்திரத்தின் வில்லத்தனம் வெகு அபாரம்! கொத்தமங்கலம் சுப்புவின் மூலப்பிரதியில் உறைந்து கிடக்கும் பாத்திர வார்ப்புக்கு உயிரூட்டிப் பொருந்திப்போகும் தனித்தன்மை சண்முக சுந்தரம்(சிவாஜி கணேசன்) மோகனா (பத்மினி) பாத்திரங்களின் அளிக்கையினைச் சமன் செய்வதோடு முந்திச் செல்லவும் முற்படுகிறது. இறுதிக்காட்சியில் சிறை செல்லும்போது தன்னிலையில் தாழாத ஏற்றமிகு வெளிப்பாட்டு வசனங்களுடன் கலந்து கரைந்துபோகும் அழகு நாகேஷிற்கு மட்டுமே உரித்தானது.

அதிசயப்பிறவி, சேரன் பாண்டியன், இந்திரன் சந்திரன் போன்ற படங்களை விட மைக்கேல் மதனகாமராஜன் "அவினாசி" கதாபாத்திரச் சித்திரிப்பு நிறைவுத்தன்மை மிக்கது. முதலாளியின் பணத்தை கையாடல் செய்து விட்டுத் தவிப்பதிலும், ஆள் மாறாட்டம் புரிவதிலும் அவினாசி பாத்திரம் அற்புதமான தருணங்களை இனங்காட்டுகிறது. அபரிமிதமான ஒப்பனையில் அமச்சூர்த்தனமும் நடப்பியலும் சாராத திரிசங்குநிலை வில்லனாக "அபூர்வ சகோதரர்களில்" காட்சி தருகிறார். மௌனம் சம்மதம் படத்தின் "பரமசிவம்" பாத்திரம் ரசனை மிகுந்த வெளிப்பாடுகளில் ஒன்றாகும். கைநிறையக்காசு, அனுபவி ராஜா அனுபவி போன்ற படங்களில் இரட்டைக் கதாபாத்திரங்களின் மோதுகையில் மிகைத்தன்மையோடு எதிர்மறை நாயகச்சித்திரிப்பு இடம் பெற்றுள்ளது.

**இ) அங்கதச் சித்திரிப்பு**

நாயகன், எதிர்மறை நாயகன், குணச் சித்திர வார்ப்பென பல்வேறு பரிமாணங்களில் வெளிப்பட்டாலும் அனைத்திலும் நாகேஸின் அங்கதச் சித்திரிப்பு உச்சநிலை பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். எனினும் பல படங்களில் தனித்து எள்ளல் ததும்பும் பாத்திர வார்ப்பாக இடம்பெற்றுள்ளார். காதலிக்க நேரமில்லை, திருவிளையாடல், அன்பே வா போன்றன நினைவுகளில் நீங்காத வீரியம் மிகு நகரும் படிமங்களாகும்.

"காதலிக்க நேரமில்லை" திரைப்படத்தின் "ஓஹோ புரொடெக்ஸன்" செல்லப்பாவின் கேலியும் கிண்டலும் உற்சாக நதியாக உணர்வுகளைக் குளிர்விக்கின்றன. "சச்சு" விற்கு நடிப்புச் சொல்லிக் கொடுக்கும் காட்சியிலும், "பாலையாவிடம் கதை சொல்லும் காட்சியிலும் எள்ளல் உச்சத்தை தொடுகிறது.

திருவிளையாடல் திரைப்படத்தில் தருமி கதாபாத்திரத்தின் வசனங்களும், நடிப்பும் வார்த்தைகளுக்குள் வசப்படாத வசீகரம் மிகுந்தவை! குரல் ஏற்ற இறக்கங்களின் தனித்திறமை வெளிப்பாட்டினை பறை

சாற்றுகின்றன. சிவாஜிகணேசனின் உச்சரிப்புச் சீர்மைக்கு நிகராக நாகேஸ் எடுத்தாளும் எள்ளல்



மொழியின் Timing அபாரமானது! "சில ஷாட்களில் டயமிங்குடன் வசனம் பேசி நடித்ததில் சிவாஜியை நாகேஷ் முந்திக் கொண்டிருப்பதைக் கண்ட இயக்குனர் ஏ.பி.நாகராஜன் அவற்றை எடிட்டிங்கில் குறைத்தோ நீக்கியோ விட்டு சிவாஜிக்கு முக்கியத்துவம் கொடுக்க எண்ணி அவரிடம் கூறினார். அதற்கு சிவாஜி மறுத்து வேண்டாம் நாகேஷ் நல்ல பண்ணிருக்கான். அந்தக் காட்சி அப்படியே இருக்கட்டும் – என்று சொல்லி விட்டார்" என ஆரூர்தாஸ் "சிவாஜி வென்ற சினிமா ராஜ்ஜியம்" நூலில் (பக்கம்200) குறிப்பிட்டுள்ளார்.

"பணம் பத்தும் செய்யும்! அந்தப்பணம் எனக்குக் கிடைச்சா பதினொன்றும் செய்வன்" என்று வசனம் பேசி, அதற்கேற்றால் போல வாழும் "ராமையா" பாத்திரத்தை அன்பே வா படத்திலே காணலாம். (தேங்காய் சினிவாசன், சோ போன்று எம்.ஜி.ஆர் சார்ந்த பிரசாரத்தை எளிய வடிவில் மக்களிடம் சுவற வைக்க இப்படத்தில் நாகேஷ் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் தெளிவாகின்றது) J.Bயின் (எம்.ஜி.ஆர்) வீட்டை அவருக்கே வாடகைக்கு விடும் கதாபாத்திரத்தில் சுவைஞர்கள் சிரித்தே மீ ஆயுள் பெறும் வகையில் நடித்துள்ளார். கண்ணம்மாவுடன் (மனோரமா) காதல் மொழி பகரும் போதும், பணத்திற்காக பாசாங்கு அதிகாரம் காட்டும் போதும் உச்சமான உவகையினைத் தந்த மகிழ்விக்கிறார்.

**ஈ) குணச்சித்திர வார்ப்பு**

அங்கதச் சித்திரிப்பு உச்சநிலைபெற்ற நாகேஷின் திரைப்படங்களிலும் குணச்சித்திரவார்ப்பு சிறப்புறவே அமைந்திருந்தது. எனினும் எள்ளலைச் சற்றே ஒதுக்கி மாறுபட்ட குணச்சித்திரப்பண்பினை வெளிக்கொணர சில இயக்குனர்கள் முயன்றனர். "நம்மவர்" திரைப்படம் குறிப்பிடத்தக்க அளிக்கை யாகவே அமைந்துள்ளது. கல்லூரிப் பேராசிரியரான ராவ், மகளான நிர்மலாவின் (நடன இயக்குநர் பிருந்தா) மரணத்தில் தலையணை தேடி எடுத்து இறந்த உடலுக்கு வைக்கும் போதும், கொள்ளி வைத்து விட்டுத் தரையில் வீழ்ந்து குமுறி அழும் போதும் அற்புதமான நடிப்பினை இனங்காட்டியுள்ளார். வசூல்ராஜா M.B.B.S திரைப் படத்தில் கமலாஹாசன், பிரகாஸ்ராஜ், நாகேஷ் மூவரும் சந்திக்கும் காட்சியில் ஏனைய இருவரது நடிப்பினையும் மின இலகுவாக Overtake செய்யும் நாகேஷின் Performance விதந்துரைக்கத்தக்கது. கமலஹாசனது பல திரைப்படங்களில் நாகேஷின் குணச்சித்திர வார்ப்பினைத் தரிசிக்க முடிகிறது. எனினும் அவை யனைத்தும் நாகேஷின் யானைப் பசிக்கு சோளப்பொரி ரகம் தான்! பலர் பாராமுகமாகப் பட்டினி போட்ட போது கமல்ஹாசன் சோளப் பொரியாவது போட்டாரே என்று ஆறதலடைய முடிகிறது. "தேசியகீதம்" படத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகியாக நடித்துள்ளார். படத்தின் ஆரம்பத்தில் எழுதிக் கொடுத்த வசனங்களை



ஒப்பிப்பது போன்ற இயல்புத் தன்மையற்ற அளிக்கை துருத்தினாலும் பிற்காட்சியில் சற்றே மீண்டு விடுகிறார்.

இது பேராய்வுக்குரிய பொருண்மை! வியாசத்தின் விரிவஞ்சி நாகேஷ் குறித்த பதிவுகளைக் குறுக்கியுள்ளேன். தமிழ்சினிமாவுக்கு முறிப்பு நடனத்தை அறிமுகப்படுத்தியவர். "நான்" படத்தில் தாய் – மகன் என இருவேடங்களில் நடித்துள்ளார். (தாய் கதாபாத்திரத்தின் உடல் மொழியோ, உச்சரிப்போ அழுத்தம் பெறவில்லை) சாமர்த்தியமான சொல்லாடல், முகத்தின் விஷம அசைவுகள் போன்றன ஊடாக எள்ளலினை நிகழ்த்த முடியாத பிரேதக் கதா பாத்திரத்தினை "மகளிர் மட்டும்" திரைப்படத்தில் ஏற்று நடித்தார். (எனினும் தீவிரவாதியின் பிரேதத்தை அங்கதப் பொருளாக்கியமை ஏற்புடையதன்று) நாகேஷ் நடித்த இறுதிப்படம் தசாவதாரமாகும். ஜனவரி 31 –2009 அன்று மருத்துவமனையில் மாரடைப்பால் இயற்கை எய்தினார்.

குறுநாவல்

# புதுவீடு

ஆனந்தி



## அங்கம் ஒன்று

டவுனிலிருந்து ஏழெட்டு மைல் தொலைவில் இருக்கிற அந்தச் சிறுகிராமம், எரிந்து கருகிப்போன ஒரு பழைய நகரத்தின் புதிய வார்ப்புப் போலவே கண்களை எரித்தது, புறப்பார்வைக்கு கம்பீரமாக இருப்பது போல் தோன்றினாலும், மனதுக்கு ஏதோ இருப்பது போல் தோன்றியது.

இப்போதெல்லாம் டவுனிலிருந்து யாருமே அங்கு வருவதில்லை. அப்படி வரவேண்டிய அவசியம் இனிமேல் என்ன இருக்கிறது? இந்தக் கிராமத்தின் பழம் பெருமைகளையெல்லாம் கறைபடுத்த வந்த இது ஒரு புதிய கழுவாயே! கலி தான் மிஞ்சியது என்று சொன்னால் கோபம் வரும்.

ஆனால் என்ன செய்ய? இந்தச் சாபத்துக்கு விதிவிலக்காய், ஓர் ஆத்ம பரிகாரம் தேடிச் சாந்தி பெற நினைப்பது போல் உண்மையை நினைத்து தொலைக்க வேண்டியிருக்கிறது. இது எங்கோ சிலருக்கு மட்டுமே பொருந்தும்.

துளசிக்கு அப்படி நினைப்பதே ஆறுதலைத் தந்தது. அவள் கொஞ்சநாளாய், பாதி கனவில் விழித்துக் கொண்டிருக்கிற மாதிரி, அறை ஜன்னலருகே நின்ற வாறு, அகல விரிந்த கண்களை நிமிர்த்தி, ஓயாமல் வானத்தையே அன்னார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்பா சுந்தரம் கூப்பிட்டாலும் காதில் விழாது, அவர் எண்பது வயதுக் கிழவன். இரண்டு பேரும் ஒருவருக்கொருவர், துணையாக இருந்து வருவது போல், ஒரு பிரமையில் அவர்களின் வாழ்க்கை ஓடிக் கொண்டேயிருந்தது. அவளுக்கு ஓர் இலக்குமில்லாமல், அப்படிப் பயணம் செய்வதே சுகமாக இருந்தது.

அப்பாவோடு அவள் வாழ்க்கை முடிந்தாலும் முடிந்து போய்விடலாம் அல்லது தனியாகவே வாழ்ந்து ஒரு யுகம் கழிந்து போன பெருமையில் காலம் ஒரு சவாலாகவே நின்று அவளிடம் தோற்றுப்போகும். சுந்தரம் அந்தக் காலத்தை எண்ணிக் கொண்டு காத்திருக்கிறார். அவளுக்கோ மனசு மரத்துப் போய், வாழ்வில் ஒன்றுமே மிஞ்சாமல், காலம் ஒரு சவாலாகவே, அறிவில் விழிப்பும், மனதில் ஒளிரும் சத்தியப் பிழம்புமாக அவள் இருட்டில் நடக்கிறாள்.

அவளுக்கு வயது முப்பத்தெட்டாகிறது. இருபது வயதிலே கல்யாணமாகிப் புருஷனோடு போனவள், திடீரென்று ஒருநாள் அவனைப் பிரிந்து, ஒற்றை மரமாகத் திரும்பி வந்தாள். அவள் தவறு செய்ய மாட்டாள் என்று முடிவானபடியாலே, இதிலே தர்க்கம், குறுக்கு விசாரணை நீதிக்காக அழுதல், எதுவுமில்லாமல் சுந்தரம் அவளைத் தம்முடனேயே, ஆயுள் பூராவும், வைத்துக் காப்பாற்ற வேண்டுமென்ற, பிரக்ஞையோடு, அவளை மனதால் அங்கீகரித்து, மனப்பூர்வமாகவே ஏற்றுக் கொண்டார். அவளும் புருஷனிடம் திரும்பிப் போவதை விரும்பாமல் அவர் நிழலியே தங்கி வாழத் தொடங்கிப் பத்து வருடத்துக்கு மேலாகிறது.

சுந்தரம் வருமானவரி இலாகாவில், உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். கை நிறையப் பென்ஷன் வருகிறது. துளசியைத் தவிர வேறு பிள்ளைகள் கிடையாது. மனைவி இளம் வயதிலேயே காலமாகி விட்டாள். துளசியைச் சிரமமில்லாமல் வளர்ப்பதற்கு உதவியாக இருந்தவள் அவளுடைய தாயாரே. அவளும் இப்போது இல்லை. மறைந்து போன உறவுகளிடையே ஒற்றை மரமாகப் பிரிந்து நிற்கும் துளசியின் உறவு மாத்திரம் எப்படி ஒரு காவியமாகும்?

ஒருநாள் அவள் கையில் ஒரு கடிதத்தோடு, அவர் படுத்திருக்கும் அந்த அறைக்கு வந்தாள். சாத்திக்கிடக்கும் ஜன்னலைத்திறந்துவிட்டு அவர் பக்கம் திரும்பினாள். கட்டில் சட்டத்தோடு சாய்ந்து, தலையணையில் நிலைகுத்தில் படுத்தவாறு, முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தார் அவர். வெறித்த அவரின் திரை விழுந்த கண்களினூடே உயிரைத் தேடிப் பார்க்கிற பிரமையில் அவள் நின்றிருந்தாள். பிறகு மெல்ல மெல்ல அந்த உருவம் மறைந்து, அவள்

முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஜன்னலுக்கு வெளியே, நிழல் மங்கிய காட்சித் தொடரில், உயிர் அற்று வரும், தன்னுடைய கிராமத்தின் வெறுமையைக் கண்ட பிறகு, அவளுக்கு எல்லாமே மறந்து போயிற்று.

அப்போது கண்ணை விழித்துச் சுந்தரம் கேட்டான்.

"என்ன துளசி? வெளிநாட்டுக் கடிதமே, விசாகனா போட்டிருக்கிறான்?"

"தெரியேலையப்பா! இது லண்டனிலே இருந்து வந்திருக்கு ஆர் கடிதமென்று புரியவில்லை. எதற்கும் பிரித்துப் பார்க்கிறேனே!"

அவள் கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போதே, உணர்ச்சி நடுங்கியது. அதை அவசரமாகப் படித்து முடித்துவிட்டுக் குழம்பிச் சிவந்த முகத்தை நிமிர்த்திக் கண்கள் கலங்க, அவரைப் பார்த்துக் கொண்டே, ஒட்டாமல், அவள் அடித்தொண்டை வரண்டு பேசுகிற போது குரல் கம்மியது.

"அப்பா! உங்கள் கதையைக் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கு. விசாகனாம்! விசாகன்! அவன் எங்களையெல்லாம் நினைத்துக்கொண்டு, இனிமேல் ஏன் வரப்போகிறான்? அப்படி ஒரு நம்பிக்கை இருக்கிறதா உங்களுக்கு? அதை மறந்துவிடுங்கோ! இந்த வேடிக்கையைப் பார்த்தியளே! அவன் அண்ணை நரேந்திரனைத் தெரியுமல்லே, அவர்தான் லண்டனிலிருந்து, உங்களை வாழ்த்தி எழுதியிருக்கிறார். நீங்கள் நூறு வயதுக்கு மேல் இருக்க வேண்டுமென்று, அவர் பிராத்திக்கிறாராம். இந்த எண்பது வயதிலே, இப்படியொரு ஆசீர்வாதத்திற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே"

அவர் புன்னகை செய்தார்

"என்ன இருந்தாலும், நரேன் நல்ல பிள்ளை தான். என்னை நினைத்துக் கடிதம் போட்டிருக்கிறானே"

"அது மட்டுமா? அவர் தன் குடும்பத்தோட திடீரென்று ஒரு நாளைக்கு இங்கு வரப்போகிறாராம். வந்து உங்களைப் போட்டோ எடுத்துக் கொண்டு திரும்பி போவாராம். இதெல்லாம் பெரிய காரியமில்லையா? அவர் அந்தஸ்து என்ன? அவரின் காலடி பட்டாலே, எங்களுக்கு சாபவிமோசனம் ஆகிவிடுமல்லே! அவர் எப்ப வருவாரோ என்று இருக்கு. நான் விழி ஆடாமல் வாசலையே பார்த்துக் கொண்டிருக்கிறன். என்னப்பா மௌனமாகி விட்டீர்கள்? இன்னும் கேளுங்கோ! இருபது வருடங்களுக்கு முன் எங்களைச் சுற்றித் துருவநட்சத்திரம் மாதிரி, ஜொலித்துக்கொண்டிருந்த விசாகன் கதை தெரியுமா? நரேனண்ணா அவனைப் பற்றித்தான் கவலையாக எழுதியிருக்கிறார். அவன் நாடோடி மாதிரித் தேசம் தேசமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறானாம். அவன் எங்கேயிருக்கிறானென்று தெரியவில்லையாம்"

"சரி இனிமேல் எதுவும் நமக்குத் தெரிய வேண்டாம். துளசி காலம் எவ்வளவு கொடூரமாக மாறிவிட்டது பார்த்தாயா?"

இல்லையப்பா! இதுக்குக் காலம் என்று நினைக்கிறதே ஒரு சமாதானப் போர்வையாக இருக்கு. வெறும் காலம் மனிதனை விழுங்குமா? நான் ஏன் இப்படி வைரமரமாக நிற்கிறன். வாழ்க்கை லட்சியத்தில், குலையாமல் தேர்வடப் பழகியவனுக்குப் பாதை சறுக்குமா, என்ன? போங்கோவப்பா! இதுகளையெல்லாம், மறந்துவிட்டுத் தூங்கப் பாருங்கோ! நான் போறன்.

"நில் துளசி, கெட்ட கனவை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கு"

"அப்பா! கெட்டகனவு தான் சதா உறுத்திக் கொண்டேயிருக்கு. நீங்கள் விழித்துக் கொண்டிருக்கும் போதே, நான் எரிந்த ஜடமாய் திரும்பிவந்தது உண்மையில்லையா? அந்த உண்மையையே, ஒரு கெட்ட கனவு என்று நினைத்தால், எவ்வளவு சந்தோஷமாக இருக்கு, இதுக்காக ஒரு பொய்யைத் தேடிக் கொண்டு போய்ச் சாக முடியுமா? எது முக்கியம் சொல்லுங்கோவப்பா!"

இதைச் சொல்லிக் கொண்டிருந்தவள், பொங்கி வரும் அழுகையை அடக்க முடியாமல், முகத்தைத் திருப்பிக் கொண்டு, அவருக்குத் தெரியாமல் கண்ணீர் வடித்தாள். அவளின் கன்னமெல்லாம் வழிந்தோடிய அந்தக் கண்ணீர் மனதில் ஏற்பட்ட கறையைக் கழுவுவதுபோல, மார்பிலே விழுந்து தெறித்தது.

அவள் வெகுநேரமாய், அப்படியே தன்னை மறந்து நின்றிருந்தாள். நரேந்திரனின் கடிதம், இன்னும் கையில் உறுதிக் கொண்டிருந்தது. அவள் இதை எதிர்பார்க்கவேயில்லை. ஒரு யுகம் கழித்து அது வந்து சேர்ந்திருக்கிறது. இரு துருவங்களாக ஒட்டாமல் பிரிந்து போன உறவை நினைத்துப் பெருமைப்பட என்ன இருக்கிறது? என்றுதான் அவள் நினைத்தாள்.

அப்பா வேறுவிதமாக நினைக்கலாம், அவரின் திருப்திக்காகப் பதில் எழுதிப்போட வேண்டியதுதான் என்று யோசித்தவாறு, அவள் அக்கடிதத்தை மேசைமீது பத்திரப்படுத்தி வைத்து விட்டு, அப்பாவிடம் திரும்பினாள்.

அவர் தன்னை மறந்து, தூங்கிக் கொண்டிருந்தார். பகல் முழுவதும், பேப்பர் வாசித்துக் கொண்டு கிடப்பார். இரவு ஏழு மணிக்கே தூக்கம் வந்துவிடும். யாரும் சத்தம் போட்டு, அவரை எழுப்பக்கூடாது.

பகலில் துளசியைத் தேடிக்கொண்டு, நிறையப்பேர் வருகிறார்கள். அவளுக்கு எல்லோரிடமும் சிரத்தையான அன்பு உண்டு. பேதமின்றி அவள்

எல்லா மனிதர்களோடும், மனம் விட்டு இயல்பாக பழகி வருவதால், அவளுடைய உறவு ஊரை இழுத்துக் கொண்டிருக்கிறது. குழந்தைகள் ஓயாமல் வருவார்கள். அவர்களை இழுத்து வைத்துக் கொண்டு, அவள் கதை சொல்லிக் கொண்டிருப்பாள். பகலில் ஒரே அமளிதான். இரவு ஆறு மணிக்குப்பிறகு பூட்டிய கதவுகளுடன், அவளின் வீடு ஒரு தவச்சாலை மாதிரி இருக்கிறது. அப்பா தூங்கியதும், அவள் நிச்சிந்தையாக, வாசல் தூணருகே சாய்ந்து கொண்டு, விழித்துக் கொண்டிருப்பாள். அவள் படுப்பதற்குப் பத்து மணிக்கு மேலாகும்.

நிலவு தெரிய ஆரம்பித்துவிட்டது. இரவு கனத்த அமைதியினிடையே, அப்பாவின் குறட்டை ஒலி, காற்றுப் பிரவாகமாய், காதை நெருடிவிட்டுப் போகிறது.

அவள் அதைக் கேட்டவாறே, மனமில்லாமல் ஏதோ சாப்பிடுவதாகப் பெயர் பண்ணிவிட்டுத் தன் அறைக்குத் திரும்பினாள். அவளை அக்கறையுடன் கவனித்துக் கொள்ள யார் இருக்கிறார்கள்? எப்படிப் பார்த்தாலும் அவள் ஒரு திக்கற்ற பேதைதான். சுந்தரமும், இன்னும் எவ்வளவு நாளைக்கு இருக்கப் போகிறார்? தந்தை போனால் ஒரு பெண்ணுக்குப் புருஷன் நிழல், அதுவும் போனால், பிள்ளை பார்த்துக் கொள்வான்.

"நான் யாருடைய நிழலில் தங்கப் போறன்? என்ன இருந்தாலும், நான் ஒரு பெண்தானே, இதை மறந்துவிட்டு, உணர்ச்சியை விளையாட்டாக, நினைத்துக் கொண்டு வாழ்க்கை லட்சியத்தைக் கடைப் பிடிக்கிறதாய் சொல்லிக் கொள்வதிலே, என்ன லாப மிருக்கு? என்னை உரிய வழியில், பவுத்தர உணர்வோடு காப்பாற்றிக் கொள்ள இது மட்டும் போதுமா? அப்ப நான் ஏன் தனியாய் இருக்கிறேன்? அவரை நம்பிக் கொண்டு, நான் சேற்றிலே புதைந்தது போதும். டைவேர்ஸ் எடுத்துக் கொண்டு வேறு கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கலாமே! ஏன் முடியேலை?"

அவள் இதையெல்லாம், மிகவும் கவலையோடு, மனம் குழம்பியவாறே, இரவு வெகுநேரம், தூக்கம் வராமல் படுக்கையிலே புரண்டு கொண்டிருந்தாள். தலைக்கு மேலே தூரத்தில், நிலா பிரகாசமாக எழுந்து கொண்டிருந்தது. வாழ்க்கையின் வஞ்சகக் கறையே படியாமல், குணங்களாலும் அன்பு காட்டுகிற மனங்களாலும், உயர்ந்து நிற்கிற மனிதர்களைப் போல், கறையே படியாத அதன் முகம், வானத்துத் திரையில் பிரகாசமாக ஒளிர்ந்தது, அவள் முகத்தை நிமிர்த்தி அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஏன் முடியேலை? என்று மீண்டும் தன்னையே கேட்டுக் கொண்டாள்.

ஒரு பெண்ணைப் பொறுத்தவரை, எது அவசியமோ, அது புருஷன் அன்பு, அவனாலேயே கிடைக்கிற உண்மையான சந்தோஷங்கள். நம்பிக்கை கொள்ள வைக்கிற துணை இவையெல்லாம் கிடைக்காமல் போனால், அந்த நிழலிலிருந்து நிலையாகவே ஒதுங்கிவிட வேண்டியதுதான். இன்னொரு நிழலை நம்பி எப்படிப் போறது? நான் இனிமேல் இப்படிக் கறை பட்டுப்போக விரும்பேலை. வாழ்விலே, இதைவிட எவ்வளவோ இலட்சியங்களெல்லாம் இருக்கு. புருஷன் துணை இல்லை என்ற நினைப்பிலே, நான் வெறுமைப்பட்டு நிற்கிற மாதிரித் தோன்றினாலும், உண்மையில் எனது இயல்பான குணங்களை இழந்து விட்டு, நான் மாறவேயில்லை. ஒரு சாதாரண மனித உறவின் விருத்திக்காக, வாழ்வின் புனிதங் களைப் பங்கப்படுத்திக் கொள்வதிலே, என்ன நியாமிருக்கு? இப்படி வருகிற, எதற்கும் மாறாத, அன்பின் புனிதமே, எல்லாப் பாவங்களையும் சுட்டெரிக்கப் போகிறது. இதுவே எனக்கு ஒரு சாபவிமோசனம் ஆகிவிடாதா?

நிச்சயம் ஒரு நாளைக்கு என்னைத் தேடிக் கொண்டு விசாகன் வந்து நிற்கத்தான் போறான். அவனைப் பார்த்து ஒரு யுகமாச்சு. சின்னவயதிலே எங்கள் கிராமத்தை நினைத்துக்கொண்டு, டவுனிலிருந்து அடிக்கடி அவன் வந்து நிற்கிறபோதெல்லாம் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். அப்பவெல்லாம் அவன் மனம் எத்தனை தெளிவாக இருக்கும் களங்கமில்லாத அவனின் நட்பு, எனக்கு இயல்பான, மாறவே முடியாத என்னுடைய கிராமத்துப் பாமர குணங்களுக்கு ஈடாகவே சந்தோஷத்தை அளித்தது. அப்போது அவன் துருவநட்சத்திரம். இப்ப எதுக்கோ கறை பூசிக் கொண்டு அலைகிறான். வானத்திலே உயர நின்று ஒளிவீசிப் பிரகாசித்த அந்தத் துருவ நட்சத்திரத்தை, உண்மையில் காலம்தான் விழுங்கியதா? மீண்டும் அவன் வருவானா?

"விசாகா? உன்னை உறவென்று நினைத்து நான் அழவில்லை. இந்த மண்ணிலே கறை பூசிக் கொண்டு விழுந்த ஒரு எரிநட்சத்திரம் நீ, நீ விழுந்த இடத்தில் எல்லாம் எரிந்து போகும். அப்படிப் போனால் மிஞ்சுவது யார்? உலகம் எங்கே திரும்பிக் கொண்டிருக்கிறது? எனக்கு இதுக்கு ஓர் பதில் சொல்லத் தெரியேலை, கிழக்குத் திசையையே பார்த்து, என் விழியெல்லாம் நனைந்து போகிறது. இருட்டிலே சூரிய நமஸ்காரத்துக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறன். சதா அரித்துத் தின்னும் மனித உறவுகளிடையே, சிறு வயதிலே எனக்கு உன்மீது ஏற்பட்டுப்போன, அன்பு, நம்பிக்கை ஒன்று மட்டும்தான். என் மனதிலே சாசுவத உண்மையாக, நிலைத்திருக்கு. அது கற்பனை என்று தோன்றுகிறபோது, ரொம்ப வேதனையாக இருக்கு, உண்மையும், கற்பனையுமாக, வாழ்க்கையில் நிழல் பிரிந்து நிற்கிறது. இந்த நிழலிலே தூங்கிச் சாகிறதை விட இப்ப தூக்கமே ஒரு சுகமாக இருக்கு!.

அதன்பிறகு தரையிலே அவள் பாயை விரித்துப் போட்டுக்கொண்டு, நிம்மதியாகத் தூங்கினாள்.

(தொடரும்...)

சிலாபம் திண்ணனூரான்

# மாயாண்டி



காலையில் பெய்யத் தொடங்கிய மழை சாய்ந்தரம் ஆகியும் ஓய்ந்ததாக இல்லை. தோட்டத்தின் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து அருகேயிருந்த மரக்கறி தோட்டங்களையும் அழித்து கொண்டு இருந்த நேரம் அது.

அப்போது மணி சாயந்தரம் ஐந்து என்பதை வானம் பூமிக்கு காட்டிக் கொண்டு இருந்தது. தோட்டத்து சனங்கள் அந்தி கொழுந்தை பொட்டுக்களத்தில் நிறுத்து கொடுத்து விட்டு படிக்கட்டு குறும்பாதை வழியாக தோட்டத்து லயத்தை நோக்கி வந்து கொண்டு இருந்தனர்.

அப்போது பெருமாயி தனது மகள் கமலா சவுதியிலிருந்து அனுப்பிய கடுதாசியை தோட்டத்து தபால்காரனிடமிருந்து பெற்றுக் கொண்டு கோவில் லயத்து முதல் காம்பராவுக்குள் நுழைந்தாள். மகளின் கடுதாசியை பெற்றும் பெருமாயியின் மனசு அதிரடியாக மத்தாப்பாய் சிரித்தது.

பெருமாயியின் லயத்து காம்பராவின் ஸ்தோப்பில் மழைத் தண்ணீர் நிரம்பியிருந்தது. தனது தலையில் சுமந்து கொண்டு இருந்த தேயிலைக் கூடையை இறக்கி சுவரின் ஆணியில் மாட்டி வைத்த பெருமாயி தன் தலையில் கிடந்த கொங்கானியையும், இடுப்பில் அட்டைக்கடிக்கு பயந்து தன் கால்களை பாதுகாக்க சுற்றி கட்டியிருந்த படங்கு சாக்கையும் கழற்றி கூடைக்குள் போட்டாள். பின்னர் மெதுவாக தன் லயத்து காம்பராவின் கூரையை அண்ணாந்து பார்த்தாள்.

ஏழவு வீட்டின் பெண்கள் கண்ணீரை சொட்டு வதைப் போல இத்துப்போன கூரை தகரங்களிலிருந்து மழைத்தண்ணீர் சொட்டு சொட்டென நிலத்தில் விழுந்து காம்பராவை அசிங்கப்படுத்தியது. அடுப்பங்கரையில் கிடந்த குண்டானையும் சட்டி பானைகளையும் கூரை தகர ஓட்டைகளுக்கு நேராக வைத்தாள் பெருமாயி.

அப்போது பெருமாயியின் ஒரே பேரனான மாயாண்டி மழையையும் பொருட்படுத்தாது தோட்டத்து பந்தடிக்களத்தில் விளையாடி விட்டு மழையில் நனைந்தவாறு லயத்து காம்பராவுக்குள் நுழைந்தான்.

பேரன் மாயாண்டியை கண்டதும் பெரு மாயிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. பொத்துக் கொண்டு வந்த கோபத்தையும் மடக்கி அடக்கி கொண்டு "வாங்க தொர வாங்க மழையினும் பார்க் காம வெளயாடிவிட்டு இப்படி நனைஞ்சிக்கிட்டு வர்றீங் களே. இது எல்லாம் நம்ப பொழைப்புக்கு சரி வருமா? இந்தாப்பா ஒன்னுாட்டு அம்மா கமலா சவூதி நாட்டுல யிருந்து கடுதாசி போட்டு இருக்கா வாசித்து சொல்லப்பா"

ஆசை ஆசையாக வேகமாக தன் அம்மாவின் கடுதாசியை திறந்தான் மாயணடி. கமலாவின் கடுதாசியில் இங்கும் அங்குமாக எழுத்துக்கள் கிறுக்கல் நடையில் ஓடி, ஆடி விளையாடி இருந்தன. மாயாண்டி வாசிக்க இயலாது தட்டுத்தடுமாறினான். பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு கஷ்டப்பட்டு கடுதாசியை வாசிக்கத் தொடங்கினான்

அம்மாவுக்கு, நான் நல்ல சொகமாய் இருக்கிறேன். அங்கே நீங்கள் எல்லோரும் எப்படி இருக்கீங்க.

நானும் சவூதிக்கு வந்து மூனு வருசங் களாச்சு. உங்களை எல்லாம் பார்க்க ஆசையாகத்தான் இருக்கு. என்ன செய்ய என் தலைவிதி இப்படியாகி போச்சு. ஏஜென்சிக்காரன் என்னை ஏமாத்தி புட்டான். இரண்டே வருசம் எகிரி மெண்டுன்னு சொன்னான். இப்ப மூனு வருசமும் முடியப்போவுது. இங்கு தெனமும் மூனு வீட்டில்ல வேலை செய்ய வேண்டி யிருக்கு. மூனு விட்டுக்காரன்களும் பொலீசில்ல பெரிய வனுங்க. அவர்களை எதிர்த்து ஒன்றுமே பேச முடியாது. பேசினா அடி, உதை தான் கெடைக்கும். போன வாரம் கூட தலைவலிக்குதுன்னு படுத்த படுக்கையா கெடந்தேன். கொதிக்கிர தண்ணீரை என் மேல் ஊத்தப் பார்த்தாங்க. முழிச்சு இருந்ததினால

தப்பிச்சேன்.

இங்க வாராம தோட்டத்துலயே தேயிலை செடியோடயே மல்லுக்கட்டிக் கொண்டு கெடைக்கிறதுப் போது முன்னு இருந்திருக்கலாம். நம்ப சனங்கள் யாரையும் வெளிநாட்டுக்கு வரவேணாமுன்னு சொல்லுங்க. இந்த ஊரு எல்லாம் சொர்க்கமென நெனைக்காதீங்க. இந்த ஊருத்தான் நம்பமாதிரி ஆளுகளுக்கு நரகமாகும்.

குடிகார மனுசன்ன கட்டப்போய் என்னுட்டு உழைப்பை எல்லாமே அங்கு இருந்தப்போ குடிச்சு குடிச்சே என் புருசன் அழிச்சுப்புட்டாரு. இப்பவாவது ஒழுங்காக என்னுட்டு புருஷன் இருக்கிறாரா? வெரம் ஒன்னுமே தெரியல்ல. அவரை நினைச்சா என் மனசு பதறுது. யாரு செய்தப் பாவமோ ஊருப்பேரு தெரியாத ஊருக்கு வந்து நான் நாயாய் சீப்படுறேன்.

என் புள்ளை மாயாண்டி நல்லாப் படிக்குறானா? கொட்டகல கெரகோப்புக்கு பக்கத்துல வாங்கிய காணியல நான் வந்ததும் வீடு கட்டணும். நானு அனுப்பிய பணத்தை பேங்கில போட்டு வைங்க வட்டியாவது கெடைக்கும் பணத்தை என் புருஷனுக்கு காட்ட வேணாம். இந்த மாசம் பணம் அனுப்பவில்லை. அடுத்த மாசம் ரெண்டு மாசம் பணத்தையும் சேர்த்து அனுப்புகிறேன்.

மகன் மாயாண்டிக்கு இருமல் எப்படி இருக்கு. கைகாசு கொடுத்து டவுண்ணு ஆஸ்பத்திரியில்ல மருந்து எடுங்க. இங்க வெள்ளன காலை நாலு மணிக்கு வேலை ஆரம்பிச்சா மூனு வீட்டு வேலையையும் முடிக்க பொழுது சாஞ்சு ராவு பனிரெண்டு மணிக்குத்தான் முடியும்.

(இப்போது மாயாண்டியின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டத் தொடங்கியது.)

என் புருசன் அழுக்குக் கோழி. கவனமா சாமான் சட்டு முட்டுகளை பார்த்துங்க. வித்து குடிச்சு அழிச்சுப்புடும். நான் வரக்கே குசினிக்கு தேவையான சாமான்களை கொண்டு வர்றேன். என் புருசன் குடிக்க கேட்டு அடாத்து பண்ணி குறுக்கு மறுக்க பேசினா ஒன்றுமே பேசாதீங்க. எசக்கு மொசாக்கா பேசிப்புடும்.

நம்ப தோட்டத்து மாரியாத்தாவுக்கு இந்த வெள்ளிக்கிழமை பூசை கொடுங்க. எனக்கு ஆறுதல் சொல்ல இங்கே யாருமே இல்லை. என் உசிரு அங்கத்தான் இருக்கு. அம்மா, மகன் மாயாண்டி நெனைப்பிலேயே இங்க முக்கி மொனகிகிட்டு வேலை செய்கிறேன். வேறு ஒன்னும் விசேசம் இல்ல.

இப்படிக்கு மகள்
கமலா

மீண்டும் மாயாண்டியின் கண்களில் கண்ணீர் வழியத் தொடங்கியது. தன் அம்மாவின் ஆதங்கம் அவனது மனதில் அலைபோல் முட்டி மோதியது.

கமலாவின் கடுதாசி பெருமாயியையும் மாயாண்டியையும் அதிரடியாக அதிரவைத்து கவலை கொள்ள வைத்தது. பெருமாயி தன் கவலையை மனதிற்குள் முடக்கி வைத்துக் கொண்டு தலையாட்டி பொம்மையைப் போல மௌனம் காத்தாள். இப்போது



மழையும் ஓய்ந்தது.

பெருமாயி காம்பராவின் ஸ்தோப்பின் அடுப் பங்கரையில் உட்கார்ந்தவாறு இரவு சாப்பாட்டுக்கு ரொட்டி சுடுவதற்காக கோதுமைமாவை பேசனில் போட்டு பிணைந்து கொண்டு இருந்தாள். தேயிலை மிளாரும் மழையில் நனைந்து இருந்தது. நனையாத மிளாருகளை கட்டிலிருந்து உருவி அடுப்புக்குள் திணித்தாள்.

அப்போது மணி ஏழு ஆகி விட்டது.

லந்தாரலாம்பு வெளிச்சத்தில் அவசர அவசரமாக மாயண்டி தன் தாய்க்கு கடுதாசி எழுத தொடங்கினான்.

அன்புக்குரிய அம்மாவுக்கு

மகன் மாயாண்டி எழுதுவது என்ன வென்றால் உங்களின் அன்பான கடுதாசி கிடைத்து வெவரம் தெரிந்துக் கொண்டேன். உங்கள் கடுதாசியை பார்த்ததும் அழுதே விட்டேன். (மாயாண்டியின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் கடுதாசியில் விழுந்து கறையாக ஒட்டிக் கொண்டது.) அப்பாவின் திருவாலித்தனம் இன்னும் ஓயவே இல்லை. பீலியைந்து அருணாசலத்தின் மகளோட தொடர்பு வச்சுக்கிட்டு விடிஞ்சா தொழிலுக்குப் போகாம அவ லயத்துக் காம்பரவுக்குள்ளேயே சீக்கு புடிச்ச கோழி யைப்போல கெடக்கிறாரு. அம்மாயி எவ்வளவோ புத்தி சொல்லியும் கேட்கல்ல. நம்ப தோட்டத்து தலைவரும் எவ்வளவோ புத்தி சொன்னாரு. "நீ யாருடா எனக்கு புத்தி சொல்ல" என வம்புக்கு வந்து பெரிய ரகளையாகி விட்டது. எனக்கும் ஸ்கூலுக்குப் போக பிடிக்கவில்லை. ஸ்கூல் பயலுக நையாண்டிப் பண்ணுறாங்க.

போன செவ்வாய்கிழமை எங்கோ போயி நல்லா குடிச்சுப்புட்டு வெறியில்ல வந்து "அடியே கெழவி. நீ என்னா பெரிய மனுசியா. மவ வெளியூர்ல்ல

இருந்தா நாங்க பயப்படுனுமா, பெரிய நக்கலா பேசாதே வாயை கிழிச்சி சாக்கு தைக்கிற ஊசியால தைச்சுப் புருவேன். கவனமாயிரு. மூக்கு மொகறய பேத்துப் புருவேன்னு சொல்லி கத்த கோவிலு லயத்து சனமே கூடி வேடிக்கை பார்த்து சிரிச்சாங்க

இப்ப அவுரூட்டு அட்டூழியம் பொறுத்துக் கொள்ள முடியல்ல. இவரின் அட்டூழியத்தை பார்க்கும் தோட்டத்து நண்டு சுண்டு பயலுக எல்லாம் நையாண்டி யாக பேசுறாங்க.

நீங்க அனுப்பும் பணத்தை பேங்கில போட்டு வைத்திருக்கேன். நீங்க மொத ஒரு வருசமாக அனுப்பிய பணத்தை அப்பா குடிச்சே முடிச்சிட்டாரு. இப்ப அம்மாயி கணக்கில்ல போட்டு வச்சிருக்கிறேன். இதற்கு ஸ்கூல் டீச்சர் மணிமேலைதான் பேங் மனேசரோட கதைச்சு செஞ்சு தந்தாங்க. உங்கள் உழைப்பின் பணம் வீண்போகவில்லை. பாதுகாப்பா இருக்கு. இதெல்லாம் அவருக்கு தெரியாது.

நீங்க இதுவரை எனக்காக கஷ்டப்பட்டு உழைச்சது போதும். நம்ப ஊருக்கு திரும்பி வந்துடுங்க இனியும் கஷ்டப்பட வேண்டாம். நான் படித்து முடிந்ததும் உழைக்க முடியும். இப்போது ஸ்கூல் முடிந்து லயத்துக்கு வந்ததும் நம்ப மரக்கறி தோட்டத்தில் லீக்ஸ். கோவா வெதைச்சு நல்ல பயன் கெடைக்குது.

வீட்டு செலவுக்கும், படிப்பு செலவுக்கும் எடுக்கும் காசு போக மிகுதிக் காசை அப்பாவுக்கு தெரியாம என் பேருக்கு பேங்கில்ல கணக்கு தொறந்து போட்டு வைத்திருக்கேன்.

ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். அம்மாயி முன்போல வேலை செய்ய முடியாது. எதற்கும் கவலைப் பட வேண்டாம். அம்மா நீங்க வந்ததும் அப்பாவின் நடத்தையை சொல்லி திருத்துவோம். எதற்கும் நம்ப தோட்டத்து மாரியாத்தா நம்மை கைவிடாது. நம்ப கஷ்டப்பட்டு நேர்மையா உழைக்கிறோம். அதுனால்ல நேர்மையானவர்களை ஆத்தா கைவிட மாட்டாள்.

இப்படிக்கு மகன்
மாயாண்டி

விமானமார்க்கமாக மாயாண்டியின் கடுதாசி மூன்றே நாளில் கமலாவின் கைகளுக்கு வந்து சேர்ந்தது. கடுதாசியை பிரித்து வாசித்து விபரங்களை கமலா தெரிந்துக் கொண்டதும் திகைத்து உறைந்து போனாள்.

பின்னர் சில விநாடிகளில் சுயநினைவுக்கு திரும்பியவள். ஓ வென கதறி ஒப்பாரி வைத்து அழுதாள். அவளின் கதறலுக்கும் ஒப்பாரிக்கும் சமாதானம் சொல்ல சாதிசனம் யாருமே அங்க இருக்கவில்லை. அப்போது அவளது மனம் கசங்கிப் போய் இருந்தது. அவளது மனதுக்குள் இப்போது மாயாண்டி மகனாக இல்லை, தெய்வமாக நின்றான்.

இவ்வளவுக்கும் அந்த மாயாண்டிக்கு வயது என்ன தெரியுமா? வெறும் பதினான்கு மட்டுமே தான். இப்ப நம்ப மனசும் அதிருதுதானே.

# நிகழ்தகவாய் - "நான்"

என் வீட்டு முற்றத்தில்
தோல்வி பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த
காலத்தில்
நானும் நம்பிக்கையும்
நண்பர்களாக இருந்தோம்...

வெற்றி
என் விலாசத்தை
அறிந்து கொண்டபோது
நானும் நம்பிக்கையும்
காதலர்களாயிருந்தோம்...

எப்போதும் நம்பிக்கை
என் கூடவே இருப்பதைக் கண்ட
தலைக்கனம்
என் விருந்தாளியாய்
வரத் தொடங்கியது...

நாளடைவில்
தலைக்கனம்
என் வீட்டில் தங்கிக் கொள்ள
ஏற்கெனவே குடியிருந்த
மரியாதையும் கௌரவமும்
விடைபெற்று விட்டன...

எப்போதாவது
தலைக்கனம்
வெளியே செல்ல நேர்ந்தால்
நம்பிக்கையும் கூட சேர்ந்துவிடும்.
திரும்புகையில் பயத்தையும் விரக்தியையும்
அறிமுகம் செய்து வைக்கும்...


இனி,
குப்பைகளால் நிறைந்து கிடக்கும்
என் முற்றத்தை சுத்தம் செய்து
பணிவும் அடக்கமும்
பங்காளியாகிவிட வேண்டும் - எனில்
தோல்வியும் பூக்க வேண்டும் என
நம்பிக்கை அறிவுரை சொல்ல
தலைக்கனம் சத்தமாக சரித்துக் கொள்கிறது.

– கேவெல். நப்லி,அட்டாளச்சேனை

## அந்தனி ஜீவாவின் அரை நூற்றாண்டு அனுபவங்கள்

# ஒரு வானம்பாடியின் கதை

11



அந்தனி ஜீவா

எண்பதுகளில் மலையக கலை இலக்கிய பேரவை உதயமானது. அதன் பின்னர் மலையக கலை இலக்கிய வாதிகளை அரவணைத்துக் கொண்டு எங்கள் பணி ஆரம்பமானது. மலையக இலக்கியத்திற்கு முன்னோடியும், மலையக தொழிற்சங்க முதல்வருமான பன்முக ஆற்றல் கொண்ட ஒருவர் மலையக மக்களின் தலைவராக இருந்து அவர்களின் முன்னேற்றத்திற்காக செயற்கரிய செயல்களை செய்துள்ளார். இவரைப்பற்றி கலாநிதி குமாரி ஜெயவர்தனா தொழிற்சங்க வரலாறு பற்றி ஆங்கிலத்தில் எழுதிய நூலில் கோ.நடேசய்யர் பற்றி ஓர் அத்தியாயம் எழுதியிருந்தார்..

இதனை படித்த பொழுது. இவரைப் பற்றி தகவல்கள் எதுவும் தெரியுமா? ஒரு கட்டுரை எழுதி தரும்படி நண்பரும், ஆய்வாளருமான சாரல்நாடனிடம் கேட்டேன். அவர் நூலகங்களில் தேடி ஒரு சிறிய கட்டுரை எழுதியனுப்பியிருந்தார்.

அந்தக் கட்டுரையை தினகரன் பிரதம ஆசிரியர் திரு.ஆர்.சிவகுருநாதனிடம் கொடுத்தேன். அந்த வாரம் ஞாயிறு தினகரன் வாரமஞ்சரியில் நடேசய்யரின் சில முக்கியமான படங்களுடன் கட்டுரை வெளிவந்திருந்தது. அந்த படங்கள் எங்கு கிடைத்தது என்று ஆசிரியரிடம் கேட்ட பொழுது, கோ.நடேசய்யர் சிலகாலம் தினகரன் ஸ்தாபனமான லேக்கவுஸ் நிறுவனம் வெளியிட்ட ஒப்சோவர் ஆங்கிலப்பத்திரிகையில் பணியாற்றினார் என்ற தகவல் கிடைத்தது.

பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் தலைவராக பணியாற்றிய தொழிற்சங்கவாதி எஸ்.நடேசனும், கலாநிதி குமாரி ஜெயவர்தனாவும் லண்டனில் ஒன்றாக கல்வி கற்றவர்கள். கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா கோ. நடேசய்யர் பற்றிய பல தகவல்களை கூறினார். கொழும்பிலுள்ள தேசிய சுவடி கூடத்தில் பழைய பத்திரிகைகளில் நடேசய்யர் பற்றிய தகவல்கள் கிடைக்கும் என்று நடேசய்யர் பற்றிய தேடலுக்கு வழிகாட்டினார். அவருக்கு தமிழ் தெரியாத படியால் கோ.நடேசய்யரின் அரசியல், தொழிற்சங்க பத்திரிகைப்பணிகளைப் பற்றி முறையான தகவல்கள் சாரல்நாடன் எழுதும் ஆய்வு நூலில் இடம்பெற வேண்டும் என்றார்.

மலையக கலை இலக்கியப்பேரவை கோ. நடேசய்யர் பற்றிய ஒரு கருத்தரங்கை கண்டியில் உள்ள சத்தியோதய மண்டபத்தில் ஒரு முழுநாள் விழாவாக கருத்தரங்கை எஸ்.நடேசன் தலைமையில் நடத்தியது. கலாநிதி குமாரி ஜெயவர்தனாவும் கலந்து கொண்டு ஆக்க பூர்வமான கருத்துக்களை வழங்கினார்.

தேசபக்தன் கோ.நடேசய்யர் என்ற நபருக் காக நானும் நண்பர் சாரல்நாடனும் சோ.நடேசய்யரின் அரசியல், தொழிற்சங்க, பத்தரிகைதுறை பணிகளைப் பற்றி தூசி படிந்த பழம் பத்திரிகைகளைப் படித்து பல தகவல்களை திரட்டினோம். நான் தமிழ் பத்திரிகை களில் தேடுதல் நடத்துவேன். சாரல்நாடன் ஆங்கிலப் பத்திரிகைகளில் குறிப்புகள் எடுப்பார். இந்த நடேசய்யரின் ஆய்வுக்காக பூண்லோயாவிலிருந்து அடிக்கடி கொழும்புக்கு வர வேண்டிய சூழ்நிலை. பல நாட்கள் அவர் லீவு எடுத்த காரணத்தால் தொழிலை இழக்கும் நிலை கூட ஏற்பட்டது.

எழுத்தாளர் சாரல்நாடனின் அயராத முயற்சியின் காரணமாக கோ.நடேசய்யர் பற்றி புதிய தகவல்கள் பல வெளிச்சத்திற்கு வந்தன. இந்த நூல் அச்சிலிருக்கும் பொழுது இதனை வெளியிட வேண்டாம் என எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. மலையக முதல் தொழிற்சங்க பிதாமகனான

கோ.நடேசய்யரின் ஆய்வுநூலாக "தேசபக்தன் கோ.நடேசய்யர்" நூலை கொழும்பில் சிறப்பாக வெளியிட ஏற்பாடு செய்தோம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு.எஸ்.தொண்டமான அவர்களை நூலை வெளியிட்டு வைக்க அழைத்தோம். அவரை நேரில் சென்று அழைத்த பொழுது நூலை பார்க்காமல், படிக்காமல் வரமாட்டேன்" என்றார். நூலின் பிரதியை வெளியீட்டு விழாவிற்கு பத்து நாட்கள் இருக்கும் பொழுது நானே நேரில் சென்று கொடுத்தேன்.

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் உள்ள "தப்ரபேன்" ஓட்டலில் நூல் வெளியீட்டுவிழா, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு.செ.இராசதுரை தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் எஸ்.தொண்டமான் நூலை வெளியிட்டு வைத்தார். அப்பொழுது அவர் சொன்ன சில வார்த்தைகளை இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். "இந்த நூலின் ஆசிரியர் சாரல்நாடனும், நூலை பதிப்பித்த அந்தனிஜீவாவும் பிராமணர்களில்லை. அந்தனிஜீவா இங்கு வந்து சேவையாற்றிய நடேசய்யர் என்ற பிராமணனைப் பற்றிய இந்த நூலை இவர்கள் எந்த வித வருமானமும் கருதி வெளியிடவில்லை. அதனால் இவர்களை பாராட்டுகிறேன்" என்றார்.

தேசபக்தன் கோ.நடேசய்யர் என்ற நூலின் முதல் பிரதியினை கண்டியிலிருந்து வந்த இலக்கிய ஆர்வலர் ஸ்ரீலங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி பெற்றுக் கொண்டார். இவரும் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் தந்தையாரான "சமூகஜோதி" எஸ்.முத்தையா இருவரும் மலையக கலை இலக்கியப்பேரவை வளர்ச்சியில் அக்கறை கொண்டு துணை நின்றவர்கள்.

எனக்கு ஏற்பட்ட இன்னொரு மிகமுக்கிய சம்பவத்தை இங்கு பதிவு செய்ய வேண்டும். இலங்கை அரசின் கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியில் தமிழ்த்தினப்போட்டியை ஆண்டுதோறும் நடத்தும். முதல் பிரதேச ரீதியாகவும், பிறகு மாகாண மட்டத்திலும், அதற்கு பிறகு தேசிய ரீதியிலும் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கம், விருதுகள் வழங்கப்படும்.

அகில இலங்கை ரீதியாக வெற்றிபெற்றவர்கள் இறுதிப்போட்டிக்கு வருவார்கள். இறுதித் தேர்வுக்கு வருபவர்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரை, பேச்சு, விவாதம், பண்ணிசை, நாட்டார்பாடல் என பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றி, மாணவர்கள் தங்கள் ஆளுமைமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்துவார்கள். தமிழ்த்தின போட்டிகளில் இறுதித்தேர்வுகளில் நாடகங்களை தேர்வு செய்யும் நடுவர்களில் ஒருவராக என்னை அழைப்பார்கள். இதனை நான் ஒரு கடமையாக கருதி செயற்படுவேன். அத்துடன் நான் ஆசிரியராக இல்லாத காரணத்தால் நாடகக் கலைஞர் என்ற காரணத்தால் எனது தீர்ப்பினை விழாக் குழுவினர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

ஒரு தடவை கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டப் போட்டி கண்டி பதியுத்தீன் கல்லூரியில் நடைபெற்றது. நாடகத்தேர்வில் பன்விலை என்ற இடத்தைச் சேர்ந்த தோட்டப்பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றது. இரண்டாம் இடத்தை கம்பளையைச் சேர்ந்த முஸ்லீம் பாடசாலை பெற்றது.

நாடக தேர்வுக்குழுவில் என்னோடு மலையகத்தின் மூத்த எழுத்தாளர் ஏ.பி.வி.கோமஸ், புசல்லாவ இஸ்மாலிகா ஆகியோர் செயற்பட்டனர். மாகாண ரீதியாக நடைபெறும் போட்டிகளில் முதலிடத்தை பெறுபவர்களுக்கு போட்டியின் இறுதியில் பரிசளிப்பது வழக்கம். பரிசுகளை வழங்குவதற்கு வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் வந்திருந்தார். நாடக தீர்ப்பு பிழையானது என்றும் முஸ்லீம் மாணவர்களுக்கு அநீதியிழைக்கப் பட்டுள்ளது என அமைச்சரிடம் கூறப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குவதற்கு முன்னர் விழா ஏற்பாட்டாளர்கள், கல்வி அமைச்சின் அதிகாரிகள், நாடகத்தில் நடுவர்களாக பணியாற்றியவர்களையும் அழைத்து அமைச்சர் விபரம் கேட்டார். "நாடகத்தீர்ப்பு பிழையானது என்று சொல்கிறார்களே உங்களது கருத்து என்ன" என்று என்னிடம் கேட்டார்.

நாடகப் போட்டிக்கு நடுவர்களாக பணியாற்றியவர்களின் சார்பில் நாடகங்களை முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்திற்கு எவ்வாறு தெரிவு செய்தோம் என விளக்கமாக எடுத்துச் சொன்னேன். அமைச்சர் ஹமீது அவர் எனது கருத்துக்களை அக்கறையுடன் செவிமடுத்து "நாடகத்திற்கு பரிசளிப்பதற்கு முன்னர் நீங்கள் மேடையில் இதனை எடுத்துச் சொல்ல முடியுமா? எனக்கேட்டார். நானும் அதற்கு ஒப்புதல் தெரிவித்து நாடகத்திற்கு பரிசு வழங்குவதற்கு முன்னர் எனது கருத்துக்களைத் தெரிவித்தேன்.

"நாடகம் என்பது சினிமா அல்ல, அது ஒரு நிகழ்த்தும் கலை, மேடை நாடகம் என்பது வாழ்வியலை எடுத்து காட்டும் யதார்த்த பூர்வமான கலை வடிவம். நீங்கள் ஊடகங்களில் அதாவது தொலைக்காட்சியில் அல்லது சினிமாவில் பார்க்கின்ற கோமாளி கூத்துக்கள் அல்ல. அது மனித வாழ்க்கையை எடுத்துக்காட்டும் கலைச்சாதனம். அரங்கியல் கலை பற்றி மாணவர்களுக்கு மாத்திரமல்ல ஆசிரியர்களுக்கும் கற்பிக்க வேண்டும் என்றேன்." எனது கருத்தை ஆசிரியர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

இதே போன்று இன்னொரு சம்பவம்...

**தொடரும்...**

## மீண்டும் தொடங்கும் மிடுக்கு

எங்கள் தமிழாசான்
பாடம் தொடங்கினார்.
கலைக்களஞ்சியம்
மடைதிறத்தல் போலத்
தமிழ்பாடம் அமையும்


அன்று மஹாகவியின்
பாடல்
"மீண்டும் தொடங்கும் மிடுக்கு"
காவியத்தை விஞ்சிய
அக்கவிதையை
அதிரடிச் செய்தியை மீறிய
சுவையுடன் படித்தோம்.

இன்று
அந்தப்பாடல்
ஒரு பெரும்
சப்பாத்தின் கீழ்
நசிந்து கொண்டிருத்தல்
போன்ற உணர்வுடன்
மனத்திற் குமைகிறது.

## இப்போதைய பாடல்

சிறுவயது நினைவு
பழுப்பேறிய
பழம் புத்தகமாய் நின்றது
எங்கள் தமிழாசான்
சோமசுந்தரரின்
பாடலை
"மா வலி கங்கை
நாடெங்கள் நாடீட"
நாங்கள் ஒரு மித்து
உரத்துப் பாடுவோம்.
மரம் சுமக்கும்
காற்றோடு பாடுவோம்.

இப்போ அந்தப்
பாடலும் பதிவும்
நாதஸ்வரம்
இழந்த தவில் போல்
ஒலித்துக் கொள்ளும்.




## அன்றைய பாடல்

சிறுவயதில்
எங்கள் கிராமத்துக்
கலைவிழாவில்
ஒரு பாடலைச்
சொல்லித் தந்தார்கள்
"உலகை வெல்லப்
பிறந்தோம் நாம்"
என்று பாடல் தொடரும்
எங்கள் மனதில்
ஏதோ ஒரு கற்பனை
சில்லிடும்
நிலமும் நீரும்
நெருப்பும் விசும்பும்
பூக்கள் பூத்து
எங்கள் மனத்தைக்
குலுக்கியெடுக்கும்
மனவெளிக்கு
மீண்டும் அந்தப்
பாடல் வந்தது.
காலவெளியில்
எங்கள் கிராமம்
சுருங்கிய குடையாய்
கிடந்தது.

**சபா ஜெயராசாவின் 3 கவிதைகள்**

மூதூர் மொகமட் ராபி

# இலக்கியபுரி "நீரோ"க்களே!



tPடுகள் தீப்பற்றிக்கொண்டிருக்கும்போது
உங்களில் யாராவது
வரவுசெலவு பற்றி விவாதித்துக்
கொண்டிருப்பீர்களா..?
உங்கள் சொந்தச்சகோதரர்களின்
செங்குருதியோடையின் கரையிலே உட்கார்ந்து
அந்த நிலவின் விம்பத்தை இரசித்திருப்பீர்களா..?

துப்பாக்கி மருந்தின் கந்தகநெடியும்
கிழிந்துதொங்கும் தசைகளின் துர்நாற்றமும்
நாசி துளைக்கும் நரபலிதேசத்திலே நின்றவாறு
ஒகிட் பூக்களின் அழகையும்
ஒடியற்கூழின் சுவையையும் ஓயாமல்
எழுதுவதற்கு
எப்படி முடிகின்றது உங்களால்..?

உறவுகளையும் கனவுகளையும்
வெடியோசை இருளிலே தொலைத்துவிட்டு
கம்பிவேலிகளின் பின்னே நின்று நாங்கள்
கதறியழுதவேளையிலும்
கைத்தொலைபேசியைக் காதில் வைத்தபடி
கண்டுகொள்ளாமல் போவதற்கு
கனவான்களே உங்களுக்கு எப்படி மனது
வந்தது..?

கொக்குகளும் நாரைகளும்
கொடுவாய் மீன்களும் உலாவித்திரிந்த
உப்பேரிகளின் கரைகளிலே

தாழைப்பற்றைகளுக்குள் சிதறிக்கிடந்த
வாய்திறந்த பிணங்களையும்
ஆடையவிழ்ந்த யுவதிகளையும் மறந்துவிட்டு
வடபுலத்துப் பலாப்பழத்தையும்
வண்ணத்துப்பூச்சிகளின் சல்லாபங்களையும்
எச்சிலொழுக எழுதிக்கொண்டிருக்க


உலகமறிந்த படைப்பாளிகளே..
உங்களுக்கு எப்படித்தான் மனதுவருகின்றது...?

ஓ! இலக்கிய விற்பன்னர்களே
பசி மயக்கம் தீராமல் பனியில்
ஒடுங்கிக்கிடப்பவனுக்கு
ஒருபிடிச்சோற்றுக்கு தவாமல்
ஒருபோர்வைக்காகப் போராடாமல்
நிலவையும் நட்சத்திரங்களையும்
இரசிக்கச்சொல்லும்
இலக்கியங்களையெல்லாம் இனிமேலும்
எழுதாதீர்கள்!
யதார்த்த வாழ்வின் கசப்புகளை இருட்டடிக்கும்
இனிப்பில்தோய்ந்த இலக்கியப்போதைகளை
இனியும் நீங்கள் படைக்காதீர்கள்!

ஒவ்வொரு மேடுகளின் அருகிலும் ஒராயிரம்
மடுவிருக்கும்
ஒற்றுமை துறந்த இந்தமண்ணில்
வாழ்க்கைச்சூறாவளியிலே
வறுமைப்பேரலைகளில் போராடும்
உனக்காய் உன்தோழனுக்காய் அடுத்தவீட்டு
மனிதனுக்காய்
அன்றாடம் அல்லலுறும் ஜீவன்களுக்காய்
எழுதுவோம் வாருங்கள்!

மனிதனை மனிதனே வஞ்சிக்கும்
இந்த சுரண்டல் சமூகத்தை முற்றாய்ச்
சுரண்டியெறிவோம் வாருங்கள்
அதோ கிழக்கு வானில் சிவப்புச் சூரியன்!

# நேர்காணல்



## இ.சு.முரளிதரன்

### சந்திப்பு - பரணீ

இவர் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார். "நுங்கு விழிகள்" என்னும் ஹைக்குக் கவிதைகள் தொகுப்பொன்றையும், "புழுவிற்கும் சிறகு முளைக்கும்" என்னும் கவிதைத் தொகுப்பையும் "நளதமயந்தி" என்னும் நூலை மாணவர்களுக்கு ஏற்ற இலகுமொழியில் தந்துள்ளார். இவர் ஒரு சிறந்த தமிழ் ஆசானாக திகழ்வதோடு, தமிழ் சினிமா பற்றிய பல ஆராய்ச்சிகளை மேற் கொண்டு வருபவர். இவரது நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்காக தருவதை இட்டு மகிழ்வடைகின்றோம்.

**பரணீ** – இளைய தலைமுறையைச் சேர்ந்த படைப்பாளியாகிய நீங்கள் உங்கள் படைப்பிலக்கியப் பிரவேசம் பற்றிக் கூறுவீர்களா?

**இ.சு.முரளிதரன்** – சிறு வயதிலே இரவில் என் தந்தையிடம் கதை கேட்டபடியே தான் உறங்குவேன். கதைகள் மீது ஏற்பட்ட ஈடுபாட்டினால் புதிய புதிய கதைகளைத் தேடி வாசிக்க முனைந்தேன். ஏழாம் எட்டாம் வகுப்புகளில் அம்புலிமாமா, ராணி காமிக்ஸ் என்பன என் வாசிப்புக்கு தீனியாக அமைந்தன. பின்பு மர்ம நாவல்களைத் தேடி வாசித்தேன். எனது தாயார் கந்த புராணம், தேவாரம் என்பவற்றைப் படிப்பதோடு அகிலன், கல்கி போன்றோரின் நாவல்களையும் வாசிப்பார். அதன் நீட்சியாக பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் முதலிய வரலாற்று நாவல்களை அசுரவேகத்தில் வாசித்துத் தள்ளினேன். என் உறவினரான செ.யோகராசா டானியலின் நாவல்களைத் தந்து படிக்கச் சொன்னார். புதுமைப்பித்தன், குப்பிழான் ஐ.சண்முகன், தெணியான், நெல்லை க.பேரன் என்போரது சிறுகதைகளை யும் வாசிக்கத் தந்து என் பயணத்தின் திசையினை மாற்றினார். நான் O/L பரீட்சை எழுதி முடித்த காலத்தில் செ.யோகராசா கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு விரிவுரை யாளராகச் சென்று விட்டார். என் வாசிப்பில் தேக்கநிலை உருவானது.

நான் A/L படித்துக் கொண்டிருந்த காலத்தில், வல்லைவெளியில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த யுத்த நிகழ்வொன்றின் மாதிரியை மையமாகக் கொண்டு ஈழநாதத்தில் "கருணைரவி" ஒரு சிறுகதையினை எழுதியிருந்தார். அச்சிறுகதையின் முடிவு, ஏற்கெனவே நான் வாசித்த இன்னொரு கதையோடு பெரிதும் பொருந்திப் போனதை இனங்கண்டேன். கருணைரவி மாலை நேரங்களில் கரணவாய் மகா வித்தியாலய மைதானத்திற்கு உதைபந்தாட வருவது வழக்கம். கதையின் முடிவு குறித்து அவரோடு விவாதித்தேன். அதனூடாக நட்புக் கிடைத்தது.

விக்னேஸ்வராக் கல்லூரியின் "ஏணி" இதழுக்கு கதை எழுதுமாறு தமிழாசிரியரான திருமதி நாளினி கணபதிப்பிள்ளை ஊக்கப்படுத்தினார். நண்பர்களான தயாரூபன், ஜெகதீஸ்வரன் போன்றோர் என்னைவிட அதிக இலக்கிய நாட்டமுடையவர்களாய் இருந்தனர். ஏதோவோர் அசட்டுத் துணிவில் "தேயாத வெண்ணிலவு" என்ற கதையை எழுதிக் கருணைரவியிடம் கொண்டு சென்று கருத்துக் கேட்டேன். முதல் முயற்சியை மழுங்கடித்து விடக் கூடாது என்ற ஆதங்கத்தில் அளவுக்கு அதிகமாகவே பாராட்டினார். நாளினி "ரீச்சரும்" அவரது சகோதரியும் நான் கூச்சப்படுமளவிற்குப் புகழ்ந்தார்கள். அந்தக் கதை வெளி வந்த "ஏணி" இதழ் தற்போது என் கைவசமில்லை!

பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் நல்லூரி லுள்ள வீடொன்றிலே தங்கியிருந்தோம். நண்பன் தயா ரூபனும் "ரூம்மேற்றாக" வந்தமைந்தான். "சஞ்சீவி" கவிதை முற்றத்திற்கும் இலங்கை வானொலியின் இதயசங்கமம்

நிகழ்ச்சிக்கும் ஏராளமான கவிதைகளை எழுதினேன். தயாரூபன் சஞ்சீவியில் கதைகளை எழுதினான். என் பெரியம்மாவின் மகனான அம்பிகைபாகனும் அதே "ரூமிலே" தான் இருந்தார். பல கவிதை நூல்களை வாங்கித் தந்து எழுதத் தூண்டினார். என் ஒன்றுவிட்ட சகோதரியின் மகளான "சுதா" என்ற அக்கா ஒருவர் தெவிட்டாத பாசத்தினை வெளிக்காட்டியதோடு என் கவிதைகளின் தீவிர வாசகியுமானார். "சுதா அக்கா" என்னோடு தான் யாழ்.பல்கலைக்கழகத்திலே படித்தார். ஒரு நாளிரவு "இதய சங்கமம்" கேட்டுக் கொண்டிருந்த போது த.ஜெயசீலனின் கவிதையொன்றின் ஓசை நயத்தை சுட்டிக்காட்டி "இதைபோல எழுதமாட்டாயா?" என்று கேட்டார். முறிப்பு நடனமாடிய என் கவிதைகளை மரபின் செல்நெறியில் நகர்த்த எத்தனித்தேன்.


யாப்பறியும் விருப்பத்தில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற பண்டித வகுப்பில் ஐக்கியமானேன். சோ.பத்மநாதன் சுவாரஸ்யமாகக் கற்பித்தார். கவி யரங்கும் நிகழ்தினோம். ஒருநாள் சொக்கன் சேர் (கலாநிதி க.சொக்கலிங்கம்) வகுப்பிற்கு வருதற்கு சற்று தாமதமானது. நான், முகுந்தன் (தற்போது கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்) காரை.எம்.பி. அருளானந்தம். தி.செல்வமனோகரன் ("தூண்டி" சிற்றிதழ் ஆசிரியர்) ஞானதேசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர்) போன்றோர். பண்டித வகுப்பில் கற்கும் சக ஆசிரியைகளோடு ஆதீனக்கவி நிலைக்கு எதுவிதமான நெருடலையும் ஏற்படுத்தாத வகையில் சாதாரணமாக உரையாடிக் கொண்டிருந்தோம். எங்கள் மகிழ்நெறி துறவு வாழ்வில் ஈடுபடும் ஆதீன முதல்வருக்கு ஒவ்வாமையினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கோபத்தோடு, நாமிருந்த இடம்நாடி வந்து "இதென்ன….. வீடே" என்று உச்சஸ்தாயில் கத்தினார். காவி புனைந்த புனிதரது நாவிலிருந்து "கசிப்படித்தவன்" உசுப்பேறிய பின்னர் உச்சரிக்கும் வார்த்தையினை நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை! ஆசிரியைகள் கூனிக்குறுகிப்போய் விட்டார்கள். தன்மானம் கொம்பு சீவ காரை.எம்.பி.அருளானந்தம் சூடாகி விட்டார். தூயவரின்(?) அடையாளத்திற்கும் அதிகாரவழி மொழிப்பிரயோகமான தணிக்கைக்குரிய "அந்த வார்த்தைக்குமான" இடைவெளியைச் சுட்டிக்காட்டி ஏசினார். தாமதித்து வந்த சொக்கன் சேரிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினோம். அத்தருணத்தில் அற்புதமாகச் சமாளித்து பண்டித வகுப்பினை நல்லூர் விக்னேஸ்வராவிற்கு மாற்றினார்.

பண்டித வகுப்பில் அறிமுகமான தி.செல்வ மனோகரன் "தூண்டி" இதழில் என்னை இணையாசிரி யராக்கினார். பின்னாளில் "ஏகலைவன்" சிற்றிதழை தொடங்க அவ்வனுபவங்களே அருட்டுணர்வாயின! என் வாசிப்பினை தாராளமய மாக்க பெருந்தொகையான நூல்களை தந்துதவினார். மு.தளையசிங்கம், மு.பொ, உமாவரதராஜன், சோலைக்கிளி, சண்முகம் சிவலிங்கம், சு.வில்வரத்தினம், சேரன் போன்ற ஈழத்து ஆளுமைகளின் படைப்புகளை பூரணமாக சேகரித்து வைத்திருந்தார். வாசிப்பு அனுபவங்கள் கொடுத்த பரவசத்தின் மீட்டுருவாக்கத்தால் நான் எழுத்துலகில் பிரவேசித்தேன்.

**பரணி** – உங்கள் பாடசாலைக்கால பசுமைதீட்டிய ஞாபகங்களை மீட்டுத் தருவீர்களா?

**இ.சு.முரளிதரன்** – கரணவாய் மணியகாரன் தோட்டம் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றேன். பொன்னம்மா ரீச்சர், பாக்கியம் ரிச்சர், கந்தப்பு சேர், ஆசீர்வாதம் சேர், தவராசா சேர் என்போர் படிப்பித்தனர். மூன்றாம் வகுப்பில் ஆசீர்வாதம் சேர் "நாளை சமச்சீர் படிப்பிக்கப் போறன் எல்லாரும் தேசிக்காய் கொண்டாங்கோ" என்று கூறினார். எங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள இந்திராக்கா வீட்டில் பெரிய தேசிமரமொன்று நின்றது. எப்போதும் அதிகளவில் மஞ்சள் நிறப்பழங்கள் மரத்தின் கீழே விழுந்திருக்கும். இந்திராக்காவிடம் சென்று இரண்டு தேசிக்காய் வாங்கி மறுநாள் பள்ளிக்கூடத்திற்கு கொண்டு போனேன். வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் தேசிக்காய் கொண்டு வந்திருந்தனர். ஆசீர்வாதம் சேர் ஒரு தேசிக்காயை வெட்டிக் காட்டி பாடத்தினை நடத்தி முடித்தார். மற்றைய தேசிக்காய்களை தனது பைக்குள் போட்டுக் கொண்டார். எல்லோரும் ஒவ்வொரு தேசிக்காயை இழந்தனர். நானே, ஆசிரியரிடம் பாராட்டுப் பெறுவ தற்காக இரண்டு தேசிக்காயை கொண்டு சென்று கொடுத்தேன். அடுத்தடுத்த வருடங்களிலும் கற்பித்தலில் "தளம்பல்" இல்லாமல் இம்முறையிலே தான் "சமச்சீர்" வகுப்பு நிகழ்த்தியதை கனிஷ்ட மாணவர்கள் கூறிச்சிரிப்பார்கள்! "ஏட்டுச் சமச்சீர்" ஊறு காய்க்கு உதவியிருக்கிறது.

ஆறாம் வகுப்புத் தொடக்கம் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் படித்தேன். எனக்கு இரு சகோதரர்கள். ஏழாம் வகுப்பு படிக்கும் போது தந்தையையும், ஒன்பதாம் வகுப்பிலே மூத்த சகோத ரனையும் இழந்தேன். அம்மா சொல்லொணாத்துயர் சுமந்து படிக்க வைத்தார். அப்பம் சுட்டு விற்று, களை பிடுங்கி, அயல் வீடுகளில் அரிசி இடித்து பணம் ஈட்டினார். அம்மாவின் சகோதரங்கள் "தொடக்கு" மனப்பாங்கோடு நடந்து கொண்டார்கள். கொழும்பி லிருந்த என் பெரிய தந்தை இ.கந்தசாமி மட்டும் உதவவில்லையென்றால் படிப்பை நிறுத்திவிட்டு கூலி வேலைக்குத்தான் சென்றிருப்பேன். என் பெரியதந்தை



பக்கபலமாக இருந்து பொருளாதாரத்தை மேம்படுத் தினார். நானும், என் அண்ணன் பிரதீஸ்வரனும் பல்கலைக்கழகம் வரை செல்லத் தூண்டு கோலாய் அமைந்தார்.

எட்டாம், ஒன்பதாம் வகுப்புகளில் திருமதி ஆறுமுகம் என்பவர் வகுப்பாசிரியராக இருந்தார். விஞ்ஞான பாடம் கற்பித்தார். தாயைப்போல அன்பு காட்டினார். என் வீட்டுச் சூழலை அறிந்ததால் நான் கட்ட வேண்டிய வசதிகள் சேவைகள் கட்டணத்தை தானே செலுத்தினார். மீத்திறன் கூடிய மாணவர்களை ஆசிரியர்கள் எப்போதுமே நேசிப்பதுண்டு. 25 புள்ளி களைத் தாண்டாத என் மீதல்லவா அவர் கரிசனை காட்டினார். ஆரம்பத்தில் எனக்குள் இருந்த காட்டு மிராண்டிக்கு அவர் கருணையை மதிக்கத் தெரிய வில்லை. காலஞ்செல்ல செல்ல என்னில் மாற்றங்கள் நிகழ்ந்தன. அவர் கேட்கும் வினாக்களுக்கு பதில் கூறவேண்டும் என்ற பிடிவாதத்திலே படித்தேன். தவணைப்பரீட்சையில் 45 புள்ளிகளைப் பெற்றேன். விடைத்தாளைத் தரும்போது என்னை அருகிலே அழைத்து அதிக வாஞ்சையோடு தலையைத் தடவினார். இத்தனை வருடங்களுக்கு பிறகும் சிலிர்க்கிறது மனசு.

உயர்தரப்பிரிவிலே நான் கலைத்துறையைத் தெரிவு செய்தேன். திருமதி நாளினி கணபதிப்பிள்ளை அர்ப்பணிப்போடு தமிழ் கற்பித்தார். அவர் அபிமானத்தைப் பெற நானும் சிரேஷ்ட பிரிவு மாணவனான தயாரூபனும் போட்டி போட்டோம். இன்றுவரை அந்தப் போட்டி முற்றுப்பெறவில்லை.

தனியார் நிறுவனத்திலே திரு.கி.நடராசா, திரு.மா.லோகசிங்கம், திரு.ப.ஜோதீஸ்வரன், திரு.ஆ.விக்னேஸ்வரன் ஆகிய நால்வரிடமும் கற்றேன். விக்னேஸ்வரன் ஆசிரியரைத் தவிர்த்து ஏனைய மூவரோடும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி யில் இணைந்து பணிபுரிந்துள்ளேன். ஜோதீஸ்வரன் சேர் படிப்பிக்கும் போது குட்டிக்கதைகள் சொல்லிக் கலகலப்பூட்டுவார். கேள்விகளுக்கு பதில் சொல்லா விட்டால் "மொக்ஸ்" என்று ஏசுவார். பெண் பிள்ளைகளுக்கு வித்தியாசமான திருநாமங்களை சூட்டி அழைப்பார். என் நண்பன் அருள்ராஜனின் ஆதர்ச Hero ஆசிரியர் லோகசிங்கம் தான்! அவரைப்போன்று எழுத்துருக்களைக் கையாள்வதிலும், அவர்போல நடப்பதிலும் அருள்ராஜன் அதிக நாட்டங் கொண்டதோடு அந்த Style ஆனது மாணவரிடையே பரவ முன்னோடியானான். விக்னேஸ்வரன் ஆசிரியர் அளவையியலை வெகுநுணுக்கமாகக் கற்பித்தார். சமூக ஞானமும் இசை மீதான ஈடுபாடும் இலக்கிய நாட்டமும் உடையவர். "ரோஜா" திரைப்பட பாடல்களின் தரத்தினைக் குறித்து சிலாகித்துப்பேசி A.R.ரகுமான் முதலிடத்தைப் பிடிப்பார் என்று "ஆரூடம்" கூறினார். மாணவர்களைச் சிரிக்க வைக்க ஜோக்குகளை தயார் செய்து கொண்டு வரும் ரகமல்ல அவர்! அவரது மொழிக்குள் எப்போதுமே எள்ளல் பதுங்கியிருக்கும். வகுப்பறையில் அவர் யாராவது ஒருவரைப் பாத்து குறுநகை புரிந்தால், அடுத்து அவர் உதிர்க்கப்போகும் அங்கதத்தை அனுபவித்துச் சிரிக்க வகுப்பறையே தயாராகி விடும். தமிழாசான் நடராசா அவர்கள் நடிகர் சந்திரபாபுவின் பாடல்களைப் பாடி கவர்ச்சிகரமாகக் கற்பிப்பார். காலச்சுழற்சியில் பாடத்திட்டங்கள் மாற்ற முறுகின்ற நிலையிலும் Update பண்ணி கற்பிப்பதால் இன்றுவரை Expiry Date முடியாத ever green Hero ஆக தனியார் கல்வி நிறுவன அபத்த அரசியல் சூழலிலும் நின்று நிலைக்கிறார்.

**பரணீ – உங்களை மிகவும் Impress பண்ணிய எழுத்தாளர்கள் என யார் யாரைக் குறிப்பிடுவீர்கள்?**

**இ.சு.முரளிதரன்** – பதின்ம வயதிலே "சுஜாதா" அறிமுகமானார். அக்காலத்தில் என்னைப் பாதித்த எழுத்தாளர்களை விட்டு வெகுதூரம் வந்துவிட்டேன். ஆனாலும் சுஜாதா வின் படைப்புகளில் இன்றுவரை ஏதோ ஒருவகை ஈர்ப்பு இருக்கிறது. சந்தரராமசாமியும், புதுமைப் பித்தனும் என் வாசிப்பு அனுபவத்தில்

பேரதிர்வினை நிகழ்த்தினார்கள். ரஞ்சகுமார், உமா வரதராஜன், ஷோபாசக்தி, குப்பிழான் ஐ.சண்முகன், கோணங்கி, சாருநிவேதிதா, ஜெயமோகன் போன்றோரும் புனைகதைப்பரப்பிலே கலாபூர்வமான அனுபவத்தை தந்தார்கள்.

கவிஞர்களில் மஹாகவி, முருகையன், சு.வில்வரத்தினம், சோ.பத்மநாதன், சண்முகம் சிவலிங்கம். சேரன், சோலைக்கிளி, த.ஜெயசீலன், பா.அகிலன், மனுஷ்யபுத்திரன், குட்டிரேவதி, சல்மா போன்றோர் அதிகமாகக் கவர்ந்தார்கள்.

**பரணீ** – உங்களின் ஆரம்பகாலப் படைப்புகளுக்கு எவ்வாறான வரவேற்புக் கிடைத்தது?

**இ.சு.முரளிதரன்** – படைப்பாளி நடைவண்டி உருட்டும் காலத்தில் நெறிப்படுத்த முன்வருவோர் ஆபூர்வம்! பாதாளக் கிணற்றில் பைக் (Bike) செலுத்தும் வகையிலான படைப்புகளைச் செதுக்கும் தருணத்தில் உற்சாகச் சீழ்க்கையடிப்பதில் அனைவருக்கும் அலாதி பிரியம். என் ஆரம்பகாலக் கவிதைகளை கவிஞர் இ.முருகையன், கவிஞர்.சோ.பத்மநாதன் என்போர் விதந்துரைத் தார்கள். இலங்கை வானொலிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கவிஞர் பா.விஜய் அதீத வாஞ்சையோடு புகழ்ந் தார். த.ஜெயசீலனும், ரஞ்சகுமாரும் தெணியானும் பாசாங்குத்தனமற்ற பாராட்டுக்களைப் பகிர்ந்து கொண்டனர். "ஈழத்துக் கவிதைத் தடத்தில் ஹைக்கூ கவிதைகள்" என்ற கட்டுரையில் இ.இராஜேஸ்கண்ணன் என் கவிதைகளை உச்சத்தில் வைத்து ஒப்பிட்டார்.

கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் நட்போடிருந்தவர் என்ற ரீதியில் ச.இராகவனிடம் "நுங்கு விழிகள்" தட்டச்சுப்பிரதியைக் கொடுத்துக் கருத்துக் கேட்கக் முனைந்தேன். "தீட்டு" மனோபாவத்துடன் உதட்டைக்கோணி "வாசிக்க நேரமில்லை" என்று "நேரமின்மைத் தத்துவத்தை" முன்வைத்தார். இலக்கிய மேதமை என்ற ஒளிவட்டமொன்றை தன்னைச் சுற்றி ஏற்படுத்திக் கொண்ட இராகவனிடமிருந்து கல்லூரி நட்பிலிருந்த இயல்பான நெருக்கத்தை என்னால் மீட்டெடுக்க முடியவில்லை. நான் எழுத ஆரம்பித்த காலகட்டத்தில் "இது எங்க ஏரியா. உள்ள வராதே!" என்று சிலர் சினிமா ஹீரோவின் தொனியில் மட்டம் தட்டிப் பேசினார்கள். பிரமுகரிடம் அணிந்துரை பெற்றதனூடாக கவிதைத் தொகுதியினை முதன்மை பெறவைக்க முயற்சிப்பதாகவும் சிறுபிள்ளைத்தனமாக விமர்சித்தார்கள். "மாட்சியிற் பெரியோரை வியத்தலுமே. சிறியோரை இகழ்தல் அதனிலுமிலமே" என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளின் ஆழமான புரிதலோடு அனைத்தையும் எதிர்கொண்டேன்.

**பரணீ** – நீங்கள் பல்வேறு இலக்கிய வகைமைகளில் ஆர்வம் கொண்டவராக இருக்கிறீர்கள். எனினும் உங்களுக்கு எந்த இலக்கிய வகையில் அதிக ஈடுபாடு உள்ளது என விளக்குவீர்களா?

**இ.சு.முரளிதரன்** – கவிதை, சிறுகதை,கட்டுரை என்று பன்முக வகைமைகளில் உள்நீரோட்ட சலசலப்பைப் பதிவு செய்து வருகிறேன். கவிதையே எனக்கு வாலாயமான வடிவம். தமிழாசிரியராகப் பணியாற்று கிறேன். கவிதையினைக் கற்பிக்கும் கணத்தில் கொண்டாட்ட உணர்வு மேலெழுகின்றது. நான் நேசிக்கும் இலக்கியங்களோடு ஊடாடும் தொழிலை அடைந்தமையை பெருங் கொடுப்பனையாகவே ஆராதிக்கிறேன்.

அனுபவங்களைத் தொற்ற வைப்பதில் கவிதை முதலிடத்தை பெறுவதாக நம்புகிறேன். எழில் ததும்பும் தருணங்களின் ஆதார சுருதியை அற்புதமாக வெளிப்படுத்த உதவுகிறது. என் மகள் மேதினிகர் தந்த அற்புதமான அதிர்வுகளை "பாறை இடுக்கிற் பற் கொழுக் கட்டை" என்ற கவிதையாக்கினேன். சிறுவயதி லிருந்தே மழையோடான காதல் என்னுள் கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது. மழையின்போது மண் தரும் வசீகரமான வாசனையை ஆத்மார்த்தமாக நுகர்வேன். "காவலரண் காக்கும் கவி" கவிதையில் அதனைப் பதிவு செய்துள்ளேன். கவிதையோடுதான் அதிக ஈடுபாட்டோடு உறவாடுகிறேன்.

**பரணீ** – நீங்கள் நூல் வடிவில் இதுவரை தந்த படைப்புக்கள் பற்றிய விபரங்களைக் கூறுங்கள்?

**இ.சு.முரளிதரன்** – அறுபது ஹைக்கூக் கவிதைகளை உள்ளடக்கிய "நுங்கு விழிகள்" என் முதல் தொகுப்பாக வெளிவந்தது. நளவெண்பாவை தொடர்ச்சியாக கற்பித்ததால் உண்டான ஈடுபாட்டால், மாணவர் மையநோக்கில் வசன கவிதையாகப் புனைந்து "நளதமயந்தி" என்னும் தொகுப்பாக்கினேன். கவியரங்குகளுக்கும், பத்திரிகை களுக்கும் எழுதிய மரபுக்கவிதைகளைச் சிதையவிடாது நூலுருப்பெறச் செய்யுமாறு கவிஞர் சோ.பத்மநாதன் பலமுறை வலியுறுத்தினார். நானே அலட்சியமாக இருந்து விட்டேன். கைவசமிருந்த எண்ணற்ற பிரதிகள் தொலைந்துபோயின. எஞ்சிய பதினைந்து கவிதை களையும் "புழுவிற்கும் சிறகு முளைக்கும்" என்ற எளிய தொகுதியாக மாற்றினேன். என் சக ஆசிரியர் ஆ.பிரபானந்தன் அமரரான தனது துணைவியாரின் நினைவாக சிறுவர்பாடல் தொகுப்பொன்றினை வெளியிட விரும்பி என்னை அணுகினார். சிறுவர் பாடல்களைச் சேகரித்து "மழலைச்சிறகு" என்ற பெயரில் நினைவு வெளியீடாக்கி உதவினேன்.


**பரணீ** – ஹைக்கூ, குறும்பா போன்ற கவிதை வடிவங்களில் உங்கள் கவிதைகள் அநேகம் வெளிவந்ததை அறிவேன். இவ்வடிவங்கள் முறையாக ஈழத்து எழுத்தாளர்களால் கையாளப்படு கின்றதா?

**இ.சு.முரளிதரன்** – "ஹைக்கூ" அற்புதமானதோர் கவிதை வடிவம்! யப்பானில் சராசரி மக்களிடம் கவித்துவத்தைச் சுவறச் செய்வதாக "ரெங்கா" என்னும் வடிவம் அமைந் திருந்தது. "ரெங்கா" என்பது ஒரு கூட்டு முயற்சி. ஒருவர் கவிதையைத் தொடங்க, மற்றவர் அதனோடு இழை யோடும் வகையான பிறதொரு கவிதையை கூற, மூன்றாமவர் பாடுபொருள் முற்றுப் பெறும் விதத்திலே நிறைவு செய்வார். ரெங்காவின் கால்கோள் நிலைக் கவியாகவே "ஹைக்கூ" பிறப்பெடுத்தது. பாரதியார், அப்துல்ரகுமான், சுஜாதா போன்றோர் தமிழில் இவ்வடிவம் குறித்த பிக்ஞையை ஏற்படுத்தி காத்திரமான முயற்சிகளை எதிர்பார்த்தனர். தமிழகத்தில் "ஹைக்கூ" பரந்துபட்ட அறிமுகத்தினைப் பெற்றது. ஏராளமானோர் எழுதிக்குவித்தனர். எனினும் பிசிரற்ற படைப்புகளை அதிகளவில் இனங்காண முடியவில்லை என்ற ஆதங்கம் விமர்சகர்களிடையே உண்டு. ஈழத்தில் "ஹைக்கூ"வின் பரிபாலனம் பரவலடையவில்லை. சு.முரளிதரன் "கூடைக்குள் தேசம்", சாள்ஸ் "கல்லறைக் குள் கதிரவன்", வேலணையூர் பொன்னையா "பச்சை இறகு", விக்னா பாக்கியநாதன் "அம்மா என் ஹைக்கூ" பாலரஞ்சனி சர்மா மனசின் பிடிக்குள்" இ.சு.முரளிதரன் "நுங்கு விழிகள்" முதலிய தொகுப்புகளை வெளிக் கொணர்ந்தனர். முதலிரு அடிகளின் மூடுமர்மமும் கரந்தடிப்படை போல தாக்கும் முத்தாய்ப்பான இறுதி அடியும் "ஹைக்கூ"வை கலாபூர்வமான படைப்பாக்கி விடுகின்றன. இப்பண்புகளோடான கனதியான "ஹைக்கூ"வின் வருகை சொற்பமாகவே நிகழ்ந்ததால் அவ்வடிவத்தின் மீதே நம்பிக்கையில்லாதத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது போல தெரிகிறது.

"குறும்பா" தமிழுலகிற்கு மஹாகவி வழங்கிய உன்னத கொடை! குறிஞ்சி தென்னவன், சி.சிவபாலன் என்போர் நேர்த்தியாகக் கையாண்டுள்ளார். புதிய தலைமுறையினரிடம் யாப்பிலக்கண அறிவும், அங்கத உணர்வும் போதாமையால் "குறும்பா" பீறிட்டு கொள்ளவில்லை. ஈழத்து இலக்கியச் செல்நெறியில் "ஹைக்கூ" வடிவத்தைவிட "குறும்பா" கவன ஈர்ப்பினைப் பெறும் வகையிலே கையாளப்பட்டுள்ளது.

**பரணீ** – கவனக்குவிப்பினைப் பெறுவதற்காக பரபரப்பினை ஏற்படுத்தும் நச்சு நிரற் படைப்புருவாக்கச் சூழலொன்று உருவாகி வருவதை பற்றி...?

**இ.சு.முரளிதரன்** – தமிழினம் ஒடுக்குமுறைக்கு எதிராகவே குரல் கொடுத்தது. சாத்வீகத்தின் சறுக்கலே வன்முறையின் பாதைக்கு நகர்த்தியது. ஆளும் வர்க்கமோ தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின் புலத்தைச் சலவை செய்து விட்டு தீவிரவாத முத்திரை யிட்டு மலினப்படுத்த முயன்றது. காலச் சுழற்சியில் விடுதலை அவாவிகளைச் சுற்றி உருவாக்கப்பட்ட போலி ஒளிவட்ட விம்பத்தால் மனிதாபிமானமற்ற மீட்சி விரோதச் செயற்பாடுகளும் நிகழ்ந்தேறின.



"அற்றைத் திங்களில்" சில படைப்பாளி கள் போலி இறும்பூது பாடும் மரபினை வளர்த் தெடுத்தனர். "இற்றைத் திங்களில்" கவனக்குவிப்பிற்காக அதிர்ச்சி யூட்டும் நச்சு நிரற் படைப்புகளை உருவாக்க முனை கிறார்கள். யுத்தத்தில் தரிசித்த அருவருப்பான அத்தியாயங்களை பொய்கலக்காது பதிவு செய்தலே நேர்மையானது. ஆக்க கர்த்தா யதார்த்தத்தினை ஆலங்கனம் செய்வதில் அதீத வேட்கை உடையவனாக இருக்க வேண்டும். சுயலாபங் கருதி எம்மினத்தைக் கொச்சைப்படுத்தி இட்டுக்கட்டும் அரிதார ஆக்கங்களை வரலாற்றில் பதிவு செய்தல் ஏற்புடையதல்ல. புனைவு ஆவணங்களின் போலிமையை மௌனசாட்சிகள் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். விடுதலை அவாவுதலே தவறென்ற நிலையினை நடந்து முடிந்த நிகழ்வுகளுடாக வெளிப்படுத்த முனைவது தமிழிலக்கியத்திற்கே பாரதூரமான பின்னடைவாகும்.

**பரணீ** – உங்கள் படைப்புகளில் பின் நவீனத்துவத்தின் செல்வாக்கு எவ்வளவு தூரம் உள்ளதெனக் கருதுகிறீர்கள்?

**இ.சு.முரளிதரன்**– என் படைப்புகள் கோட்பாட்டுப் பதாகைகளை உயர்த்திக் கொண்டு நிற்கப்போவ தில்லை. எம்மண்ணுக்குரித்தான பாடுபொருளைப் புறக்கணித்து விட்டு சொப்பனசஞ்சாரம் புரிவதில் எனக்கு உடன் பாடில்லை. இனி என்ன வடிவத்தில் சிறுகதை எழுதலாம் என்ற எந்தத்திட்டமிடலும் என்னிடம் இல்லை. என் கதைகளே அவற்றுக்கான வடிவத்தையும் அழைத்து வரும் என்ற நம்பிக்கை போதுமான அளவுக்கு உண்டு.

வரைவிலக்கணத்தை உடைக்கும் பின் நவீனத்துவத்தை வரைவிலக்கணத்துக்குள்ளே முடக்கி விட முடியாது. இக்கோட்பாடு தனித்தவொரு பிதா மகனின் படைப்பன்று. பின்நவீனத்துவக் கூறுகள் தமிழ்ச் சூழலுக்கு பொருத்தி அமையாது என்பதும் அபத்த வாதமாகும். தாள் + தலை புணர்ந்து "தாடலை"யாவதை திருவருட்பயன் உணர்த்துகின்றது. சுயத்தின் தனியிருப்பினைத் தகர்த்து ஒன்றின் இருப்போடு மற்றையதைப் பிணைக்கிறது. மையமும் விளிம்பும் இரண்டல்ல. ஒன்று என்னும் கோட்பாட்டினை தாடலையின் உள்ளீடு வெளிக்கொணர்கிறது. எல்லாக் கோட்பாடுகளும் இப்பிரபஞ்சத்துக்குள்ளே தான் புதைந்துள்ளன. சுட்டிக்காட்டப்படும் போது புதிதாகத் தெரிகின்றன.

பின்நவீனத்துவப் பண்புள்ள படைப்புகளையும் ஈர்ப்புடன் படித்து வருகிறேன். "ரொலான் பார்த்"தின் ஆசிரியரின் மரணம் பற்றிய கருத்தியலின் அகலித்த வீச்சுடைய அர்த்தம் உணர்ந்து சுயபிரதி மீதான "காட்டமான" விமர்சனங்களை முன்வைக்கும் தற்துணிவு தமிழ்சூழலில் யாரிடம் இருக்கிறது?

**பரணீ** – நீங்கள் அண்மைக் காலங்களில் தமிழ் சினிமா உலகு பற்றிய கட்டுரைகளை எழுதி வருகின்றீர்கள். இத்துறையில் உங்களுக்கு அதிக நாட்டம் எவ்வாறு வந்தது?

**இ.சு.முரளிதரன்** – சிறுபராயத்திலிருந்தே சினிமா மீதான வசீகர மான வாத்சல்யம் தொற்றிவிட்டது. அக்காலத்தில் எங்கள் ஊரிலே "காரில்" ஒலிபெருக்கி வைத்துப் படம் ஓடப்போகின்ற செய்தியினை அனைத்திடத்திற்கும் அறிவிப்பார்கள். கருக்கலான நேரத்தில் "காரிலே" ரீவி.(T.V) டெக் (Video cassette player) என்பன வந்திறங்கும். மூடி அடைக்கப்பட்ட காணி ஒன்றிலே படம் காட்டப்படும். கட்டணம் இல்லாமல் பாலர் பருவத்தினர் மட்டும் உள்நுழையலாம். "அலைகள் ஓய்வதில்லை", "சகலகலா வல்லவன்" முதலிய படங்கள் பார்த்த ஞாபகமுள்ளது. எம்.ஜி.ஆரின் படங்கள் மட்டும் காட்டப்படுவதில்லை. மாற்று சமூகத்தினர் எம்.ஜி.ஆரை தொழுகைக்குரிய பிரதிமையாக நேசித்ததன் விளை வான ஒவ்வாமையே காரணம் என்பதைப் பின்னாளில் புரிந்து கொண்டேன். சிவாஜியின் படங்களுக்கு செங்கம்பளம் விரித்துவிட்டு, எம்.ஜி.ஆர் படங்களை இரசனைரத்து பண்ணி விட்டார்கள்.

யாழ்ப்பாணமே மின்சாரமின்றி இருளில் மூழ்கிய காலத்திலும், மாறுபட்ட இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்களை ஒன்றிணைத்து "ஜெனரேற்றர்" உருவாக்கிப் படம் பார்த்தோம். ஒரு கட்டத்தில் "இயக்கம்" தென்னிந்திய சினிமாவை முற்றாகத்தடை செய்து வீடியோப் பிரதிகளின் வருகையினை முடக்கியது. தடையினை மீறிப்படம் ஓடுவதை பிரத்தியட்சமாக அறிந்தால் T.V., ஜெனரேற்றர் என்பன பறிமுதல் செய்யப்படும். சிறுவர்களுக்கு பட்டம், இனிப்பு, என்பன வாங்கிக் கொடுத்து உளவுப்படையாக்கி சந்திகளில் நிறுத்திவிட்டு நண்பன் மா.மகேந்திரன் (தற்போது நிதுஷா ஸ்ரூடியோ உரிமையாளர் – நெல்லியடி) வீட்டிலே கொண்டாட்டத்தைத் தொடர்ந்தோம். "காதலன்" திரைப்படப் பிரதி மட்டுமே கைவசமிருந்ததால், பிரதி மாற்றுமுறையிலே ஏனைய படங்களைப் பார்த்தோம்.

பிற்காலத்தில் வாசிப்பனுபவம் நிகழ்த்திய இரசனை மாற்றத்தால் அழியாத கோலங்கள், உதிரிப்பூக்கள். யாருக்காக அழுதான் போன்ற படங்களைத் தேடிப் பார்க்கும் ஆர்வம் ஏற்பட்டது. தீவிர தேடலில் பதேர் பாஞ்சாலி, ரஷோமோன், செவின் சாமுராய், பைசிக்கிள் தீவ்ஸ் முதலான உலகத்தரமான பிரதிகளை பார்க்கும் பேறு கிட்டியது. "நிழல்", "படப்பெட்டி" போன்ற சிற்றிதழ்களும், கா.சிவத்தம்பி, சாரு நிவேதிதா, அ.ராமசாமி முதலானோரின் கட்டுரைகளும் மாற்றுத் திசையிலே சிந்திக்கத் தூண்டின. ஞானரதனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு வந்தடைந்தது. குப்பிழான் ஐ.சண்முகன் Postal Money Order போன்ற உன்னத திரைப்படங்களை குறித்து சினிமா சார்ந்த கருத்தாடலின் போது சிலாகித்துப் பேசுவார். தமிழிலும் இம்மாதிரியான படைப்புகள் வெளிவராதா என்ற ஏக்கம் கவியும். இவற்றின் விளைவாக மிகைமனோபாவக்காரர்களிடமிருந்து மீட்கப் படாத வணிக சினிமா குறித்த விமர்சனங்களை கட்டுரைகளாக எழுதினேன். திரைத்துறை சார்ந்த தகவல்களைப் பெறுவதற்கு என் மாணவன் மா.செல்வதாஸ்(தற்போது உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரியர்) பல்வேறு வழிகளில் உதவி புரிந்து வருகிறார்.

**பரணீ** – மாற்றுவலுவுடையோர் குறித்த மெல்லிசைபாடலொன்றை புனைந்துள்ளீர்கள். அவ்வனுபவம் குறித்துக் கூறுங்கள்?

**இ.சு.முரளிதரன்** – "VAROD" அமைப்பினர் "மாற்றுவலுவுடை யோர்" குறித்த மெல்லிசைப்பாடல் போட்டியொன்றினை பத்திரிகையில் அறிவித்தனர். முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் பணியாற்றுவதனால் கிரமமாகச் செய்தித்தாளினைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டுவதில்லை. முடிவுத்திகதியன்று பி.ப.1.00மணி அளவில் "இழப்பினும் சக்தி உண்டு" என்ற தொனிப் பொருளில் போட்டி நிகழும் தகவலை "VAROD" அமைப்பினைச் சேர்ந்த பெண் ஒருவர் மகாவித்தியாலய அதிபர் திரு.செ.அல்பிரட் அவர்களிடம் தெரிவித்தார்.

அதிபர் என்னை அழைத்து செய்தியைக் கூறியபோது முதலில் மகிழ்வோடு எழுத உடன்பட்டேன். பின்னர், பி.ப2.00மணிக்கு முன்னர் பாடல் எழுதப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தை அறிந்து மறுப்புத்தெரிவித்தேன். துரித பிரதியாக்கம் பாடலின் தரத்தினை சிதைத்துவிடும் எனக் கூறிப்பின் வாங்கினேன். "முயற்சித்துப் பாருங்கள்" என்று நம்பிக்கையூட்டி விட்டு அந்த சகோதரி போய்விட்டார். என் உள்ளுணர்வு வீரியத்தோடு நச்சரிக்க ஒரு மணிநேரத்தில் பாடலொன்றை எழுதி முடித்தேன்.

"இதயம் விரும்பும் வாழ்க்கை அழைக்கும் எழுந்து வா தோழா" என்ற பல்லவியோடு தொடங்கும் அந்தப் பாடல் T.பிரியன் இசையில் தினிஷாவின் குரலில் பதிவாகியுள்ளது. "இழப்பினும் சக்தியுண்டு" மெல்லிசைத் தொகுப்பில் கவிஞர் துவாரகனும் "சித்திரை மாத நிலவு" என்னும் அற்புதமான பாடலொன்றை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பரணி** – அண்மையில் வெளியிடவுள்ள நூல்கள் ஏதும் இருப்பின் விபரங்களைக் கூறுங்கள்?

**இ.சு.முரளிதரன்** - தமிழ்த்திரைப்படங்கள் பற்றி எழுதியுள்ள கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து நூலாக்கி வெகுவிரைவில் வெளியிட எண்ணி யுள்ளேன். அதனைத்தொடர்ந்து எனது சிறுகதைகளை ஒன்று திரட்டி காத்திரமான தொகுதியாக்க கருதியுள்ளேன்.

**பரணி** – இலக்கிய உலகில் உங்களின் நீண்டகாலத்திட்டம் என்ன?

**இ.சு.முரளிதரன்** – வரலாற்றின் சாடசிகளாக என் எழுத்தக்கள் அமைந்தாலே போதும். சமூக தரிசனத்தைக் கூர்மைப்படுத்தி வாசிப்பினைச் செழுமைப்படுத்தி உளத்திருப்தி தரும் படைப் பொன்றினை உருவாக்க வேண்டுமென்ற விளைவோடு பயணிக்கிறேன். எந்தக் குழுமத்திடமும் சோரம் போய் விடாது தனித்துவத்தோடு தொடர்ந்தும் இயங்கும் இயல்பினை அவாவுகிறேன். இனம், மதம், மொழி, பால், என்பவற்றின் மீதான பற்றால் சமரசமாகாது என்னுள் நிகழும் அதிர்வுகளுக்கு வடிவங் கொடுத்து நேர்த்தியான படைப்புகளைச் செதுக்க வேண்டும். போலி திரைகளிடாத இயல்பான படைப்பாளிகளோடான நட்பினை இறுதிவரை பேண விரும்புகிறேன். இவை தவிர நீண்டகாலத்திட்டமென்று எதுவும்கிடையாது.

# சுவர்களுக்குள் வாழ்தல்

இருளின் மடியில்
உறங்கும்
மரண அமைதி

இடையிடையே
அச்சமூட்டும் அதிகாரக் குரல்
இதயத்துடிப்பில்
இறங்கும் கண்ணீர் மழை.
இமைப்பதால் நனையும்
என் வாழ்க்கை
வரண்டு போகும்
என் இளமையின் ஆயுள்.



இருள் பூசிய சுவர்கள் கூட
தத்துவம் பேசும்
நியாயம் கேட்கும் - தனிமை
உணர்வு கூட
என்னை ஒதுக்கும்
குரல்நார் அறுந்த பின்னும்
எனக்கு மட்டும் கேட்கும்
குமுறல்

மரண இருளும்
மண்டியிடும் நடுநிசியில்
என் கால்கள்
வாழ்க்கை முற்றத்தை நாடும்.
எண்ணமெல்லாம்
வெள்ளமாய் ஓடும்.
பின்...
சிந்தையெல்லாம் ஊமையாகி
சிந்தும் கண்ணீர் சிந்தும்
வாழ்க்கை போல
மனமும் இருளும்...
இதயத்தின் இயக்கம்
இடியாக இறங்கும் - இறுகும்

மீண்டும் வெறுந்தரையில் சரிவேன்
தரையும் என்னை ஒதுக்கும்
நான்கு சுவர்களுக்குள்
கரையும் என் வாழ்வையெண்ணி.

அ.பௌநந்தி

# சொல்லவேண்டிய கதைகள் 1

# பொலிஸ்காரன் மகள்



முருகபூபதி

அவுஸ்திரேலியாவுக்கு நான் புலம்பெயர்ந்து செல்வதற்கு பல காரணங்கள் இருந்தன. 1987 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி முற்பகல் விமானம் ஏறும்போது அம்மா பயணம் அனுப்ப வரவில்லை. முதல்நாள் இரவு என்னை அருகில் வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தார்கள்.

அதற்குமுன்னர் எனது தம்பிமார் மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைநிமித்தம் புறப்பட்டபோது அம்மா அப்படி அழவில்லை. நான் மூத்த மகன். அப்பாவின் மறைவிற்குப்பிறகு குடும்பத்தின் தலைமைப்பொறுப்பை அம்மா எனக்குத்தந்தார்கள். நான் அவர்களின் அருகிலிருந்து கவனிக்கவேண்டிய பல கடமைகள் இருப்பதை நினைவுபடுத்தியவாறே அழுதார்கள்.

அம்மாவுக்கு ஆறுதல் சொன்னேன்.

அம்மா சொன்ன கடமைகளை உலகில் எந்தப்பகுதிக்குச்சென்றாலும் நிறைவேற்றுவேன் என்று அம்மாவின் கைபற்றி உறுதியளித்தேன். சற்று அமைதியடைந்தார்கள். ஆனால் மறுநாள் அம்மா விமானநிலையம் வரவில்லை.

நண்பர் ராஜஸ்ரீகாந்தன் வந்தார். மனைவியும் மூத்த தம்பி நித்தியானந்தனும் வந்தார்கள். அப்பொழுது எனது மனைவி நிறைமாதக்கர்ப்பிணி. மூன்றாவது பிள்ளையான எனது மகனை சுமந்துகொண்டிருந்தாள். அவளும் அழுதழுது கண்களை சிவப்பாக்கியிருந்தாள்.

அயலில் சிலரது விமர்சனங்கள் அவளை பாதித்திருந்தன.

1984 இல் இந்தியாவுக்குப்போனார்.... புத்தகங்களுடன் வந்தார்.

1985 இல் சோவியத் நாட்டுக்குப் போனார்... புத்தகங்களுடன் வந்தார்.

1987 இல் அவுஸ்திரேலியாவுக்கு புறப்படுகிறார் என்னதான் கொண்டுவருகிறார் பார்ப்போமே...?

எனக்கு பாரதியாரின் மனைவி செல்லம்மாதான் நினைவுக்கு வந்தார்.

விடைபெறும்போது "புத்தகங்களும் கொண்டு வருவேன்" என்று மனைவியிடம் சொன்னேன்.

இருபத்தியைந்து வருடகாலத்திற்கு முன்னர் அம்மா எனக்கு நினைவூட்டிய கடமைகளை நிறைவேற்றியவாறு சுமார் 18 புத்தகங்களையும் வெளியிட்டு அம்மாவின் கனவுகளை நனவாக்கிய மனநிறைவுடன் 2012 ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் தாயகம் வந்தேன்.

1987 இல் அவுஸ்திரேலியா சென்று சுமார் மூன்று வருடங்களில் அம்மாவையும் மனைவி பிள்ளைகளையும் என்னை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய மல்லிகைஜீவாவையும் தமிழகத்திற்கு அழைத்து ஒருமாதகாலம் என்னுடன் வைத்திருந்து ஊர்சுற்றிக்காண்பித்தேன்.

1987 ஜூன் மாதம் 24 ஆம் திகதி நீர்கொழும்பில் பிறந்த எனது மகனை இலங்கை வந்து பார்க்க முடியாத துயரத்தில் நான் வாடிக் கொண்டிருந்த போது, அவுஸ்திரேலியாவில் எனக்கு வதிவிடவுரிமை பெற்றுத்தந்த சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன் (எழுத்தாளர் அருண். விஜயராணியின் அண்ணன்) என்னை தமிழகம் அனுப்பிவைக்க ஏற்பாடுகளை செய்திருந்தார்.

அவுஸ்திரேலியாவில் எனக்கு ஒரு அண்ணன் இல்லாத குறையைபோக்கியவர்தான் ரவீந்திரன்.

எனது இனிய நண்பர் ராஜஸ்ரீகாந்தனையும் தமிழகத்திற்கு அழைத்திருந்தேன். அப்பொழுது அவர் கொழும்பில் சோவியத் தூதரக தகவல் பிரிவில் பணியிலிருந்தார். அவருக்கு விடுமுறை வழங்க ஆவனசெய்துகொடுக்குமாறு அங்கு முக்கிய பொறுப்பிலிருந்த நண்பர் பிரேம்ஜி ஞானசுந்தரனையும் தொலைபேசி ஊடாக கேட்டிருந்தேன். எனினும் அங்கிருந்த பல வேலைப்பளுவினால் ராஜ ஸ்ரீகாந்தனுக்கு வரமுடியவில்லை.

அந்தத்தமிழகப்பயணம் பற்றி பின்னர் விரிவாக தினகரன் வாரமஞ்சரியில் ஒரு தொடர் எழுதியிருக்கின்றேன்.

எனது மகன் முகுந்தனை முதல்முதலாக

மூன்று வயது பாலகனாக சென்னை விமான நிலையத்தில்தான் பார்த்தேன். என்னைப்போன்று தங்கள் மனைவி, பிள்ளைகளை, பெற்றவர்களை, உறவினர்களை பிரிந்து பலதேசம் சென்றவர்களின் Home Sick துயரங்களை எழுதுவதற்கு வார்த்தைகள் இல்லை.

தற்காலத்தில் எத்தனையோ கனவுகளையும் துயரங்களையும் சுமந்தவாறு கடலின் அக்கரை சென்று கொண்டிருப்பவர்களை அனுதாபத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றேன்.

1990 இல் தமிழகத்தில் என்னைச்சந்தித்த மனைவி மக்களை 1991 இல் அவுஸ்திரேலியா அழைத்திருந்தேன்.

சுமார் 11 வருடங்களின் பின்னர் மகனுடன் நான் நாடுதிரும்பியபோது எனது வாழ்வில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. அதிர்ச்சியிலிருந்த அம்மாவுக்கும் சகோதரங்களுக்கும் ஆறுதல் கூறவந்தேன். திரும்பிச்செல்லும்போதும் அம்மா விமானநிலையம் வரவில்லை. அதன்பிறகு 1999 இல் அக்கா மகளின் திருமணத்திற்கு வந்து திரும்பிய போதும் அம்மா விமானநிலையம் வரவில்லை.

2002 இல் வந்து திரும்பியபோதும் அம்மா ஏனோ வரவில்லை. இவ்வாறு வந்து திரும்பும் சந்தர்ப்பங்களில் வீட்டில் சுவாமி அறைக்கு அழைத்துச் சென்று நெற்றியில் திருநீறு பூசி கன்னத்தில் முத்தமிட்டு என்னை வழியனுப்புவார்கள். நானும் அவர்களின் காலில் விழுந்து வணங்கி ஆசிபெறுவேன்.



2003 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஒருநாள் இரவு எனது உறக்கத்தை கலைத்தது ஒரு தொலைபேசி அழைப்பு. மறுமுனையில் அம்மாவின் குரல். அம்மா அப்படி ஒருநாளும் இலங்கையிலிருந்து தொடர்புகொண்டதில்லை. அப்பொழுது நீர் கொழும்பில் தம்பி வீட்டிலிருந்தார்கள்.

எனக்கு சற்று அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

" என்ன அம்மா...திடீரென்று எடுக்கிறீர்கள்..?" எனக்கேட்டேன்.

"தம்பி உனக்கு ஒரு நல்ல செய்தி..."

"என்னம்மா...?"

"உனக்கு உனது பறவைகள் நாவலுக்கு சாகித்திய விருது கிடைத்திருக்கிறது. நீ அவசியம் வந்து நேரில் பெற்றுக்கொள்ளவேண்டும்"

"அம்மா...தகவலுக்கு நன்றி. இந்தத்தகவல் நீங்கள் இப்பொழுது சொல்லித்தான் எனக்குத்தெரியும். ஆனால் எப்படி நம்பமுடியும்" என்றேன்.

"இப்பொழுதுதான் தொலைக்காட்சியில் செய்தியில் சொன்னார்கள். ரூபவாஹினியில் பார்த்தேன். அந்தச்செய்தி சரியாகத்தான் இருக்கும். வேண்டுமென்றால் கொழும்பில் இருக்கும் உனது நண்பர்களிடம் கேட்டு உறுதிப்படுத்திக்கொள். உன்னை எதிர்பார்க்கின்றேன். கட்டாயம் வந்துவிடு."

மறுநாள் கொழும்பில் மல்லிகைஜீவாவுடன் தொடர்புகொண்டு கேட்டேன்.

ஆனால், அவர் ஏனோ திருப்தியான பதில் தரவில்லை. ஆனால் அவர் சொன்ன தகவல் சற்று வித்தியாசமாக இருந்தது.

"இதுபோன்ற அறிவிப்புகளை நாம் சொல்ல முடியாது பூபதி. நீர்தான் ஊடகங்களின் ஊடாகத் தெரிந்து கொள்ள வேண்டும்."

பின்னர் நண்பர் ராஜஸ்ரீகாந்தனை தொடர்பு கொண்டு கேட்டேன்.

அவர் சிரித்துக்கொண்டு, "அம்மா சொன்னால்... அது சரியாகத்தான் இருக்கும். அம்மாவின் ஆசைப்படி வந்து விருதை நேரில் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

மாலைவேளை தம்பி ஸ்ரீதரன் தொடர்பு கொண்டு, "அண்ணா... அக்காவின் வீட்டு முகவரிக்கு கலாசார அமைச்சின் கடிதமும் அழைப்பிதழும் வந்தி ருக்கிறது. உங்கள் வருகையை இங்கு எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்." என்றான்.

கிடைக்கப்போவது விருதும் சான்றிதழும் 35 ஆயிரம் ரூபா பணமும். இதற்காக சில இலட்சங்களை செலவழித்துக் கொண்டு நான் போகத்தான் வேண்டுமா? என்று யோசித்துவிட்டு, சில நிமிடங்களில் தம்பியுடன் தொடர்புகொண்டேன்.

"அலைச்சல்... வீண் செலவு... நீயே பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் அதனைப் பெற்றுக்கொள்... நான் வரவில்லை.." என்றேன்.

"அம்மாவிடமே... பேசிக் கொள்ளுங்கள்" எனச்சொல்லிவிட்டு தொலைபேசியை அம்மாவிடம் கொடுத்துவிட்டான் தம்பி.

"நீ... வருகிறாய்... அவ்வளவுதான் சொல்வேன்" அம்மா கண்டிப்பாக சொல்லிவிட்டார்கள்.

அம்மாவுக்கு வீட்டில் நாம் வைத்திருக்கும் ஒரு பெயர் பொலிஸ்காரன் மகள்.

அம்மாவின் அப்பா பிரிட்டிஷாரின் ஆட்சியில் பொலிஸ் சார்ஜன்டாக பணியிலிருந்தவர். கண்டிப்பான

மனிதர். அவருக்கு முன்னால் எவரும் சிகரட், பிடி, சுருட்டு புகைக்கமாட்டார்கள். எங்களையெல்லாம் வெருட்டிக்கொண்டு பாசமுடன் வளர்த்தவர். எனக்கு ஐந்து வயதாக இருக்கும்பொழுது திடீரென்று மாரடைப்பால் மறைந்தார். நான் பார்த்த முதலாவது மரணச்சடங்கு தாத்தாவுடையது.

இந்த பொலிஸ் தாத்தா பற்றிய சுவாரஸ்ய மான கதைகளை ஏற்கனவே எழுதியிருக்கின்றேன். எனது அரசமரம் சிறுகதையிலும் இடம்பெற்றவர். மல்லிகை ஜீவா நினைவுகள் நூலிலும் இந்த பொலிஸ் தாத்தா வருகிறார்.

எங்கள் குடும்பத்தில் நாம் அப்பாவுக்கு செல்லப்பிள்ளைகள். ஆனால் அம்மாவுக்கு நாம் பெற்றோர்களான பின்பும் பயந்தவர்கள். குடும்பத்தில் அம்மாவின் ஆட்சிதான். அம்மா சொன்னால் தட்ட முடியாது.

"சரி அம்மா வருகிறேன்." என்றேன்.

அம்மாவுக்காகவே அந்தப்பயணம் வந்தேன். எங்கள் நீர்கொழும்பு வீட்டு முகவரிக்கு ஐந்து அழைப்பிதழ்கள் வந்திருந்தன. அம்மாவுடன் தம்பிமார் மற்றும் தங்கையின் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு சாகித்திய விருதையும் பணப்பரிசிலையும் வாங்கு வதற்கு கொழும்பு சென்று திரும்பினேன்.

பத்துநாட்கள் இலங்கையில் நின்றேன். அப்பொழுது சாகித்தியரத்தினா விருது பெற்ற வரதர் அவர்களுக்கு கொழும்பில் நண்பர் பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் அவர்களின் இல்லத்தில் நடந்த பாராட்டு தேநீர் விருந்துபசாரக்கூட்டத்திலும், திருமறைக்கலாமன்றம் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடத்திய பவளவிழாநாயகர் டொமினிக்ஜீவா பாராட்டு நிகழ் விலும் கலந்துகொண்டு உரையாற்றினேன். தமிழ்ச் சங்கத்தில் அப்பொழுது தலைவராக இருந்த தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் சிவகுருநாதன் தலைமை யில் எனக்கு பாராட்டு நிகழ்வு நடந்தது. பேராசிரியர் சோ. சந்திரசேகரன், மல்லிகைஜீவா, கம்பவாரதி ஆகியோர் உரையாற்றினர்.

மினுவாங்கொடைக்குச் சென்று எங்கள் தமிழ் இலக்கிய அபிமானி வண.ரத்னவன்ஸ தேரோ அவர்களையும் சந்தித்தேன். அந்த பத்துநாட்களும் வேகமாக ஓடிவிட்டன.

நான் அவுஸ்திரேலியா புறப்படும் நாள் வந்தது. சுவாமி அறைக்குச்சென்று அம்மாவிடம் ஆசிபெறும் போது, "தம்பி நானும் ஏயார்பேட்டுக்கு வருகிறேன்." என்றார்கள்.

எனக்கு வியப்பாகவிருந்தது. அம்மா அதற்கு முன்னர் அப்படி ஒருநாளும் சொன்னதில்லை. எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. சகோதரங்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

அம்மா அன்று விமானநிலையம் வந்து கட்டி அணைத்து முத்தமிட்டு வழியனுப்பிவைத்தார்கள்.

அவுஸ்திரேலியா திரும்பி சில நாட்களில் எனக்கு மாரடைப்பு வந்தது. அக்கா, தங்கை, தம்பி மாரிடம் நான் சுகவீனமுற்றிருக்கும் தகவலை அம்மா விடம் சொல்லவேண்டாம் எனச்சொன்னேன். அவர் களும் அம்மாவிடம் சொல்லவில்லை. எனக்கு பைபாஸ் சத்திரசிகிச்சைக்கு நாள் குறிக்கப்பட்டது. அதே வேளை அம்மாவுக்கும் திடீரென்று சுகவீனம் ஏற்பட்டது. அம்மாவின் சுகவீனத்தை எனது உடல் நலம்குறித்து குடும்பத்தினர் முதலில் மறைத்து விட்டார்கள். பின்னர் மனைவி ஊடாக அறிந்து கொண்டேன்.

ஒருநாள் அம்மா மறைந்தார்கள். அப்பொழுது எனக்கு சத்திரசிகிச்சை முடிந்துவிட்டது. என்னை சிகிச்சைக்குட்படுத்திய டொக்டரிடம் இலங்கை செல்ல அனுமதிகேட்டேன். அவர் மறுத்து விட்டார். அம்மாவின் மறைவுக்கு அவர் அனுதாபம் தெரிவித்தார். நான் அழுதுகொண்டே இருந்தேன். அவுஸ்திரேலியாவில் எனது வீட்டில் அம்மாவின் படம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. குடும்ப நண்பர்கள் வந்து ஆறுதல் சொன்னார்கள்.

அம்மா நீர்கொழும்பில் தகனமாகும்போது நான் மனைவி பிள்ளைகளுடன் அவுஸ்திரேலியாவில் அமைதிப்பிரார்த்தனையில் இருந்தேன்.

எனக்கு மாரடைப்பு வந்ததோ, சத்திர சிகிச்சை நடந்ததோ தெரியாமலேயே அம்மா கண்களை நிரந்தரமாக மூடிக்கொண்டார்கள். அம்மாவின் மறைவுபற்றி உயிர்வாழ...என்ற சிறுகதையை தினக்குரலில் எழுதியிருக்கிறேன். எனது கங்கைமகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

நான் யோசித்துப்பார்த்தேன்.

பல தடவைகள் இலங்கை வந்து திரும்பிய போதும் விமானநிலையம் வரையில் வந்து வழியனுப் பாத அம்மா, இறுதியாக தனது மறைவுக்கு முன்னர் மாத்திரம் ஏன் வந்தர்கள்.?

சாகித்தியவிருதை பெற்றுக்கொள்ள நான் வரத்தான்வேண்டும் அந்தக்காட்சியை தான் நேரில் பார்க்கத்தான் வேண்டும்...என்று எனக்கு ஏன் கண்டிப்பான உத்தரவு போட்டார்கள்.?


அந்தப்பயணம்தான் நான் அம்மாவை சந்திக்கின்ற இறுதிச்சந்தர்ப்பம் என்று அம்மாவின் உள்ளுணர்வு சொல்லிவிட்டதோ?

இறுதியாக அன்று விமானநிலையத்தில் விடைகொடுத்த அம்மா எங்கள் வீடுகளில் சுவர்களில் காட்சிதருகிறார். அம்மா கால்நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் எனக்கிட்ட கட்டளைகளை படிப்படியாக நிறை வேற்றியவாறு எனது பயணங்களை தொடரு கின்றேன். அம்மா இப்பொழுதும் என்னுடன் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

டென்மார்க் ஜீவகுமாரன்

# விவாகரத்து



"12 வருட திருமண வாழ்க்கைக்குப் பின் நாம் பிரிந்து வாழ முடிவு செய்திருக்கின்றோம். கொப்பனேகன் நகர மண்டபத்துக்கு அருகில் உள்ள உணவுவிடுதியில் நடைபெறவுள்ள இந்த விவாகரத்து நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சமோதரராய் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் - இங்ஙனம் சபேசன், சாந்தா".

வெளியே பனி இறுகிப் பாறையாய் இருந்தது. இருவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் அது. ஆனாலும்... இந்த அழைப்பிதழ்?

தாழப்பறந்து வந்த கிபிர் விமானம் குண்டு போட்டுப் போனது.

பனிப்பாறைகள் பிளந்து பறந்தன.

உடம்பின் நடுக்கம் இன்னமும் குறைய வில்லை.

பதின்மூன்று வருட தாம்பத்தியம்!

இரண்டு பிள்ளைகள் - டென்சிக்கு 11. கிரணுக்கு 9.

டென்சியின் சாமத்தியத்துக்கு இன்னமும் 3 மாதம் இருக்கின்றது.

அதற்கிடையில்தான் இந்த அழைப்பிதழ்!

அழைப்பிதழுடன் சேர்ந்து ஒரு கடிதம்... நடந்து முடிந்த அத்தனையும்... 31ம் திகதி மற்றவர் களுக்கு சொல்லுவதற்காக அதில் எழுதப்பட்டிருந்து... அதில் எந்த ஒரு பிழையையும் சாந்தாவால் காண முடியவில்லை. ஆனால் உண்மை சுட்டது!

பிள்ளைகளை சபேசனுடன் விட்டுவிட்டு தலைமறைவாக கனடாக்கோ அன்றி இலங்கைக்கோ போகவும் அவளால் முடியவில்லை. "டென்சியும், கிரணும் எனதும் பிள்ளைகள் தான்" அவள் தனக்குள் தான் சொல்லிக் கொண்டாள். அன்று யாராவது சபேசனின் மனதை மாற்ற மாட்டார்களா என "யாழ்ப் பாண பேதை" மனம் நினைத்தது. ஆனால் அடுத்த வினாடியே... வாழ்க்கைக்காக பிச்சை போடுங்கள் என இனியும் யாரிடமும் நான் கையேந்த வேண்டாம் என அவளுள் இருந்த "டென்மார்க் சாந்தா" உறுதியாகச் சொல்லிக் கொண்டாள்.

ஒருவருக்கொருவர் தங்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அந்த அழைப்பிதழை அனுப்புவது என ஆத்திரத்திலும் அழுகையுடனும் கதைத்தது தான்.

ஆனால் அவளால் செயல்படுத்த முடிய வில்லை. அவனுக்கு அது முடிந்திருந்தது.

"நீங்கள் இன்னமும் மாறாவே இல்லை.... அதே ஆம்பிளைதிமிர்...."

"பிரச்சினை ஆம்பிளை-பொம்பிளை இல்லை எண்டது உனக்குத் தெரியும்"

"பிள்ளையின்ரை சாமத்தியம் வரையாவது பொறுத்திருக்கலாமே"

"பிறகு பிள்ளையின்ரை கலியாணம் வரை பொறுத்திருக்க சொல்லி வரும். இனிமேலும் இந்த அரியண்டங்களை என்னாலை தாங்கேலாது"

"நான் அரியண்டமாய் போயிட்டனோ"

அடுப்பில் குழம்பு கொதித்துக் கொண்டு இருந்தது.

***

இந்த வருடக் குளிர் ஐரோப்பா முழுவதை யுமே உறைய வைத்துக் கொண்டு இருந்தது. மக்கள் கோடைகாலத்தில் முன்னேற்பாடாக வேண்டி வைத்திருந்த மலிவான விறகுகள் எல்லாவற்றையுமே முற்றாக எரித்து வீடுகளை கதகதப்பாக வைத்துக் கொண்டார்கள். மற்றவர்களோ விலை கூடிய மின்சார அடுப்புகளை பாவித்துக் கொண்டு இருந்தார்கள்.

கிறிஸ்மஸ் விளம்பரங்கள் தபாற்பெட்டியுள் நிறைந்து கண்சாடை காட்டிக் கொண்டு இருந்தன.

ஆனால் இந்த வருடம் தங்களுக்கு மகிழ்ச்சி யான கிறிஸ்மஸ் கொண்டாட்டமாக இருக்கப் போவ தில்லை என பிள்ளைகள் இருவரும் தீர்மானித் திருந்தார்கள். அவர்கள் பிறந்தநாளில் இருந்து முதன் முதலாக அவர்கள் வீட்டில் கிறிஸ்மஸ்மரம்

வைக்காமல் இருக்கும் மார்கழி 25. இந்த ஆண்டுதான் அவர்கள் கிறிஸ்தவர்கள் இல்லை. ஆனால் ஊருடன் சேர்ந்து கொண்டாடும் ஒரு திருவிழாப் போலதான் சிறுவயதில் இருந்து இது இருந்து வந்தது.

மார்கழி முதலாம் திகதியே சபேசனும் சாந்தாவும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு காட்டுக்குப் போய் கிறிஸ்மஸ் மரத்தைத் தறித்து காரின் பின்வண்டியில் போட்டு இழுத்து வந்து வீட்டின் நடுவில் நிறுத்தி வைப்பது தொடக்கம், 31ம் திகதி இரவு அதனை எடுத்து வெளியில் போடும் வரை இத்தனை ஆண்டு களும் அந்த குடும்பத்தின் மகிழ்ச்சி கிறிஸ்மஸ் மரத்தைச் சுற்றியே இருக்கும். கிறிஸ்மஸ் பரிசுகள், பலகாரங்கள், மேலாக கிறிஸ்மஸ் விருந்துகள் என அந்த வாரம் ஓடிக்கொண்டேயிருக்கும்.

அதன் உச்சக்கட்டமாக மார்கழி 31ம் திகதி மாலைக் கொண்டாட்டமும் இறுதியில் இரவு 12 மணியாகும் பொழுது வாணங்கள், மத்தாப்பூக்கள், வெடிகள் என வருடப்பிறப்பை அனைவரும் கொண்டாடி மகிழ்வார்கள்.

இந்த அழைப்பிதழ் மிக நெருங்கிய நண்பர்கள் அவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பப்பட்டு இருந்தது. இறுதியாக தன் மனைவி பிள்ளைகளுடன் அவன் கழிக்க இருக்கும் மார்கழி 31. ஆனால் வீட்டில் இல்லை. வெளியே ஒரு உணவு விடுதியில்.

சுமார் முப்பது நெருங்கிய குடும்பங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ் அது. ஆனால் அந்த விடயம் அந்த ஊரிலும் பக்கத்து ஊரிலும் இருந்த சுமார் 300 குடும்பங்களுக்கும் தெரிய வந்திருந்தது. நாளை லங்காவிறியில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஊரைக் கூட்டிச் செய்யும் கலியாணம் போல ஊரைக்கூட்டிச் செய்யும் விவாகரத்து என.

இந்த அழைப்பிதழ் அனுப்பப்பட்ட பின்பு வழமைபோல பிள்ளைகளுடனும் மனைவியுடனும் சபேசன் கடைத்தெருவுக்குப் போகும் போது எல்லா தமிழ்க் கண்களும் அவனை விநோதமாக பார்த்தன.

"பிடிக்காட்டி வெட்டி விடுறதுக்கு இதென்ன அழைப்பிதழ் வைக்கிறது? சுத்த டெனிஷ்தனம்"

"அவனிலை பிழையோ? அவளிலை பிழையோ?"

"அவள் வேம்படியிலை படிக்கேக்கை என்ன ஆட்டம் ஆடிப்போட்டு இஞ்சை வந்தவளோ யாருக்குத் தெரியும்?"

"ஏன் அவர் சிங்கப்பூரிலை வேலை செய்யேக்கை என்ன கூத்து அடிச்சுப் போட்டு இஞ்சை வந்தவரோ... "

"என்னதான் சொன்னாலும் அந்த இரண்டு பேரும் எங்கள் எல்லாருக்கும் உதவி செய்திருக்கினம். ஒரு சின்ன போர்ம் என்றாலும் அதுகள் தான் நிரப்பித் தாறது. எந்த சாதி சமயம் பார்க்காமல் எல்லாருடனும் நல்லாய் பழகுறதுகள். பாவங்கள்... யாரிட்டை கண் பட்டுதோ"

இரண்டு அழைப்புக்கு மூன்றாவது அழைப்பு இலவசம் என்ற இந்த வருட தொலைபேசி விளம்பரத்தை அந்த நகரமே இவர்களுக்காகவே பாவித்துக் கொண்டிருந்தது. தொலைபேசிக் கம்பனிக் காரன் நினைத்தானா தமிழர்களுக்கு முதலிரண்டு அழைப்பும் ஒரு நிமிட அழைப்பாயும் மூன்றாவது ஒரு மணித்தியால அழைப்பாயுமாய் இருக்கப் போகின்றது என.

***

"நானும் நீயும் பிரிஞ்சு போன பிறகு... ஆளுக்காள் உன்னைப் பற்றியும் என்னைப் பற்றியும் தவறாய் வாய்க்கு வாய் வந்ததுகளைக் கதைக்காமல்... இதாலைதான் பிரிகிறம் எண்டு எங்களுக்கு வேண்டியவைக்கு சொல்லுறது நல்லது தானே. இல்லாட்டி ஆயுள் முழுக்க நீயும் நானும் உன்னிலை பிழை, என்னிலை பிழை என்று அறிக்கை விட்டுக் கொண்டு.... பட்டி மன்றம் நடாத்திக் கொண்டு... இருக்கிற நிம்மதியும் இல்லாமல் வாழ வேண்டி வரும்", சபேசனுக்கு குரல் கட்டியது.

கண்ணீர் பொல பொல என்று ஓடியது.

"உங்களுக்கு நிம்மதி வேண்டும் எண்டு பிரிகிறியளோ! இல்லாட்டி என்னைத் தண்டிக்க வேண்டும் எண்டு பிரிகிறியளோ"

"இரண்டும் தான்"

"இந்தப் பிரச்சினையிலை ஊமைபோல நான் இவ்வளவுகாலம் இருந்ததுக்கு என்னை தண்டிக்க வேண்டும் எண்டு நினைக்கிறியள். அது உங்கடை பிள்ளையளையும் தான் சேர்த்துதான் தண்டிக்கும்"

"உன்ரை ஐயாவும் அம்மாவும் செய்தது களையும் நான் செய்ய வேண்டும் எண்டு நினைக்கிறியோ. . . உன்னைக் கலியாணம் கட்டி 12 வருசத்துக்கு பிறகு நான் அனுபவிக்கிற இந்த வேதனையளை என்ரை பிள்ளையள் அனுபவிக்க வேண்டாம். அதுகள் ஆவது உண்மையாய் வாழட்டும்."

"அப்ப நான் உங்களோடை நேர்மையாய் வாழேல்லையோ"

"நேர்மையாய் தான் வாழ்ந்தனி. ஆனால் இன்னொரு உண்மையையும் மறைஞ்சுக் கொண்டு வாழ்ந்தது பொய்யான வாழ்க்கை தானே"

"உங்களுக்கு விரும்பினமாதிரியே எதையும் செய்யுங்கோ. உங்கடை பட்டுப் பீதாம்பரங்களிலை இருந்து எந்த நூலும் கீழை விழுந்து விட வேண்டாம்."

சபேசன் முகத்தை நிமிர்த்திப் பார்க்க அவள் மௌனமானாள்.

குசினியுள் சென்று தனக்கும் அவனுக்கும்

தேநீரை எடுத்து வந்து முன் வைத்தாள்.


"எத்தனையோ முற்போக்கு கதைக்கிற உங்களுக்குள்ளை இப்பிடி ஒரு சபேசனா"

"இது முற்போக்கு, பிற்போக்குப் பிரச்சினை இல்லை. இது ஒருத்தனை திட்டமிட்டு ஏமாத்தினதுக்கு நீயும் உடந்தையாய் இருந்திருக்கிறாய். இதை திருமணத்துக்கு முதல் நீ சரி, அல்லது யார் சரி சொல்லியிருந்தாலும் கட்டாயம் உன்னை நான் கட்டித்தான் இருப்பன்"

அத்துடன் முடிந்த அன்றைய சம்பாசணையின் முடிவுதான் இன்று கைகளில் வந்திருக்கும்

"விவாகரத்துப்பிரிவு" அழைப்பிதழ்.

கையில் "விவாகரத்து" அழைப்பிதழ் இருந்த



பொழுதும், இந்த 12 திருமண, தாம்பத்திய வாழ்வின் சுகத்தையும் இனிமையையும் யாரும் வாழ்ந்திருக்க மாட்டார்கள் என மனதுள் எண்ணிக் கொண்டாள். அவளைச் சரி, பிள்ளைகளைச் சரி சபேசன் கவனித்துக் கொண்டதை பெருமையாக எண்ணிக் கொண்டாள்.

***

"ஐயா நீங்கள் செய்தது பிழைதான்.... அதுக்கு என்ரை வாழ்க்கை பலியாகிப் போச்சுது" அன்று இரவு முழுக்க சாந்தா நித்திரையிலும் உழற்றிக் கொண்டு இருந்தாள்.

"இந்தப் பாவியின்ரை வயித்திலை ஐஞ்சு பேரும் பெட்டையளாய் வந்து பிறந்தியளே... ஐயா என்ன செய்யுறது. ஒருத்தி வெளியிலை போனால் மற்றதுகளை நல்லாக்கிப் போடுவாய் எண்டு நினைச்சவர்" தாய் கனகம் கனவில் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

***

கடந்த கோடை விடுமுறைக்கு இலங்கைக்கு போகாமலே இருந்திருக்கலாம்.

காலம் முன்னேயும் அறிவு பின்னேயும் தானே சென்றுகொண்டு இருக்கிறது. எனவே தான் "இப்படி இருந்திருக்கலாம்", அப்படி இருந்திருக்கலாம்" என அறிவு யோசிப்பது எல்லாம் வாழ்விடம் தோற்றுப் போகின்றது.

சபேசன் டென்மார்க் வந்து 15 வருடங்கள். சாந்தாவுக்கு 12 வருடங்கள்.

அகதி அந்தஸ்த்து கிடைத்த அடுத்த வருடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பஸ்தர் சபேசனிடம் கேட்டார், "தம்பி எத்தனை நாளைக்குத் தான் உந்த மக்டொனால்ஸ் செத்த இறைச்சியை சாப்பிட்டுக் கொண்டு இருக்கப் போறீர்"

"நல்ல வடிவான படிச்ச பெட்டையாய் பாருங்கோவன் அண்ணை"

அடுத்து வந்த தபாலில் படமும் அதற்கு அடுத்த விமானத்தில் சுபமுகூர்த்தமும் பெண்ணும் டென்மார்க்கிற்கு வந்து இறங்கியது.

நல்ல + படிச்ச + வடிவான மூன்றும் சபேசனுக்கு அமைந்ததில் பலருக்குப் பொறாமையாக இருந்தது.

"இந்த உரல் உலக்கைகளையும் அம்மிக் கல்லுகளையும் நாங்களும் கொண்டு வந்து குடும்பம் நடத்துறம்" என மனைவிமாருக்கு பயந்தபடியும் பகிடி போலவும் சொல்லிக் கொண்டு கணவர்மார்கள் மொழிப்பாடசாலை, மலிவு விலையில் ஆறு கோழி 100 குறோன்கள் என வேண்டி சோற்றுடனும் பருப்புடனும் உருளைக்கிழங்குடனும் வாழ்ந்து கொண்டிருந்த காலம் அது. அப்போதெல்லாம் துருவக்கரடி போட்ட மலிந்த பியர் தான். இப்போதுதான் அது சிவாஸ்ரீகல் விஸ்கிக்கு மாறியிருக்கிறது.

திருமணம் மிகச்சிறப்பாக நடந்தது. அவுஸ்திரேலியாவில் இருந்து அவனது ஒரேயொரு உடன்பிறப்பான தங்கை குடும்பமும் தகப்பன் தாயும் வந்து அனைத்தையும் சிறப்பாக செய்து முடித்தார்கள். காரைநகரில் மிகப்பிரபலமான குடும்பம் அவர்களது. காரைநகர் சிவன்கோயில் காணியே எங்கடை தாத்தா கொடுத்தது என அடிக்கடி சொல்வதில் சபேசனுக்கு அப்படி ஒரு பெருமை. சாந்தாவுக்கு வெளிநாட்டு உறவுகள் என்று எதுவுமில்லை. இலங்கையில் இருந்த உறவுகளுக்கு திருமணத்திற்கு வர பொருளாதாரம் வசதியும் இருந்திருக்கவில்லை.

அந்த நகரத்தின் இளம் தமிழ் தம்பதியினர் சபேசனும் சாந்தாவும் தான். இளரத்தங்களின் நாடி நாளங்களில் மொழிக்கல்வி இலகுவில் பாய்ந்தோடி சுண்ணாம்பு படிவில்லாத மூளையில் அது இறுக்கமாக படிந்து கொண்டது. அந்து நகரத்துக்கு முன்னர் வந்தவர்களை விட இவர்கள் இருவரின் முன்னேற்றம் துரிதகதியில் சென்று கொண்டு இருந்தது.

அடுத்தடுத்து சாந்தாவிற்கு இரண்டு பிள்ளைகள் பிறந்த பொழுதும் அது அவர்களின்

படிப்பையோ முன்னேற்றத்தையோ குழப்பவில்லை. அதிக நேரம் சிக்கினலுக்காக காத்திருந்து செல்லும் புகைவண்டிப் பயணம் போல அது அமைந்திருந்தது. ஆனாலும் அடைய வேண்டிய இலக்குகளை இருவருமே அடைந்து கொண்டு இருந்தார்கள்.

கல்வியும் அது கொடுத்த நல்ல பதவிகளும் அதனால் அமைந்த பொருளாதாரமும் அவர்களின் வாழ்வு மிகச் சிறப்பாக அமைந்தது. தமிழ், டெனிஷ் கலாச்சாரத்தில் வாழ்ந்து செல்வது என்பது இருவேறு சக்கரங்களைப் பொருத்தி வண்டி ஓட்டுவது போல. அதை அவர்கள் நன்கே செலுத்திக் கொண்டு சென்றார்கள். பழமையையும் பேணி புதுமையையும் ஏற்று வாழும் கலை எல்லோருக்கும் உடனே வந்து விடுவதில்லை.

தாங்கள் முன்னேறிக் கொண்டும் ஊரில் இருந்த சாந்தாவின் தங்கைகளின் திருமணங்களுக்கும் இருவரும் உதவிக் கொண்டு இருந்தார்கள். சபேசனுக்கு ஊரில் எவர்க்கும் உதவ வேண்டும் என்ற தேவை இருக்கவில்லை.

நாட்டிலும் போர் நடந்து கொண்டு இருந்தது.

வெற்றி... தோல்வி... உண்மையான... பொய்யான... அல்லது இரண்டும் கலந்த செய்தி களையும்... இடைக்கிடை உண்ணாவிரதங்களையும் ஊர்வலங்களையும் ஏற்று நகர்ந்து கொண்டிருந்த புலம் பெயர்ந்த ஐரோப்பிய தமிழர்களின் அரசியல் வாழ்வு 2009ல் ஒரு தரம் ஸ்தம்பித்தது.

எம். ஜி. ஆர். ரசிகராய் இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி அவரின் மறைவு முழுதமிழ் உலகத்தை யும் கவலை கொள்ள வைத்த மாதிரித் தான் ஆயுதங்கள் மௌனமாக்கப்பட்டதும்... அதனைத் தொடர்ந்து வந்த உறுதி செய்யப்படாத மரணச் செய்திகளும் முழு உலகத்தையும் ஒரு தரம் உலுக்கி எடுத்திருந்தது.

ஒருவரின் இழப்பு மற்றவர்களுக்கு அவரை மயானத்துக்கு எடுத்துச் செல்லும் வரை இருக்கும். சிலருக்கு 3நாட்கள் வரை இருக்கும். வேறு சிலருக்கு 30 நாட்கள் வரை இருக்கும். மிகக் குறைந்தவர்களுக்கு ஒரு வருடம். பின்பு கண்ணாடிச் சட்டத்தினுள் மாட்டப்பட்ட படத்தை பார்க்கும் போது மட்டுமே அவர்களின் நினைவு வரும். அதுபோலவே இறுதிப் போரின் பின் நிலைமைகளும் மாறத் தொடங்கி 2009இன் கோடை விடுமுறைக்கு வெளிநாடுகளில் இருந்து ஒரு ஆயிரம் குடும்பமும் 2010ல் பத்தாயிரம் குடும்பங்களும் என 2012 வந்த பொழுது விமான ரிக்கற்கள் கிடையாமல் தள்ளப்படும் நிலையும் வந்தது.

அவ்வாறு 2012 கோடை விடுமுறைக்கு ஊர் உறவுகளைக் பிள்ளைகளுக்கு காட்டவும் சாந்தாவும் சபேசனும் பெரிதும் விரும்பினார்கள் – பனிகாலத்தில் நிலத்தின் கீழே உறங்கிக் கிடந்த கிழங்குகள் வசந்த காலத்தில் தலை தூக்குவது போல பல ஆசைகள் தலைதூக்கின.

கிணற்றில் தண்டு மோண்டு குளிப்பது... பிலாப்பலத்தை கீறி கையில் பசை ஒட்ட ஒட்ட பிய்த்து பிய்த்து சாப்பிடுவது... நுங்கை வெட்டி நுங்கின் கண்ணுக்குள் விரலை நோண்டிச் சுவைப்பது... சந்தைக்கு நடந்து சென்று மரக்கறியும் மீனும் வேண்டி வந்து கூழ்காய்ச்சிக் குடிப்பது... பின்னேரங்களில் மரவள்ளிக் கிழங்கை அவித்து தேங்காய்பூ போடாத மிளகாய்ச் சம்பலுடன் சாப்பிடுவது... பூவரசம் இலையை பிடுங்கி பீப்பி ஊதுவது... அதே பூவரசம் பூவில் பொம்மை செய்து பிள்ளைகளுக் காட்டுவது... வைரவகோவிலுக்கு பின்னால் உள்ள வயல் காணிக்குள் வெறும் கால்களுடன் நடந்து போவது என இத்தியாதி இத்தியாதி....

முடிவு?

ஆம்! இலங்கையில் யாருக்கும் சொல்லாமல் சஸ்பென்ஸாக போய் இறங்குவது என முடிவாயிற்று.

15 வருடங்களுக்கு முன்பு இடைவழியில் இலங்கை கடவுச் சீட்டை கிழித்துப் போட்டு நடுங்கியபடி டெனிம் ரவுசருடன் பயணித்த அதே எயர் லங்காவில் இப்போ கோட்டும் சூட்டும் போட்டபடி கையில் டெனிஷ் பாஸ்போட்டுடன் வானத்தில் "வேலாயுதம்" திரைப் படத்தைப் பார்த்தபடி பயணம் மிக மகிழ்ச்சியாக இருந்தது.

சாந்தாவுக்கு 5 தங்கைகள், அவர்களின் குடும்பங்களை, பிள்ளைகளை, மேலாக வயது போன தாய் தகப்பனைச் சந்திக்க இருக்கும் மகிழ்ச்சியும், அவர்களை முதல் தடவையாக சந்திக்க இருக்கும் தனது கணவன் பிள்ளைகளிடம் அவர்கள் காட்ட இருக்கும் பாசத்தை எண்ணியபடியே அவளும் முகில்களினூடு பயணப்பட்டுக் கொண்டு இருந்தாள்.

பிள்ளைகளுக்கு விமானத்தில் ஆயிரம் பொழுதுபோக்குகள் இருந்த பொழுதும் சபேசனையும் சாந்தாவையும் கேள்விகளால் துளைதெடுத்து விட்டார்கள். எங்கு எங்கு போவது?, சுடுதண்ணிக் கிணறு சுடுமா?, யானை நிற்குமா?, பாம்பு கடிக்குமா?, மக்டொனால்ஸ் யாழ்ப்பாணத்தில் இருக்கா?, எங்களுக்கும் இப்பவே யாழ்ப்பாணத்தில் கலியாணம் பேசுவியளா என வயதுக்கு வந்த, வராத அனைத்து கேள்விகளும் அவர்களிடம் வந்து கொண்டு இருந்தது. சபேசனும் சாந்தாவும் சளைக்காமல் பதில் சொல்லிக் கொண்டு இருக்க விமானத்தின் பின் சில்லுகள் தரையைத் தொட்டது.

திரையில் அழகிய இரண்டு மயில்கள் நடந்து சென்றன.

வெளியே அழகான தென்னை மரங்கள்.

***

"அப்பாவின்ரை ஊருக்கு முதல் போறமா? அம்மாவின்ரை ஊருக்கு முதல் போறமா?"

விமானநிலையத்தில் ஒழுங்கு செய்த கார் ஆனையிறவைத் தாண்டிக் கொண்டு இருந்தது.

"அம்மாவின்ரை யாழ்ப்பாணம் தான் முதல் வரும். அப்பாவின்ரை காரைநகர் பிறகுதான் வரும்"

"யாழ்ப்பாணத்திலை எந்த இடம்" தமிழ் தெரிந்த சிங்கள ரைவர் விசாரித்தான்.

"பீச் றோட்"

"அப்ப கடற்கரை எல்லாம் இருக்கா அம்மா... நாங்கள் குளிக்கலாமா"

"ஓம்! ஆனால் அப்பாவின்ரை காரைநகரில் இருக்கிற ஒரு பீச்தான் இன்னும் நல்லது"

"சுப்பர்... டென்மார்க் போறவரை இனி ஒவ்வொரு நாளும் நாலு பேரும் கடலிலை குளிக்க வேணும்"

குழந்தைகள் குதூகலித்தார்கள்.

கார் போய்க்கொண்டு இருந்தது.

போர் தொடுத்த வடுக்கள் வழியெங்கும் தெரிந்தது.

"பாத்தீங்களா ஐயா... எப்பிடி இருந்த ஜவ்னா எப்பிடிப் போச்சுது"

அனுதாபப்படுகின்றானா?... அல்லது தங்களது வெற்றியை மறைமுகமாக சொல்லு கின்றானா?

சபேசனின் மௌனம் மேலும் அவனைப் பேசவிடவில்லை.

வீதிகள் முழுக்க நின்ற இராணுவத்தினரும் மொட்டையாக கருகியபடி காட்சியளித்த தென்னை களும் பனைகளும்" இது என் யாழ்ப்பாணம் இல்லை" என சபேசனை எண்ண வைத்தது.

மனதுக்குள் ஒரு மூட்டம்.

கார் பிரதான கண்டி வீதியில் இருந்து கொழும்புத்துறை வீதியை நோக்கித் திரும்பியது.

"வந்திட்டமா அம்மா?"

"இப்ப பீச் றோட் வந்திடும்"

குழந்தைகள் இருவரும் தங்கள் முகம் கண்ணாடியில் ஒட்ட வைத்தவாறு வெளியே பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

"அம்மம்மா, அம்மப்பா எல்லோருக்கும் பெரிய ஆச்சரியமாய் இருக்கப் போகுது"

கார் பீச் றோட்டை நெருங்க அவர்களின் படபடப்பு அதிகமானது.

தூரத்தில் கடலும் மீன்பிடி வள்ளங்களும் கரையில் மக்களுமாக தெரிந்தார்கள்.

சபேசனுக்கும் சாந்தாவின் வீட்டைச் சரி, அவளது பெற்றோர், சகோதரங்களைப் பார்ப்பது சரி இதுதான் முதல் தடவை.

சாந்தாவின் வழிகாட்டலில் கார் ஒரு மணல் ஒழுங்கையில் இறங்கி மீண்டும் ஒரு றோட்டுக் ஏற கடலும் இன்னும் அதிக வள்ளங்களும் அதிக தென்னோலையால் மேய்ந்த வீடுகளும் அண்மித்தன.

பிள்ளைகள் கண்ணாடிக் கதவை இறக்கினார்கள்.

காரினுள் "குப்" என்று ஒரு மீன்வாடை.

அடுத்த கணமே பெண் பிள்ளை மூக்கைப் பொத்திக் கொண்டு வாந்தி எடுத்தாள்.

பையன் கண்ணாடிக் கதவை மீண்டும் மூடினான்.

வாந்தி எடுத்த குழந்தையின் வாயைக் கழுவ தண்ணீயை டிக்கியில் இருந்து எடுப்பதற்காக சபேசன் காரை நிறுத்தச் சொல்ல, "அது தான் வீடு", என சாந்தா பக்கத்தில் இருந்த தென்னோலையால் வேயப்பட்டு இன்னமும் கட்டிமுடிக்காமல் இருந்த சீமெந்து வீட்டைக் காட்டினாள். முற்றத்தில் வலைகள் தொங்கிக் கொண்டு இருந்தது.

கார் ஒன்று வந்து நிற்பதைக் கண்டதும் ஊரே திரண்டது போல, காலைக் கடற்கரையில் நின்றிருந்த சிறியவர்கள் பெரியவர்கள் என காரை நோக்கி வந்தார்கள்.

எல்லோரினும் மீன் வாடை அடித்தது.

"எடியே சரசு... சுப்புராசான்ரை மேள் வந்திருக்கிறாள்"

சபேசனின் முகம் இருண்டது.

டென்சி தொடர்ந்து சத்தி எடுத்துக் கொண்டு இருந்தாள்.


# ஜீவநதி சந்தா விபரம்

துனிபிரதி - 80/= ஆண்டுச்சந்தா - 1200/= வெளிநாடு - $ 50U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K .Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்


K.Bharaneetharan

Commercial Bank - Nelliady Branch

A/C No.- 8108021808 CCEYLKLY

தெணியான்

# ஆத்ம பந்தம்



அப்பு இன்னும் வரவில்லை.

அப்பு இப்படி வராமல் இருக்க மாட்டார்

அவருக்கு இயலாத உடல் நிலையிலும் மெல்ல மெல்ல நடந்து அவர் எப்படியும் வந்து சேர்ந்து விடுவார்.

விடுமுறை நாட்களில் நான் வீட்டில் நிற்பேன் என்பது அவருக்கு தெரியும். சனிக்கிழமைகளில் அவர் தவறாது இங்கு வந்து சேருவார். அன்று முடியாது போனால் ஞாயிறு நிச்சயமாக எதிர்பார்க்கலாம். காலை ஒன்பது மணிக்கும் பத்து மணிக்கும் இடையில் வந்து விடுவார்.

அப்பு வரும் நேரம் நான் எங்கே, என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் மனம் அவர் குரலை எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

அவர் வரும்போது படலை திறக்கும் சத்தத்துடன் சேர்ந்து, "பிள்ளை" என உரிமையுடன் அழைக்கின்ற குரல் கேட்கும்.

அந்தக் குரலின் பின்னே மெதுவா மெதுவா அவர் அடி எடுத்து முற்றத்துக்கு வருவார்.

அப்புவை முதன் முதலில் நான் கண்டபோது, பார்ப்பதற்கு மிகப் பரிதாபமான தோற்றத்தில் அவர் நின்றார்.

நாலுமுழ வெள்ளை வேட்டி அப்பு அரையில் கட்டியிருந்தார். அது பெயருக்குத்தான் வெள்ளை வேட்டி. அழுக்குக்குமேல் அழுக்குப் படிந்து அதன் நிறம் காவியாக மாறிப்போய்க் கிடந்தது. அந்த வேட்டியை தூக்கி முழந்தாளுக்கு மேல் மடித்து, தொடை தெரியக் கட்டியிருந்தார். வேட்டி நிறத்தை ஒத்த சிட்டைத் துண்டொன்றை வேட்டிக்கு மேல் சுற்றி இருந்தார். தலைமுடி வளர்ந்து கற்றையாகி சுருண்டு தொங்கிக் கொண்டிருந்தது. பல நாட்கள் மழிக்காத தாடி, மீசை கன்னங்களில் அடர்ந்து கிடந்தது. மார்பில் மொசு மொசென்று வளர்ந்த ரோமம் குப்பையாகச் செறிந் திருந்தது. நெற்றியில், மூக்கில் துளித்துளியாக வியர்வை அரும்பி நின்றது. ஒட்டிச். சுருங்கிப்போன வயிறு, உலர்ந்து கிடக்கும் வெற்றிலைச் சாயம் படிந்த உதடுகள், முகத்தில் பசிக்களை, கண்களில் ஏக்கமுமாக நின்றார்.

அப்புவின் தோற்றம் எனக்கு நெஞ்சை நெகிழ வைக்கிறது.

இந்த அப்புவுக்கு மனைவி இல்லையா? மக்கள் இல்லையா? அல்லது இருந்தும் அவர்கள் கவனிக்காது விட்டுவிட்டார்களா?

எனக்குள் நான் ஒரு தடவை கேட்டுக் கொள்கிறேன்.

அப்பு முதுகைச்சற்று வளைத்துக் குறுகிநின்று கையைநீட்டி "பிச்சை போடுங்கோ தாயே..." என்கின்றார்.

அப்புவின் பணிவு எனது மனசைத் தொடுகின்றது. "ஐயோ பாவம்" என நினைத்துக் கொண்டு "வாறன் நில்லுங்கோ...!" எனச் சொல்லிக் கொண்டு திரும்ப உள்ளே வருகின்றேன்.

அம்மா அடுக்களைக்குள் உட்கார்ந்து காய்கறிகள் வெட்டிக் கொண்டிருக்கின்றா.

"அம்மா, ஒரு அப்பு வந்து நிற்குது"

"ஒரு பத்து ரூபா எடுத்துக்குடு பிள்ளை"

நான் எதிர்பார்த்தது போல அம்மா சொல்லுறா.

இன்றைய விலைவாசி உயர்வில், இதை விடக் குறைவாகக் கொடுப்பதற்கு அம்மா நினைப்ப தில்லை.

ஆனால் எனக்கு மனதில் திருப்தி இல்லை, அசையாது அம்மா முன் நிற்கிறேன்.

அம்மா என்னை விளங்கி வைத்திருக்கின்றா. தலை நிமிர்ந்து ஒரு தடவை என் முகத்தைப்

பார்க்கின்றா.

நான் மெல்லச் சிரிக்கின்றேன்.

இந்தச் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, "சரி... உன்ரை விருப்பம்போல குடு" என்கிறா.

நான் இருபது ரூபா நோட்டொன்றை எடுத்து வந்து, "இந்தாங்க..." என அப்புவிடம் நீட்டுகிறேன்.

அப்பு அந்தக் காசை கையில் வாங்கிப் பார்க்கின்றார். அவர் முகம் பட்டென மலர்கிறது. மறுகணம் ஆச்சரியமாக என்னைப் பார்க்கின்றார்.

ஒரு ரூபா.... இரண்டு ரூபா... அல்லது ஐந்து ரூபா நாணயத்தை அவர் எதிர்பார்த்திருப்பார். அவர் எதிர்பார்த்ததுக்கு மாறாக இப்படிப் பெரிய நோட்டு கையில் கிடைத்திருப்பது கண்டு அதிசயப் படாமல் இருக்க முடியவில்லை.

அவர் நன்றியுடன் என்னை நோக்குகின்றார்.

உதட்டில் சிறிய கீற்றாகப் புன்னகை நெளிய, அனுதாபத்துடன் நான் அவரைப் பார்க்கின்றேன்.

அப்பு மன நிறைவுடன் திருப்பிப் போய் விடுவார் என்பது எனது எதிர்பார்ப்பு. ஆனால் அப்பு நின்ற இடத்தில் இருந்து இம்மியும் அசையாது அப்படியே நிற்கின்றார்.

அப்பு மனதுக்குள் ஏதோ ஒரு போராட்டம்,

அவர் பார்வை அதைச் சொல்கிறது,

சில கணங்களின் பிறகு அவர் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும், என்முகத்தைக் குறிப்பாகப் பார்க்கின்றார். துயரப் பெருமூச்சொன்று அவர் நெஞ்சில் இருந்து வெளிவருகின்றது. பின்னர் குரல் தளதளக்க, "அம்மா..." என மெல்ல அழைக்கின்றார்.

"என்ன சொல்லுங்கோ...!" பரிவுடன் கேட்கின்றேன்.

"பெரிய களையாக் கிடக்கு... ஒரு தேத்தண்ணி தந்தால் புண்ணியம் கிடைக்கும் தாயே!"

"இருங்கோ வாறன்..." அவசரமாக நான் உள்ளே திரும்பி வருகிறேன்..

அடுக்களைக்குள் நுழைந்து விரைவாக தேநீர் தயாரித்து முடிக்கிறேன். அதை ஒரு குவளையில் ஊற்றி, கையில் தூக்கும்போது, "தின்பதற்கு ஏதாவது குடுக்கலாமே...!" என்ற எண்ணம் மனதில் எழுகின்றது.

இப்பொழுது என்ன உணவு வீட்டில் இருக்கப் போகிறது?

மதிய வேளைக்குரிய சமையல் செய்து முடிக்கும் வரை அம்மாவுக்கு வேலை நெருக்கடி. அந்த அவசரத்தில் காலை உணவு உண்பதற்கு, பெரும்பாலும் அம்மா மறந்து போவது வழக்கம். இதை மனதில் வைத்துக்கொண்டு, "அம்மா சாப்பிட்டு விட்டியளா...?" என வினவுகிறேன்,

அம்மா என்னைப் புரிந்து கொண்டு, சட்டென திரும்பிப் பார்க்கின்றா. பின்னர், "பணிஸ் கிடக்கு... எடுத்துக் கொண்டுபோய்க் குடு" என்றவ, தொடர்ந்து வேலையைக் கவனிக்கிறா.

நான் தேநீருடன் பணிஸைக் கொண்டு வந்து அப்புவிடம் கொடுக்கின்றேன்.

அப்பு ஆவலுடன் கைகளை நீட்டி வாங்குகின்றார். அவர் கைகள் இரண்டும் மெல்ல நடுங்குகின்றன.

அவர் நிலத்தில் மெல்லக் குந்தி இருக்கின்றார். தேநீர்க் குவளையை நிலத்தில் வைத்துவிட்டு, பணிஸைப் பிய்த்துப் பிய்த்து, தேநீரில் தொட்டுத் தொட்டு, அவக் அவகென்று வேகமாக உண்ணுகின்றார். பின்னர் குவளையுடன் தூக்கி மடமடவென்று தேநீரைக் குடித்து முடிக்கின்றார்.

அரையில் சுற்றிக் கட்டிய சால்வைத் துண்டை அவிழ்த்தெடுத்து, முகத்தில் அரும்பி நிற்கும் வியர்வையை நன்றாகத் துடைத்து விட்டுக் கொள்ளு கின்றார். பின்பு, முன்னர்போல அதைக் கட்டிக் கொண்டு தலை குனிந்த வண்ணம் சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருக்கின்றார். மனதில் அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ! நெடுமூச்சொன்று நெஞ்சின் ஆழத்தில் இருந்து வெளியேறுகின்றது. அவர் விழிகள் லேசாகக் கலங்குகின்றன. சற்று நேரம் கழிந்து தலையைத் தூக்கி என்னை நோக்குகின்றார்.

பசிக்களை நீங்கிப்போன தெம்பு அந்த முகத்தில் தென்படுகிறது. வான்மழையில் திடீரென நனைந்த பயிர்போல, இப்போது அவரிடம் ஒரு மலர்ச்சி தெரிகிறது.

நன்றி அவர் பார்வையில் இழைகிறது.

நிலத்தில் கைகளைவைத்து ஊன்றி மெல்ல நிமிர்ந்தெழுந்து நிற்கின்றார்.

"ஆச்சி, நீங்கள் நல்லாய் இருக்கவேணும் தாயே!" வாயார வாழ்த்தி விட்டு, திரும்பி மெல்ல மெல்ல நடந்து வெளியே போகிறார்.

அப்பு படலையைத் திறந்து செல்லும்வரை நான் அவரைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றேன். கண்களில் இருந்து அவர் மறைந்த பிறகு ;அப்பு பாவம்; என நினைத்த வண்ணம் உள்ளே வருகின்றேன்.

அன்று வந்துபோன அப்பு வாரம் தவறாமல் வந்துகொண்டிருந்தார்.

அப்புவைக் கண்டுகொண்டால் எனக்கு உள்ளத்தில் ஒரே உற்சாகம்.

கல்லூரியில் தோழிகள் தங்கள் பாட்டன்மார் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

"தாத்தாவுக்கு இப்பவும் நான் நல்ல செல்லம்"

"என்ரை அப்பப்பாவுக்கு எல்லாம் நான் செய்து கொடுத்தால் தான் திருப்தி. அம்மா... மருமேள் செய்கிறதை அவர் விரும்பிறதில்லை."

"எனக்கு என்ன தேவை எண்டாலும் உடனே

தாத்தா வாங்கித் தருவார்"

"தாத்தாவுக்குச் சுகமில்லை என்றால் ஸ்கூட்டியிலை நான்தான் ஏத்திக் கொண்டு போகவேணும்"

"ஒவ்வொரு பென்ஸனுக்கும் பொக்கட்மணி ஆயிரம் ரூபா அப்பப்பா தருவார்"

அவர்கள் சொல்லச் சொல்ல, கேட்டுக் கேட்டு எனக்கு மனம் ஏங்கும்.

நான் வீட்டுக்கு வந்து அம்மாவிடம் விசாரிப்பேன்.

"என்ரை தாத்தாவும், அப்பப்பாவும் எப்ப செத்தவை.... அம்மா!"

"அது... கொப்பா என்னைக் கட்டிறதுக்கு முந்தி"

நான் சிறிது நேரம் மௌனமாக இருக்கின்றேன். பிறகு அம்மாவிடம் வினவுகிறேன்:

"அவைக்கு... இங்கவாற அப்புவின்ரை வயதிருக்குமே"

"அப்பிடித்தான் இருக்கும்"

"அப்ப... இந்த அப்பு... என்ரை தாத்தா... அப்பப்பா... மாதிரித்தானே!

"ஓமோம்..."

"அப்பு... தாத்தா... அப்பப்பா..." எனக்குள் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

அப்பு வரும் வேளையில் எல்லாம் அவரை எதிர்பார்த்திருந்து, உபசரித்து உணவு கொடுத்து, தேநீர் கொடுத்து, காசும் கொடுப்பேன்.

அப்போது எனக்குள்ள அக்கறையை அம்மா அவதானித்து வைத்திருக்கின்றா. அவ ஒருதினம் அப்பாவிடம் சொன்னா"

"பிள்ளைக்கு ஒரு பேரன் கிடைச்சிருக்கிறார்"

"நானும் அவதானித்திருக்கிறேன்"

"கிழவன் வந்தால் தன் பேரனைக் கண்டது போல பிள்ளைக்கு ஒரே கொண்டாட்டம்"

"இது உணர்வோடு சம்பந்தப்பட்ட விஷயம். தன்ரை பேரன்மாரை இந்தக் கிழவரிலே பிள்ளை காணுகின்றாள். தன்ரை மனக்குறையை ஈடுசெய்கிறாள். பிள்ளைக்கு மனமகிழ்ச்சியைக் கொடுத்தால் அது நல்லதுதானே!"

இப்படியும் சொல்லுவார், வேற மாதிரியும் கதைப்பார். இந்த அப்பா, ஒரு வித்தியாசமான ஆள். எனது மன மகிழ்ச்சிக்காகத் தான், அப்புவுக்கு நான் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளுகின்றாரோ என எனக்குள் ஒரு சந்தேகம். அப்பா சில சமயங்களில் கூறும் மாறுபட்ட கருத்துக்கள் அப்படித்தான்.

"பிச்சை குடுக்கிறது பிழையான காரியம். நாங்கள் கொடுக்கிறதாலே தான் வந்து நின்று, இரந்து கை நீட்டுகின்றார்கள். உடல் வலிமை உள்ளவன் உழைத்து வாழாமல் கையேந்திப் பிச்சை கேட்கிறான். பிச்சை எடுப்பதை ஒரு தொழிலாகச் செய்கிறார்கள். நகரப் பகுதிகளில் ஒருவன் பலரை வைத்துப் பிச்சை எடுப்பிப்பதை ஒரு தொழிலாகச் செய்விக்கிறான் எண்டது பலருக்குத் தெரியாது. பிச்சை குடுக்கிறதினாலே சமுதாயத்தைப் பிழையான வழியில் நடத்துகிறோம், கெடுக்கிறோம்"

"அப்பா... நீங்கள் சொல்லுறதிலே சில நியாயங்கள் இல்லாமலில்லை. ஆனால் வயது போன கிழடு கட்டைகள்... நோயாளர்... அங்கவீன மானவர்கள்... ஆதரவற்ற குழந்தை குட்டிக்காரர் இவர்களுக்கும் குடுக்கக் கூடாதா...?"

"பிள்ளை... உன்ரை இளகின மனம் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களுடைய நடிப்பைப் பார்த்து இரக்கம் உள்ளவர்கள் ஏமாறுகிறார்கள்."

"நடிக்கிறவர்களைப் பார்த்தால் தெரியும்... அப்பா!"

"அதுக்கு தெளிவாக அவதானிக்க வேணுமே...!"

"சண்டை முடிஞ்ச பிறகு தினமும் பலபேர் பிச்சை கேட்டு வருகினம்... வேலையில்லை... உழைப்பில்லை என்று சொல்லுகினம்"

"வேலை இல்லாதவன் எல்லாரும் பிச்சை எடுக்க ஆரம்பித்தால், இந்த நாட்டில் எத்தனை இலட்சம் பிச்சைக்காரார்கள் இருப்பார்கள்! நடந்து முடிந்த இந்தக் கொடிய யுத்தம் பலரைக் கையேந்தி நிற்க வைத்திருக்கிறது எண்டது உண்மைதான்!"

"அப்பா தெளிவாகச் சொல்லுங்கோ! பிச்சை குடுக்கிறது பிழையா?"

"எதற்கும் ஒரு யதார்த்தம் இருக்கம்மா! பசித்த வயிற்றோடு ஒருவன் இருக்க, நாங்கள் உண்டு உயிர்வாழக் கூடாதம்மா! நீ விருப்பம்போல குடுக்கிறதைக் குடு"

அப்பா கூறிய இறுதி வார்த்தைகள் காற்றில் மிதந்து சென்று, அம்மா செவியில் நுழைந்து விடுகின்றன.

"ஓ... அப்பாவும் பிள்ளையும் பாரிவள்ளல் பரம்பரையில் பிறந்து வந்தவர்கள். ஆருக்குக் குடுத்தாலும் பெரிய தொகையாகக் கொடுக்கா விட்டால் பிள்ளைக்கு மனம் திருப்திப்படாது"

"இன்றைய விலைவாசி உயர்விலே சில்லறையைத் தூக்கிக் குடுத்தால் அவையளுக்குக் காணாது... பாவந்தானே!" அப்பா என்னை நியாயப் படுத்துகிறார்..

"என்ரை அப்பா எப்போதும் என்ரை பக்கம் தான்,"

குடும்ப நிதி அமைச்சர் அம்மா. குடும்பச் செலவீனங்களைச் சமாளிக்க இயலாமல் திணறிக் கொண்டிருக்கின்றா. ஆனால் எந்தக் குறையும் அப்பா, அம்மா எனக்கு வைப்பதில்லை. அதேசமயம் எல்லாத் தேவைகளுக்கும் நான் அம்மாவிடம் போய் நிற்பதில்லை. சந்தர்ப்பம் அறிந்து அப்பாவை

மெதுவாக அணுகுவேன்.

ஒரு நாள் அப்பாவை மெல்லக் கேட்டேன்;

"அப்பா, நான் ஒன்று கேட்பன் கோவிக்கக் கூடாது!

"உன்னட்டைதான் என்ரை கோபம் எடுபடாதே!"

"அப்ப... சொல்லட்டுமா"

"சொல்லம்மா!"

"எனக்கொரு வேட்டி வேணும்"

"ஹா...ஹா... ஆண்களின் உடைகள் எல்லாம் பெண்கள் அணியத் தொடங்கிவிட்டியள். வேட்டி ஒன்று தான் மிச்சம் என்றிருந்தேன், கடைசியில் அதையும் விடமாட்டியள் போல... மலையாளப் பெண்கள் வேட்டி கட்டுகிறார்கள். தேவையென்றால் என்ரை வேட்டியிலை ஒன்றை எடனம்மா!"

"ஹ்ம்... போங்கப்பா! விளங்காதது மாதிரி நீங்கள் பகிடி விடுகிறியள்!" நான் சிணுங்குகின்றேன்.

"சரி...சரி...உன்ரை அப்புவுக்கு ஒரு வேட்டி வேணும் அப்பிடித்தானே...! நான் வாங்கித்தாறன்"

அப்பா சொன்னால் சொன்னது தான், பிறகு மாறமாட்டார். சொன்னபடி நடப்பார்.

மறுதினம் வேட்டியுடன் வீடு வந்து சேர்ந்தார். சிவப்புக்கரை போட்ட நான்குமுழ வேட்டி, நான் ஆவலுடன் கையில் எடுத்துப் பார்க்கிறேன். என்ன ஆச்சரியம் சிவப்புக்கரை சால்வையும், வேட்டியும் சேர்த்து வாங்கி வந்திருக்கிறார். எனக்குத் தெரியும் அப்பா எல்லாவற்றையும் கூர்ந்து அவதானித்து காரியமாற்றுகின்ற ஒருவர்.

அடுத்த வாரம் அப்பு வழமைபோல வந்தார்.

எப்போதும் கட்டுகிற கிழிந்த வேட்டியை அரையில் கட்டியிருக்கிறார்.

என்றும்போல அவரை உபசரித்து அவருக்கு கொடுக்கிறவைகளை எல்லாம் கொடுக்கிறேன்.

அப்பு, வீட்டுக்கு வந்தால் முன்னர்போல விரைவில் எழுந்து போய்விடுவதில்லை. ஆற அமர இருந்து, "பிளை...பிள்ளை" என்று அன்பாக அழைத்து என்னோடு பேசிக் கொண்டிருப்பார். அப்பா, அம்மாவின் சுகநலங்களை உரிமையுடன் விசாரிப்பார். எனது படிப்புப் பற்றி அக்கறையுடன் கேட்பார். பிறகு சாவகாச மாக எழுந்து செல்வார்.

இன்றும் அப்படித்தான் நீண்ட நேரம் இருந்து பேசினார். பிறகு புறப்படத் தயாராகும் சமயம் பார்த்து, நான் எழுந்து சென்று புதிய வேட்டி, சால்வையைக் கொண்டுவந்து அவர் கைகளில் கொடுக்கிறேன்.

அவருக்கு தன் கண்களை நம்ப முடியவில்லை. நடப்பது கனவா? நனவா? எனத் தடுமாறுகின்றார். சில நிமிடங்களின் பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, வியப்புடன் என்னை விழித்து நோக்குகிறார். அவர் உணர்ச்சி வசப்பட்டு நிற்கிறார் என்பது விளங்குகிறது. வாய் திறந்து பேச முடியவில்லை. விழிகள் நிறைகின்றன. சிறிது நேரம் கழித்து, விழிகளைத் துடைத்து விடுகின்றார். புதிய வேட்டி, சால்வையை நெஞ்சோடு அணைத்துக் கொள்ளுகின்றார். வார்த்தைகள் தட்டுத்தடுமாறி அடித் தொண்டையில் இருந்து மெல்ல எழ, "போயிட்டு வாறன் பிள்ளை" எனக் கூறியவாறு நடக்கின்றார்.

அடுத்த வாரம் அவர் வருகையை என்றும் போல ஆவலோடு நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

நான் எதிர்பார்த்ததுபோல அப்பு வந்தார். புது வேட்டிகட்டி, சால்வையை அதன்மேல் சுற்றி, நெற்றியில் திருநீறு பூசி, நடுவே சந்தனத் திலகம் இட்டிருந்தார். அப்புவில் புதுப்பொலிவு; புதிய கம்பீரம்.



அப்புவைப் பார்க்க எனக்கு மனதில் பெரிய ஆனந்தம். அவர் நீண்ட நேரமாக ஆறுதலாக அமர்ந்திருந்து என்னோடு உரையாடுகின்றார். பின்னர் புறப்பட்டுச் செல்வதற்குத் தயாராகுகையில் என்னைப் பார்த்து மனத் திருப்தியுடன் கூறுகின்றார்;

"நான் இனிச் செத்துப் போகலாம், அம்மா!"

"ஏன் அப்படிச் சொல்லுறியள் அப்பு?" நான் கவலையுடன் வினவுகின்றேன்.

"எனக்கு எல்லாம் நிறைவாப் போச்சு. என்ரை பேத்தி எனக்குப் புது உடுப்பும் வாங்கித் தந்துவிட்டா இனி எனக்கென்ன வேணும்! இந்த மன நிறைவோடை நான் போய்விட வேணும்"

"அப்பு அப்படிச் சொல்ல வேண்டாம்! இன்னும் கனகாலம் நீங்கள் இருக்கவேணும்"

அப்பு வாய்திறந்து எதுவும் பேசவில்லை.

அவர் மெல்ல எழுந்து நிற்கிறார்.

திறந்த விழிகள் இமைக்காது சிறிது நேரம் அன்பொழுக என்னை நோக்குகின்றன. திடீரென அந்த விழிகள் பெருகி, உடைப்பெடுத்து வடிந்து, தாடியை நனைத்து நெஞ்சில் சொட்டுகிறது.

அப்பு தன்னைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள இயலாது தவிக்கின்றார்.

அவர் மௌனமாகத் தலைகுனிந்து மெல்லப் போய்க் கொண்டிருக்கின்றார்.

அப்பு சொன்ன வார்த்தைகள், அவர் நடவடிக்கைகள் எல்லாம் எனக்கு உள்ளத்தைப் போட்டு உறுத்துகிறது. அப்புவை அடுத்த வாரம் நான் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன். அப்பு வர வில்லை...

அப்பு ஏன் வரவில்லை? அடுத்த வாரம்... அடுத்த வாரம்... அடுத்த வாரம்... அப்பு வரவே இல்லை.

பிச்சை கேட்டு வருகின்றவர்கள் தினமும் வந்து கொண்டு இருக்கின்றார்கள்.

"அம்மா... பிச்சை போடுங்கோ!"

எனக்குக் குரல் கேட்பதுதான் தாமதம், நான் படலைக்கு ஓடிப்போய் விடுகின்றேன். வருகின்றவர்கள் ஒவ்வொருவரிடமும் தவறாமல் நான் விசாரித்துக் கொண்டிருக்கின்றேன்.

"உங்களுக்கு அப்புவைத் தெரியுமா?"

"எந்த அப்பு...? என்ன பேர்...? எங்கே இருக்கிறவர்?

அவர்கள் என்னிடம் இவ்வாறு திருப்பிக் கேட்கிறார்கள். நான் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. என்னிடம் பதில் இல்லை. நான் எதுவும் சொல்ல இயலாது திணறிப் போகின்றேன்.

பிச்சை என்று வருகின்றவர்கள் யாருமே தங்கள் சொந்த ஊர், பெயர் கூற விரும்புவதில்லை. நான் யாரிடமும் விசாரிப்பதில்லை. அப்பு பற்றியும் தெளிவாக எதுவும் நான் அறிந்து வைத்திருக்கவில்லை.

ஆனால் நான் மனம் சோர்ந்து விடவில்லை. எனக்கு மனதில் அசையாத ஒரு நம்பிக்கை. விசாரித்து எப்படியும் அப்பு பற்றி அறியத்தான் போகிறேன்.

"ஆச்சி... பிச்சை போடுங்கோ...!"

குரல் கேட்டு நான் படலைக்கு ஓடி வருகின்றேன்.

ஒரு கிழவி நிக்கிறா,. தடி ஒன்றை நிலத்தில் ஊன்றிக்கொண்டு நிற்கிறா. நெட்டையான உருவம். கறுப்பு நிறம், தடித்த நீலநிறச்சீலை உடுத்தி, முந்தானையைத் தூக்கி மார்புக்கு குறுக்குக் கட்டாக கட்டி இருக்கிறா. கூந்தலை இரண்டாகப் பிரித்து பழைய கொண்டை ஒன்று போட்டிருக்கிறா.

நான் கையோடு கொண்டு சென்ற காசை முதலில் கிழவி கையில் கொடுக்கின்றேன். அதன் பிறகு விசாரிக்கின்றேன்.;

"அப்புவைத் தெரியுமா?"

"ஆற்ரை அப்பு?"

இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்ல.முடியும்! "என்ரை அப்பு" என்று சொல்லலாமா? இப்படிச் சொன்னால் இந்தக் கிழவிக்கு விளங்கவா போகிறது?

எனக்கு நா எழவில்லை, மௌனமாக விழித்துக் கொண்டு நிற்கின்றேன்.

"பேரைச் சொல்லன்...ஊரைச் சொல்லன்... சொன்னால்தானே... நாச்சியார் தெரியும்!"

கிழவி பொல்லாத வாயாடியாக இருக்க வேண்டும். நான் எச்சரிக்கையாகின்றேன். "இஞ்சை வாற அப்பு" என்கின்றேன் சுருக்கமாக.

"இஞ்சை வாற அப்புவோ....? ஆ...ஆ... அட...ட... கலிகையில் கந்தண்ணனையே... நாச்சியார் கேட்கிறாய்...! அவர் செத்து தாட்ட இடத்திலே புல்லும் முளைச்சிருக்கும்"

எனக்கு உள்ளம் அதிருகிறது. ஒருகணம் நிலை குலைந்து போகிறேன்.

அடுத்த கணம் என்னைச் சுதாகரித்துக் கொள்கிறேன். "இந்தக் கிழவி யாரோ ஒரு கிழவன் செத்துப்போன சங்கதியைச் சொல்லுகிறா. அது என்ரை அப்புவாக இருக்க இயலாது" என மனதைத் தேற்றிக் கொள்கிறேன்.

கிழவி அந்தத் தகவலுடன் நிறுத்திக் கொள்ளவில்லை, தொடர்ந்து சொல்கிறா:

"ஒரு மோட்டைச் சயிக்கிள்காறன் கந்தண்ணனை இடிச்சுப்போட்டு நில்லாமல் ஓடிப் போவிட்டான். அவர் அந்த இடத்திலேயே விழுந்து செத்துப்போனார்... நாச்சியார்! கேள்விப்பட்டு நானும் போய்ப் பாத்தனான். என்னமாதிரி றோட்டுக் கரையிலை கிடந்தார் தெரியுமே! சிவப்புக்குறி போட்ட புது வேட்டி சால்வை கட்டிக் கொண்டு... நெத்தியிலை திருநீறு சந்தனம் ... மாப்பிள்ளை மாதிரி!

"ஐயோ... அம்மா... அம்மா... அப்பு செத்துப்போனார்; என்ரை அப்பு... என்ரை பேரன்... செத்துப்போனாரம்மா!"

நான் கதறிக் கதறி அழுகின்றேன்.

அம்மா பதறிக்கொண்டு ஓடி வருகின்றா.

"அழாதை பிள்ளை... அழாதை பிள்ளை..." மெல்ல ஆதரவாக என்னை அணைக்கின்றா.

நான் அடக்கமுடியாமல் தொடர்ந்து குமுறிக் கண்ணீர் வடித்துக் கொண்டு நிற்கின்றேன்.

"அழாதை பிள்ளை... அழாதை ..."

ஆறுதல் கூறும் அம்மாவின் விழிகளும் கலங்கிக் கசிகின்றன.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# கதைகள் தான் சொல்கிறேன்

9



தங்கத்தை தள்ளிச் சென்று வங்கி வாசலை விட்டு வெளியேற்றிய பாதுகாப்பு நிலை பணத்துடனும் பலப்பரீட்சை செய்ய ஆரம்பித்தது. வங்கியின் பாது காப்பு மேலும் மேலும் கேள்விக்குறியாகியது. பாது காப்பு அச்சுறுத்தல் பல்வேறு கோணங்களில் தோற்றங் காட்டியது.

வங்கியில் பாதுகாவலர்களாக நியமிக்கப் பட்டிருந்தோர் இங்கிருக்க மறுத்தனர். பிரதேசங்கள் தோறுமிருந்த காவல் நிலையங்கள் ஒவ்வொன்றாக அகற்றப்பட்டன. கொள்ளைகள் புதிய புதிய வழிகளில் வந்து கதவைத் திறந்தன. வங்கியில் நகைகளை வைத்திருப்பது மட்டுமல்ல பணப்பரிமாற்றம் செய்வதும் இயலாததாகியது. அதனால் இலத்திரனியல் பணப் பரிமாற்றம் நடைபெற்றதென எண்ணிவிடாதீர்கள். குப்பி விளக்கெரிக்கக் கூட இயலாது தவித்த காலத்தில் மின்சாரமாவது இலத்திரனியலாவது.

நடைமுறைக் கணக்கு வைத்திருப்போர் காசோலையைப் பணத்திற்குப் பதிலாக வழங்கலாம். நிலையான வைப்பு, சேமிப்பு போன்ற கணக்குகளை வைத்திருக்கும் ஒருவர் பணம் பெற வந்தால் அவருக்கு வங்கிக் கட்டளையை வழங்கினார்கள். வங்கிக் கட்டளை என்பது வங்கியால் எழுதப்படும் காசோலை. இது பற்றி தொடரின் முற்பகுதியில் ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளது.

காசோலைகளையும் வங்கிக்கட்டளை களையும் நடைமுறைக் கணக்கிலிட்டு தாம் செலவு செய்யும் தொகைக்கு காசோலை எழுதிக் கொடுக்கும் பழக்கம் நம்மிடையே இன்று கூட ஏற்படவில்லை. இதனால் அவற்றைப் பணமாக மாற்றி செலவு செய்ய வேண்டிய அவசியம் அவர்களுக்கிருந்தது.

பணத்தைப் பெறக் கூடிய இடங்களாக வர்த்தக நிலையங்களே இருந்தன. மக்கள் காசோலை களையும் வங்கிக் கட்டளைகளையும் கொண்டு அவற்றைப் பணமாக்குவதற்காக கடை கடையாக ஏறி இறங்க வேண்டியிருந்தது. காசோலைகளை எடுத்துக் கொண்டு பணம் கொடுக்க ஒப்புக்கொள்ளும் கடைக்காரர் கூறிய விலைக்கு அவர்கள் பொருட்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப் பட்டனர். பணத்தை பெற பல நாட்கள் அலைய வேண்டியுமிருந்தது. தரகுக் கூலிக்கு காசோலை மாற்றிப் பணம் சம்பாதிக்கவும் பலர் தொடங்கினர்.

மக்களின் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழியைக் கண்டறிய வேண்டிய கட்டாயத்திலிருந்த வங்கி, மாற்று வழியொன்றைத் தேர்ந்தெடுத்தது.

பாதகாப்பு உள்ள இடத்திற்குச் சென்று பணக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய வங்கி தீர்மானித்தது. அப்போது யாழ்.கோட்டையில் காவல் நிலையம் இயங்கிக் கொண்டிருந்தது. மிகுந்த பாது காப்பு உள்ள இடமாக அது இருந்தது. வங்கி அங்கு வைத்து பணப்பரிமாற்றல் சேவையை மட்டும் வழங்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்தது. குடாநாட்டின் எல்லாக் கிளைகளின் வாடிக்கையாளர்களும் ஒரே இடத்திலே தான் பணக்கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய வேண்டும்.

கணக்குப் பதிவுகளுள்ள பேரேடுகள் முதலிய அனைத்தும் அவ்வவ் கிளைகளிலேயே இருந்தன. இதனால் வங்கிக் கணக்கிலிருந்து பணம் பெறுவதற்கு வரும் ஒருவர் முதல் நாள் கிளைக்குச் சென்று பணம் பெறுவதற்கான படிவத்தைப் பூரணப்படுத்தி வங்கி உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டும். அவர் தேவையான பரிசீலனைகளைச் செய்து, வேண்டிய

பதிவுகளை மேற்கொண்ட பின் அதன் விபரங் கொண்ட சிட்டையொன்றைக் கொடுத்து மறு நாள் கோட்டையில் இயங்கிய வங்கிப் பணியகத்திற்கு வருமாறு வேண்டுவார். வாடிக்கையாளர் மறுநாள் அங்கு சென்று பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதே போல் அங்கு பணத்தை தனது கணக்கில் வரவு வைப்போர் மறுநாள் வங்கிக் கிளைக்குச் சென்று தனது பற்றுவரவுப் புத்தகத்தில் பதிவுகளைச் செய்ய வேண்டும். இரு நாட்கள் அலைவதுடன் பாதுகாப்பு கெடுபிடிகளையும் எதிர்கொள்ள நேரும்.

வர்த்தக நிலையங்களில் பெருமுயற்சி செய்து காசோலைகளைக் கொடுத்து விட்டு, வர்த்தகர் தமது தேவைகளுக்கு அப்பணத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்க பலநாட்கள் பணத்திற்காக அலைவதை விட இது பரவாயில்லை எனப் பலர் எண்ணினர். ஆனால் அலுவலகங்களில் பணிபுரிவோர், வயோதிபர், நோயாளிகள் போன்ற இரு நாட்கள் அலைய இயலாதோர் இம்முறையில் பணத்தை மீளப்பெறுவது கஷ்டமெனக்கருதி வங்கிக் கட்டளையை தருமாறு கோரிப் பெற்றுக் கொண்டனர். இவர்களது வங்கிக் கட்டளைகளை மாற்றிக் கொடுத்து சம்மதிப்போரும் தொடர்ந்து பயனடைந்தனர்.

இந்த நடைமுறையிருந்த காலகட்டத்தில் கோட்டையிலிருந்த பணியகத்தில் வைத்தே அடகு நகைகளையும் மீளக் கொடுத்து வந்தனர்.

இந்திய அமைதிப்படை இங்கு வந்த போது இயல்பு நிலை மீண்டு விட்டதாகக் கருதி பணப் பரிமாற்றம் கிளைகளில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நகைகள் கிளைகளுக்கு கொண்டு வரப்படவில்லை. ஒரு சிறிய இடைவேளையின் பின்னர் போர் மேகம் அதிகம் சூல் கொண்டதாக மாறியது. ஒரு பெரும் போரில் சின்னாபின்னப்பட்டு வங்கி மீண்டும் தலை யெடுத்து இந்திய அமைதிப் படையின் பாதுகாவலுடன் இயங்கினாலும் இயல்புநிலை எட்ட இயலவில்லை. நகைகள் முன்பு போன்றே கொடுக்கப்பட்டன. பணத்தை வழமை போல வங்கியில் வைப்புச் செய்யவும் மீளப்பெறவும் இயன்றதால் வாடிக்கையாளர் சிரமப்பட வேண்டியிருக்கவில்லை. அந்த நிலை படிப்படியாக மேம்படும் என்று எதிர்பார்த்தது வீணாகிப்போனது.

இந்திய அமைதிப்படை இங்கிருந்து சென்ற சிறிது காலத்தில் போர் உக்கிரமானது. யாழ்.கோட்டை யிலிருந்த பணியகத்திற்கு திடீரெனப் போகமுடியாத நிலை ஏற்பட்டது. அங்கே வங்கியின் சில பொருட் களுடன் அடகு வைத்தவர்கள் வந்து பெற்றுக் கொள்ளாத சில நகைகளும் அகப்பட்டு விட்டன. அங்கு வங்கி ஊழியர் எவருமிருக்கவில்லை.

யாழ்.கோட்டை முற்றுகையும் அது பற்றிக் கூறப்பட்ட விதவிதமான கதைகளும் பலருக்கும் நினை விருக்கும். ஒரு நாள் கோட்டைக்குள் எவருமில்லை யென்ற நிலையேற்பட்டது. அந்த நகைகள் கிடைக்காது என்றே ஊகம் நிலவியது.

எனது ஓரிரு சிறுகதைகள் அடகு நகை மீளப் பெற முடியாததை கருவாகக் கொண்டு உருவாக்கப் பட்டிருந்தன. சகோதர இனத்தவராக எனது சக பணியாளர் ஒருவர் அவற்றை வாசித்திருந்தார். அவருக்குத் தமிழ் நன்கு தெரியும். ஒருநாள்(1997இல் என்று நினைக்கிறேன்) அவர் என்னிடம் வந்து யாழ் கோட்டைக்குள் வங்கி வைத்திருந்த அடகு நகை களைக் கொண்டு வந்து உரியவர்களிடம் கொடுத்து விட்டோம். அதைப்பற்றி ஒரு கதை எழுதுவீர்களா? எனக் கேட்டார். உண்மையிலேயே ஒரு கதையை எழுத ஆரம்பித்தேன். அரைகுறையில் நின்றுவிட்ட எனது கதைகளுள் அதுவும் ஒன்றாகிப்போனது. ஆனால் கோட்டைக்குள்ளிருந்து வெளியேறிய படையினரின் விசுவாசமும் அர்ப்பணிப்பும் பற்றிக் குறிப்பிட்டு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எழுத வேண்டும் என நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. அந்தச் சிக்கலான வேளையிலும் வங்கிக்குரிய பொருட் களையும் பாதுகாப்பாக எடுத்துச் சென்று வங்கியிடம் ஒப்படைத்திருக்கிறார்களே.

கோட்டைக்குள்ளிருந்த வங்கிப் பணியகம் மட்டுமல்ல சில கிளைகள் கூட மாலையில் வேலை முடிந்து பூட்டிவிட்டுச் சென்ற பின் மறுநாள் காலை அங்கு கால்வைக்கவே இயலாத நிலை ஏற்பட்டு ஆவணங்கள் எதனையும் எடுக்க முடியாது போனமையும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

ஒரு வங்கியைச் சூழ வாழ்பவர்களே அதில் வாடிக்கையாளராக இருப்பார்கள். இரவோடிரவாக அல்லது அதிகாலையில் நடைபெறும் போரின் காரணமாக ஒரு வங்கி இருக்குமிடத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டால் அதைச் சூழ வாழ்ந்தோரும் கையில் அகப்பட்ட பொருட்களுடன் இடம் பெயர்ந் திருப்பார்கள். இதனால் வங்கிக் கணக்கு விபரங் கொண்ட பற்றுவரவுப் புத்தகம், பற்றுச்சீட்டு போன்ற வற்றை அவர்களும் விட்டுவிட்டு வந்துவிடுவார்கள். இதனால் அவர்களது கணக்கு விபரங்களை உருவாக்கி மீதிகளைக் கண்டறிய வங்கியும் வாடிக்கையாளரும் மிகுந்த சிரமப்பட்டனர். பல படிவங்களைப் பூரணப்படுத்தி அங்குமிங்கும் அலைந்தும் தாம் சேர்த்து வைத்த பணத்தை பெற்றுக் கொள்ள முடியாது அலைந்தனர். இவ்வாறு அலைந்து தொல்லைப்படுவது தொடர்கதையாக நீண்டது.

# பேசும் இதயங்கள்

1) பூரண சினிமா விமர்சகர், ஆய்வாளர் அபூர்வன்

வடமராட்சி மண்ணில் முளைவிட்டு கலை இலக்கிய விருட்சமாக எட்டுத்திக்கும் கிளைபரப்பும் ஜீவநதிக்கு எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துகள்.

பேசும் இதயங்கள் பகுதியில் எனது இதயம் பல்துறை இலக்கியவாதி, ஆய்வாளர், அபூர்வனைப்பற்றி பேசுகின்றது. இவர் திரைப்படத்துறையின் பல்வேறுபட்ட புலங்களை, பலதளங்களில் நின்று ஆராய்ந்து வருவது அனைவரும் அறிந்ததே... நான் மார்கழி 2012, ஜீவநதியில் பிரசுரமான "தமிழ்திரைப்படங்களில் கலை இயக்குனரின் வகிபாகம்" என்ற கட்டுரையை பற்றி பேச முனைகின்றேன்.

நான் ஒரு சித்திரமும் வடிவமைப்புத்துறை பட்டதாரி(BFA in Art Design). ஒரு திரைப்படத்தையோ அல்லது ஒரு நிகழ்ச்சியையோ நோக்கும் போது, நிகழ்வின் நாயகர்களை விட பின்னணியில் காணப்படும் கலைவெளிப்பாடுகளையே அதிகம் புலக்காட்சி கொள்வது வழமை. புலக்காட்சி கொள்ளலும் அதனை கிரகித்தலும் எனது நிலைமையாக இருக்கின்றது. ஆனால் அபூர்வனோ இக்கட்டுரையில் கலை இயக்க விடயங்களிற்கு ஒர் இரசிகனாக மட்டும் நின்று விடாது அதில் உள்ள குறைநிறைகளை நுணுகி ஆராய்ந்த விடயங்கள் என்னை பிரமிப்புக்குள்ளாக்குகின்றது. அன்று எனது இளமானிப்பட்டப்படிப்பின் போது எனது நண்பர் சி.மதிரூபன் திரைப்படத்துறையில் சித்திரமும் வடிவமைப்புத் துறையின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார். அந்நேரத்தில் அவருக்கு கிடைத்த உசாத்துணைகளை விட இன்று வெளிவந்திருக்கும் இக்கட்டுரை ஒரு சிறப்பான உசாத்துணையாக அமைந்திருக்கும் என்பது உண்மை. திரைப்படக்கலையில் இயக்கம். நடிப்பு, சண்டை, கலை இயக்கம் போன்ற பல பரிமாணங்களை ஆராயும் அபூர்வனிடமிருந்து, சினிமாவில் இசை, சினிமாவில்நடனம், சினிமாவில் ஒளிப்பதிவு போன்ற ஆய்வுநிலைமையும் எதிர்பார்த்து... அபூர்வனையும், இவர்போன்ற பல்துறைக் கலைஞர்களையும் புடம் போடும் ஜீவநதியையும் வாழ்த்தி விடைகொள்கின்றேன்.

– பா.பாஸ்கர் (ஆசிரியர், கிளி/கண்டாவளை ம.வி)

# கலை இலக்கிய நிகழ்வுகள்

1) **வி. ரி. இளங்கோவன் அவர்களின் நான்கு புதிய நூல்களின் வெளியீடு..!**

gpரான்ஸ் நாட்டில் வதியும் மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் அவர்களின் புதிய நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வு, 01 – 12 – 2012 சனிக்கிழமை மாலை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. இப்படியுமா..? (சிறுகதைத் தொகுதி) அழியாத தடங்கள் (கட்டுரைகள்) தமிழர் மருத்துவம் அழிந்துவிடுமா..?, "இளங்கோவன் கதைகள்" நூலின் இந்தி மொழிபெயர்ப்பு ஆகிய நூல்களே வெளியிடப்பட்டன. இலங்கையில் மூத்த பெண் பத்திரிகையாளரும், எழுத்தாளருமான அன்னலட்சுமி இராசதுரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைச்செயலாளர் ப. க. மகாதேவா தமிழ் வாழ்த்துப் பாடினார். "தினக்குரல்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம், எழுத்தாளர் தம்பிஐயா தேவதாஸ், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் சிறிதர்சிங், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி. பாஸ்கரா ஆகியோர் கருத்துரை வழங்கினர்."யாத்ரா" ஆசிரியர் அஸ்ரப் சிகாப்தீன், "ஞானம்" ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், தொழிற்சங்கப் பிரமுகர் எம். ஏ. சி. இக்பால், கவிஞர் தில்லை முகிலன், கவிஞர் மேமன்கவி ஆகியோர் நூல்கள் குறித்து ஆய்வுரை வழங்கினர்."இலக்கியப் புரவலர்" காசிம் உமர் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் வி. ரி. இளங்கோவன் ஏற்புரை வழங்கினார். கடந்த மார்ச் மாதமும் "மண் மறவா மனிதர்கள்" என்ற நூலினை வி. ரி. இளங்கோவன் இங்கு வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சந்தா முடிவுற்றவர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

# Lanka Guest house



30, பரமேஸ்வரா வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0771242732

30,Paremashwera Lane,
Thirunelveli, Jaffna.
T.P. No: 077 1242732


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.